ஓம் பரப்பிரம்மணே நம

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான
விகடமும், அநுபவ விநோத நீதிகளும் நிறைந்த
உயரிய செந்தமிழ் மாதப் பத்திரிகை.

ஒவ்வோரு மாத ஸஞ்சிகையும் 80-பக்கங்களுள்ளது.

AMIRTHA GUNABODHINI

(The largest circulated High Class Tamil monthly.)

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ்.ஜி. இராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா நுபாய் ஒன்றே. வேளிநாடு நுபாய் 1-8-0.

ஐந்தாவது கமலம்

Vol—5

April 1930—March 1931.

பிரமோதூத வருஷ வால்யம்

சித்திரைமீ முதல் பங்குனிமீ வரையில்.

(816-பக்கங்கள் கோண்டது.)

"All our Knowledge is based upon Experience,"—Vivekananda.

"நம்முடைய ஸகல அறிவும் அநுபவத்தையே சார்ந்து நிற்கிறது."

தி. இராஜகோபால் முதலியார்,

"அமிர்த குணபோதினி" ஆபீஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

 1931. [காலிகோ பைண்டு ரூ. 1-6-0.

பைண்டு செய்த 1, 2, 3, 4, 5-வால்யங்கள் தனித்தனி விலை ரூ. 1-6-0.

அமிர்த குணபோதினி

ஐந்தாவது கமலத்தின் விஷய அட்டவணை.

☞ அடியிற்கண்ட இலக்கங்கள் பக்கங்களைக் காட்டுகின்றன.

☞ இன்னும் இந்த அட்டவணையில் அடங்கப்பெறாத எத்தனையோ அநுபவக் குறிப்புகளைப் பக்கங்களுக்கு இடையிடையே அழகிய வளைவுக்குள் காணலாம். அன்றியும், பிரதி பக்கங்கள் தோறும் அடிக் குறிப்புகளாக எண்ணற்ற அநுபவ ஞானங்களையும், லோக ரகசியங்களையும் உதகரித்துள்ளோம். அவற்றையெல்லாம் அவ்வவ்விடங்களில் வாசித்துணர்ந்து, இதுபோன்ற அரிய விஷயங்கள் அடங்கியதாய்ப் பிரசுரிக்கப் பெற்றுவரும் "அமிர்த குணபோதினி"யை என்றென்றும் ஆதரித்து அபிவிர்த்தி செய்யுமாறு பிரார்த்திக்கின்றோம்.

மூளைக்கு விருந்து:—

689-பக்கத்தின் வினாக்களுக்கு விடுவிப்பு:—

(1) ஒரு கண் நுங்குடைய காய்கள் 3. அதில் நுங்குகள் 3.

இரண்டு நுங்குடைய காய்கள் 4. அதில் நுங்குகள் 8.

மூன்று கண் நுங்குடைய காய்கள் 3. அதில் நுங்குகள் 9. ஆக காய்கள் 10. நுங்குகள் 20.

(2) கவர். (3) 371-முத்துக்கள். (4) 1, 2, 4, 8, 16, 32, 64 128, 256, 489-வீதம் 10-பைகளுள் போட்டுக் கட்டவேண்டும்.

☞ 416-ம் பக்கத்தில் "பட்டப்பகலில்" என்பதற்கும், 540-பக்கத்தில் "என்ன—எதற்காக—ஏனோ?" என்பதற்குமுள்ள விடை சுலபமாய் இருப்பினும் சிலர் காமச்சார்பில் அதைக் கருதுகின்றனர். அது பிழை. அக்கு திடுக்கு பால் குடிக்கும் குழந்தைதான்.

ஓம் பரப்பிரம்மணே நம :

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆனந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலாவிலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

COPY RIGHT] [REGISTERED

கமலம்-5.	சென்னை : பிரமோதூதஹு சித்திரைமீ 1௳	இதழ் 49.
Vol. 5.	1930-ம்ஹு ஏப்ரல்மீ 13௳	No. 49.

ஆனந்த தரிசனம்

முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மாந்தர்காள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாம்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுவ தெங்ஙனே ?

"கணாத்யக்ஷாய நம :" ஸகல தேவ கணங்களுக்கும் தலைவராயிருக்கும் விநாயகரது திவ்ய கமலங்களை நமஸ்கரிக்கக் கடவோம். சென்ற நான்கு வருஷங்களாக நமது "அமிர்த குணபோதினி"ப் பத்திரிகையை இடையூறின்றி நடைபெறச் செய்த கணநாதன் இப்புதிய ஐந்தாவது ஆண்டிலும், அதற்குப் பிறகும், என்றும் இப்பத்திரிகை தழைத்தோங்கி உலாவும்படி அருள் செய்யவேண்டி அம்மூர்த்தியை அநுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

ஃ

"பகவத்தியானமே பரமசாதனம்" பகவானைத் தியானிக்கும்பொழுது ஒரு மூர்த்தியிடம் பிரீதியும், ஒரு மூர்த்தியிடம் அப்பிரீதியும் கொள்வது அறியாமையாகும். பகவான் தம்மை எப்படி எப்படிப் பாவித்து உபாஸகர்கள் பூஜிக்கிறார்களோ அப்படியப்படி யெல்லாம் அவர்கட்குத் தோன்றுகிறார். இதை எத்தனை முறை பகவத்கீதையிற் படித்தாலும், பாகவதாதி புராணங்களில் வாசித்தாலும், பெரியோர்களாகிய பிறர் சொல்லக் கேட்டாலும் ஸந்தேகம் தீருகிறதில்லை. இதற்குக் காரணம் பேத புத்தியும், அந்தப் புத்தியை

யுடையவர்களின் ஸகவாஸமும், அவற்றால் ஜனிக்கும் சந்தேக விபரீதங்களுமே. எனினும், தங்களின் வழிபடு கடவுளைத் தியானித்து அம்மட்டில் நின்றுகொண்டு மற்ற மூர்த்திகளைத் தாழ்வாய்ப் பாவியாமலாவது இருக்கவேண்டும். ஒரு பதிவிரதை தன் மனதில் ஸதா தன் பர்த்தாவையே தியானித்திருந்தபோதிலும், சுற்றிலுமுள்ள மாமனார் மாமியார் முதலியவர்களைத் தாழ்வாக நினைப்பதில்லை. அதுபோன்ற தன்மையிலாவது இருந்து பகவானை வணங்கித் தியானிக்கக்கடவோம்.

ஃ

"அபேத ஞானம்" பகல் இரவு என்ற பேதம் பிறவிக்குருடனுக்கில்லை. அந்தகன் பகலைக் கண்டு ஆநந்த மடைவதும், இரவைக் கண்டு இன்னல் கொள்வதும் வழக்கமில்லை. அவனுக்கு இரண்டு காலங்களும் ஒன்றுபோலத்தான். இதைப்போல் அந்தர் திருஷ்டியால் ஆத்மாவைக் கண்டவர்க்கு ஸகல வஸ்துக்களும் பிரம்ம ஸ்வரூபமாகவே தோன்றும். அவர்கட்குப் பேதம் கிடையாது. அஞ்ஞானிகளாகிய மற்றவர்கட்குப் பேதபுத்தியும், ஸந்தேக விபரீதங்களும் தோன்றிக்கொண்டே யிருக்கும். இதுதான் மாயையின் காரியம். உலகத்தில் எங்கும் இரண்டிரண்டாய்ப் படைக்கப்பட்டிருக்கிறது. கைகள், கண்கள், மூக்குத்துவாரங்கள், மேல்வாய் கீழ்வாய், கால்கள், செவிகள் ஆகிய இவைகள் இரண்டிரண்டா யிருக்கின்றன. இவை பேத புத்தியை விர்த்திசெய்கின்றன. இரண்டு எனும் ஞானம் ஏற்பட்ட க்ஷணமே உயர்வு, தாழ்வு என்ற வியவகாரம் உண்டாகிறது. ஒரு மனைவியுடன் வாழ்ந்தபோது எவ்வித பேதமுமில்லை. புத்திரசந்தானமில்லை யென்று இன்னொரு நங்கையை மணமுடித்தும் இளையவள் மூத்தவள் என்ற வித்தியாஸம் ஏற்பட்டுவிடுகிறது. பெற்ற தாய்க்குக்கூட இரண்டு பிள்ளைகளிருந்தால் ஒருவனை வலது கண்ணையும், மற்றொருவனை இடது கண்ணையும் பாவித்து ஏற்றக்குறைச்சலான அன்பைக் காட்டுகிறாள். நேத்திரமானது ஸர்வ இந்திரியங்களினும் பிரதானமாயிருந்தும் ஒன்றற்கொன்று உயர்வு தாழ்வாய் மதிக்கப்படுகிறது. வலக்கண் உயர்வாம், இடக்கண் தாழ்வாம். இதென்ன ஆச்சரியம்! கைகளை எடுத்துக் கொள்வோம். வலக்கை போஜனத்துக்கும் இடக்கை சௌசத்துக்கும் உபயோகப்படுகின்றன. இந்தப் பேதத்தைக் கற்பித்தது யார்? கீழ்த்தரமானதாகிய பாதங்களிலுங் கூட வித்யாஸமுண்டு. கிரகப்பிரவேச காலத்தில் வலது காலை யெடுத்து முன்வைக்க வேண்டும். இடது காலுக்குப் பின்னாலேதான் போலும்! பரமேச்வரனுக்குக்கூட இந்தப் பேத புத்தியைவிட இஷ்டமில்லையோ என்னவோ! அவர் வலப்பக்கத்தில் உமைக்கு இடம் கொடாமல் இடப்பக்கத்தையன்றோ வைத்தார். ஆகவே, அபேத ஞானம் உண்டாவது வெகு அருமையே போலும்!

ஃ

"அகம் பிரம்மோஸ்மி" நானே பிரம்மமா யிருக்கிறேன் என்ற ஞானமுடையோர் முக்தர்களாவர். நான் அவ்வித ஞானத்தை யடைந்தவனல்ல. மாயையில் அகப்பட்டு உலக சுகமே பெரிதென்று பிரவிருத்தி மார்க்கத்தை

யனுஸரிக்கிறேன். இதுவரை நான் எத்தனை முறை பிறந்து இறந்திருக்கிறேனே; இனி எத்தனை முறை பிறந்து இறப்பேனே அறியேன். கணக்கற்ற ஜன்மங்களை எடுத்த நான் துரப்யாஸத்தால்—துஷ்ட ஸகவாஸத்தால் என்னை சரீரமென்று நினைத்து அதற்கு வேண்டிய சுகங்களையே தேடுகிறேன். பெரியோர்கள் வெறுப்புடன் கூறும் சிற்றின்பம் எனக்கு வெகு மனோகரமான பேரின்பமா யிருக்கிறது. என் நிலைமையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்; அதுவே என் சரித்திரமுமாகும்.

ஃ

“எங்கும் நிறைந்த பிரம்மமே நான்” என்பதை எப்படி மறந்தேனே அதை அறியேன். எனக்கு அவிவேகத்தையும் அக்ஞானத்தையும் கொடுத்த மாயை என்னை எப்போது மூடிக்கொண்டதோ அதுவும் தெரியாது. எனக்கு விவாகமாயிற்று. மனைவிகள் ஐவர். சில ஸமயங்களில் பத்து பேர்கள் என்றும் தெரிகிறது. வாசகர்களே! நீங்கள் என் கதையைக் கேட்குமுன் என் பெயரை விரும்புவீர்களே. என் பெயர் ஜீவன். என்னைத்தான் ஜீவாத்மா என்று அழைப்பார்கள். என் பத்நிகள் பஞ்சேந்திரியங்கள். சில ஸமயங்களில் பத்து பேர்களாய்க் காணப்படுகிறார்க ளென்றேனே. அப்போது அவர்கள் யார் என்று கேட்பீர்கள். அவர்கள் கர்மேந்திரியங்கள் ஐவர்; ஞானேந்திரியங்கள் ஐவர். ஆகப் பதின்மர் என்று கணக்காயிற்று. இந்த மனைவிகளின் ஸம்பந்தத்தால் எனக்கு சுகமும் துக்கமும் மாறி மாறி வருகின்றன. ஸம்ஸாரிகள் என் நிலைமையை அறிந்து பரிதாபப் படுவார்கள். ஸன்யாசிகள் என்னைக் கண்டு பரிஹஸிப்பர். நல்லது, என் கதையை இன்னும் சொல்லுகிறேன். மனம் என்ற வேலைக்காரன் ஒருவனுண்டு. ஐயோ! அவன் என் குடும்பத்திற்குத் தன்னையே மானேஜராக (பரிபாலகனாக) நினைத்துக் கொண்டு என் பத்நிகட்குத் துர்ப்புத்தியைக் கற்பிக்கிறான். அவன் ஓரிடத்தில் நில்லான். நிமிஷ நேரம் சும்மா இரான். பஞ்சேந்திரியங்களையும் அழைத்துக்கொண்டு வெளியே போய் ஒரு அழகான அல்லது விலையுயர்ந்த வஸ்துவைக் காட்டி அதை அடையும்படிக் கற்பிக்கிறான். என் மனைவிகள் என்னை இழுக்கிறார்கள். நானும் அப்பொருள் மீது ஆசை கொள்கிறேன். உடனே (1) காமமாகிய குமாரன் ஜனித்து எனக்குச் சத்துருவாகிறான்.

ஃ

“இந்த மனமோரு சிந்தனை யந்திரம்” என்று வர்ணித்தது வெகு சரி. என் மனம் பஞ்சேந்திரியங்களை யழைத்துப் போகும்போது யாரேனும் அதற்கு விருப்பமுள்ள—அது விரும்பிய—சொத்தை அபகரிப்பார்களாயின், உடனே என் பத்நிகளை என்னோடு சம்பந்தப்படுத்தி (2) குரோதம் என்னும் பிள்ளையைப் பெறும்படி செய்து, அவனை எனக்கு ஒரு சத்துருவாக்குகிறான். இவ்வாறே (3) லோபம், (4) மோகம், (5) மதம், (6) மாற்சரியம் ஆக ஆறு பெயர்களையும் எனக்குச் சத்துருக்களாக்கி, நான் செய்யும் ஹிதகாரியங்களை யெல்லாம் நாசமாக்குகிறான். இத்தனை கஷ்டங்களை யனுபவிக்கும் எனக்கு ஒரு மித்திரன் உண்டு. அவன் பெயர் புத்தி. ஆயினும், அவனுடைய

வைத்தியர் தன் சொந்த மருந்தைத் தாராமல் மருந்துக்கடையில் வாங்கிய ஆங்கில மருந்தைக் கொடுக்கையில் அந்தப் புட்டியின்மீதுள்ள பெயரைப் பிறர் கண்டுவிடாதபடி மூடிக்கொள்கிறார். மூடுவதுதான் தெரிந்துவிடுகிறது.

செல்வாக்கு குறைந்து போகிறது. கர்மேந்திரிய ஞானேந்திரிய வியாபாரங்கள் புத்தியைப் பிரயோஜனமற்றதாய்ச் செய்துவிடுகின்றன. நான் வேறு—பிரம்மம் வேறு என்று நினைத்த பேதபுத்தியால் இத்தனை சங்கடங்களை யடைகிறேன்.

ஃ

"அத்வைதமே அமிர்தம்" இந்த அமிர்தத்தை நான் பானம் செய்யவில்லை. இரண்டு என்னும் வியவகாரம் இல்லை, நிலைத்தது ஒன்றே—என்பதை மறந்து—நான் வேறு—என்று எண்ணினேன். உடனே அகங்காரம் உற்பத்தியாயிற்று. நான் என்னும் அந்த அகங்காரமாகிய திமிங்கலம் அல்லது பெரிய மீன் ஜீவனுகிய என்னை விழுங்கவந்தது. நானும் அதின்வாயில் அகப்பட்டிருக்கிறேன். இன்னும் என் நிலைமையை நன்ருய் விளக்கிச் சொல்லுகிறேன். ஜனனமரண துக்கத்தையுடைய ஸம்ஸாரமென்னும் சமுத்திரத்தில் ஜீவனுகிய நான் சரீரமாகிய ஒரு கப்பலிற் புகுந்து ஸஞ்சரிக்கையில் அகங்காரமாகிய திமிங்கலத்தின் வாயில் அகப்பட்டுக்கொண்டேன். இது போதாமல் இந்திரியங்களின் சம்பந்தத்தால் உண்டான காம—குரோத—லோப—மோக மத—மாற்சரியங்களாலாகிய பிரசண்டமாருதம் (பெருங்காற்று, புயல்காற்று) அடிக்கத் தொடங்கியது. ஹா! முக்தியாகிய கரையைக் காணுமல் தவிக்கிறேன். பரமகுருவாகிய மாலுமி கிடைப்பாராயின் எனக்கு ஞானுபதேசம் செய்து என்னை மூக்தியாகிய கரையை யடையச் செய்வர். அப்புறம் கப்பலாகிய சரீரம் எனக்கு அவசியமில்லை. மறுபடி ஜனன—மரண துக்கமாகிய ஸமுத்திரத்தை நான் எட்டியும் பாரேன். ஆதலின், எனக்கு ஒரு ஸத்குரு கிடைக்கும்படி ஸர்வ வல்லமையுள்ள கடவுளை ஸ்தோத்திரம் செய்கிறேன். என் குரு என்னைச் சந்திக்கும் தினத்திற்குக் காத்திருக்கிறேன்.

ஃ

"உலகப் புகழ்ச்சி ஒருவித இகழ்ச்சியே" என்னை புத்திமான், தனவான், தர்மஸ்வரூபி, விவேகி, சூரன், புண்யவான், வித்யாவந்தன் என்று கூறும் உலகத்தார் நான் கிஞ்சிற்றுப் பிசகி நடந்தால் புத்திகெட்டவன் என்று தக்ஷணமே இகழ்வர். நான் அடைந்திருக்கும் செல்வம், செல்வாக்கு, வித்தை, கீர்த்தி, சூரத்வம் ஆகிய இவைகளெல்லாம் உண்மையாகவே நிஷ்பிரயோஜனமென்று எனக்குத் தெரியும். ஏனெனில், அவைகள் நான் அடையவேண்டிய முக்திக்கு ஆதாரமாகிய திவ்ய ஞானத்துக்கு இடையூறுகளே யன்றி ஸாதகங்களல்ல. ஆயினும், அநேகர் என்னைக் கல்விமானென்றும், தனவானென்றும், வீரனென்றும் ஸ்தோத்திரம் செய்கிருர்கள். இந்தப் புகழ்ச்சியால் எனக்குச் சிறிதேனும் லாபம் கிடையாது. நித்யானந்தமு முண்டாகாது.

ஃ

"நீரின்மேற் குமிழி—உயர்நீள் விசும்பின் மின்னலைன நிலையாக் காயம்" அணுவிலும் அணுவாகிய ஜீவன் இந்த சரீரத்தில் இருக்கும் வரை தான் இதற்கு மகிமை. ஜீவன் போனல் இவ்வுடலை யாரும் லக்ஷியம் செய்யார். இந்த சரீரம் ஜீவனுடனிருக்கும்போது அடடா எத்தனை பத்திரமாய்க்

சில தலைவர்களுக்கு மூளைகள் வேலை செய்வதில்லை. சுலபமாகப் பலருக்கும் தோன்றுகிற விஷயங்களே அவர்களுக்குத் தெரிந்து கொள்ளமுடியும். ஆழ்ந்து யோசிக்கவும் திறமையில்லை. ஆனல் பழிக்கிற புத்தி தொலையவில்லை.

காப்பாற்றப்படுகிறது! எத்தனைவித ஆகாராதிகளால் போஷிக்கப்படுகிறது. அதன் பளபளப்பையும் லாவண்யத்தையும் கண்டு மோகமடைவோர் எத்தனை பேர்? அதற்குச் சிலர் சுகந்தம் தடவுகிறார்கள். பட்டு வஸ்திரங்களைத் தரிக்கச் செய்கிறார்கள். பொன்னாபரணங்களைப் போடுகிறார்கள். மிருதுவான மயில் விசிறியால் விசிறுகிறார்கள். பட்டு மெத்தையை விரிக்கிறார்கள். இத்தனை உபசாரங்களும் ஜீவன் பிரிந்த க்ஷணமே நின்றுபோகின்றன. பிறகு அதைக் கொளுத்தி ஸர்வ நாசம் செய்துவிடுகிறார்கள். இது பிரத்யக்ஷானுபவம். ஆதலின் சரீரத்தில் அதிகமான பிரீதிவைத்து மோசம்போகலாகாது. ஜீவாத்மா கடைத்தேறவேண்டிய வழியைத் தேடுவதே முக்கிய கடமையாகும். அதற்காகவே நாம் ஜனித்திருக்கிறோம்.

ஃ

"புண்ணியமும் பாவமும்" எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் சிறிது புண்யமும் சிறிது பாவமும் கலந்தேயிருக்கும். உடுத்திக்கொள்ளும் துணியில் ஒட்டிக்கொள்ளும் பூச்சிகள் அநந்தம். அப்பூச்சிகள் இறந்துபோமே யென்று கவலைப்பட்டுத் துணியைத் தோய்க்காமலும் கசக்காமலும் இருக்கலாமா? அழுக்குத் துணியைத் தோய்ப்பதால் பல பூச்சிகள் இறந்துபோகுமென்பதும், அதனால் பாபமுண்டாகுமென்பதும் உண்மைதான். ஆயினும் அவ்வழுக்குத் துணியைத் தரிப்பதால் பலவித தொத்து வியாதிகள் உண்டாகி நம்மையும் அருகிலுள்ளவர்களையும் பீடிக்கும். சில வேளைகளில் உயிரையும் மாய்க்கும். ஆகவே, இதில் பாபம் அதிகமுண்டு. ஆனதால், பெரியோர்கள் துணி தோய்க்கவேண்டியது கடமை யென்றும், அதனால் உண்டாகும் பாபத்தை பகவந்நாம ஸ்மரணையால் தொலைக்கவேண்டுமென்றும் கூறியிருக்கின்றனர். நாம் நடக்கும்போது எத்தனை எறும்புகள் நம்முடைய காலிற்பட்டு இறக்கின்றன. அது பாபமன்றோ? பாபமே. அந்தப் பாபத்தைச் செய்யாதிருக்க முடியாது. நடக்காமலிருக்க ஸாத்தியப்படாதன்றோ? ஆதலின் இத்தகைய சிறு பாபங்களைத் தானத்தாலும், நாமஸ்மரணையாலும், பகவானைப் பிரார்த்திப்பதாலும் போக்கடிக்கவேண்டும். கள்ளாழ்வார் என்னும் பக்தர் பலருடைய நகைகளைத் திருடி பகவானுக்குத் தரிப்பித்தார். அவர் செய்த களவு பாபந்தான். ஆயினும், அவருடைய பகவத் கைங்கரியம் மகா விசேஷம். தனக்கென்று அவர் எதையும் வைத்துக்கொள்ளவில்லை யாதலின், அந்தப் பாபமானது பகவத் பக்தியென்றும் அக்கினியால் தகிக்கப்பட்டது.

ஃ

"பராபரன் கருணையுண்டேல் சாருமோர் துயருமுண்டோ?" பூமியிலுள்ள யாவரும் நம்மை விரோதித்தாலும் கடவுளுடைய கிருபை இருக்குமானால், நம்மை யணுகும் யாதொரு துன்பமுண்டாகுமோ? தாயைவிட அன்புள்ள தந்தையாகிய கடவுளின் சிறந்த கிருபை இல்லாவிடில், எண்ணிக்கை யில்லாத ரத—கச—துரக—பதாதி என்கின்ற நால்வகையாகிய பெருஞ் சேனைகளை உடையவர்களாயிருந்தாலும் நெஞ்சமே நாம் பிழைக்குந் தன்மை யுண்டாகுமோ? உண்டாகா. இக்கருத்தைப் பின்வரும் பாடலிற் காண்க:—

காசியில் வசிப்பவர்கள் கங்கையில் மூழ்குவதை ஒரு சாமான்யமாக நினைப்பார்களாம். பாற்கடலிலே பிறந்த மீன்கள் பாலைப் பெரிதாகப் பாராட்டுவது கிடையாதாம். எந்த தீர்க்கதரிசிக்கும் சொந்த நாட்டில் பெருமையில்லையாம்.

பாரேலாம் பகைசெய்தாலும் பராபரன் கருணையுண்டேற்
சாருமோர் துயருமுண்டோ? தாயினு மினியவையன்
சீரருளின்றே லெண்ணி றேர்கரிபரி பதாதிப்
பேரணி யுடையோமேனும் பிழைக்குமா றெவன்கோ நேஞ்சே.

ஃ

"மனிதனும் தேவனும்" மனிதன் ஸத்யமாக நடந்து பரிசுத்த ஹிருதய முள்ளவனாக இருந்தால் அவன் தேவனாகத் தடையென்ன வென்கிறார் ஒருவர். இதற்கு யாரும் தடைசொல்லவில்லை. அத்தகைய மனிதனிருப்பது அருமை. அப்படி யிருப்பானாயின் அவனைத் தேவாம்ஸமென்று தாராளமாய்ச் சொல்ல லாம். ஒவ்வொரு மனுஷ்யனும் நல்ல கர்மாக்களைச் செய்து ஹிருதய சுத்தனாக வேண்டுமென்பது நமது முன்னோர்களின் கருத்து. பிறர் சிலாகிப் பதைப் பார்த்து நம்முடைய காரியத்தைச் சரியென்று சொல்லிக்கொள்ளா மல், சாஸ்திரத்தைப் பார்த்து அதிலுள்ளபடி அனுஷ்டிப்பது கடமை. அவ் வாறு அநுஷ்டித்தால் தேவனாகத் தடையென்ன?

சகோதர சகோதரிகளுக்கு

"அமிர்த குணபோதினியைப் பெறுவது மட்டும் போதாது. அதன் 12 – சஞ்சிகைகளையும் சேர்த்துப் பயிண்டு செய்துகொள்வதே பெரிய காரியம். அதை முற்றும் வாசித்து உணர்வதுடன், தாங்களும் அப்பத்திரி கைக்கு விஷயங்கள் எழுதுதற்கு நெஞ்சிலே ஆவல்கொள்ள வேண்டும். அதற்கான ஆற்றல் வகிக்கவேண்டும். பத்திரா சிரியருக்குத் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவேண் டும். அவரைத் தங்களின் உடன்பிறப்பான சகோதரர்போற் கருதி அன்பும் ஆதரவும் காட்டவேண்டும். நீங்கள் பட்ட— உங்கள் மனதில் அவ்வப்போது தோன்றுகிற அநுபவங்களை யும் எழுதி யனுப்பி உதவவேண்டும். பத்திராசிரியரும், பத் திரிகாபிமானிகளும் ஒரு குடும்பத்தினரைப்போல ஒற்றுமை யோடிருந்து ஒருவர் மீதொருவர் உள்ளன்பு ஓங்கி உலகத் துக்கு உதவிபுரிந்து வாழவேண்டும். அவ்விதம் நீங்கள் செய் வீர்களா? எதிர்பார்க்கலாமா?—அது உங்கள் கடமை.

பிற ஆடவர்களிடம் ஸ்திரீகளும், ஸ்திரீகளிடம் ஆடவர்களும் அங்க அழ குகளை நோக்குகிற தீய தன்மையை விலக்கவேண்டும். சிற்றின்ப இச்சையை வென்ற லக்ஷ்மணன் சீதையை வணங்குங்காலத்துங்கூட பாதங்களில் கட்டை விரலைத் தவிர மற்ற அவயவமெதையும் பார்த்தது கிடையாது.

"அமிர்த குணபோதினி"யின்

ஐந்தாம் ஆண்டு.

ஸர்வேச்வரனது அருளால், ஸர்வ மத சம்மதமாய், ஸகல ஜன மநோகரமாய்ச் சென்ற நான்கு வருடங்களாக யாதொரு த்டையுமின்றிப் பிரக்கியாதியுடன் நடைபெற்றிலங்கும் அநுபவக் களஞ்சியமான "அமிர்த குணபோதினி"யின் ஐந்தாவது பருவத்தை இன்று ஆரம்பம் செய்கின்றோம். அது தோன்றிய காலமுதற்கொண்டு தொடர்ந்து ஆதரித்துவரும் ஸகோதர ஸகோதரிகட்கும், இடையிற் சேர்ந்து இன்புற்று இன்றைக்கும் இனி என்றைக்கும் அபிமானிக்கத் திருவுளங்கொண்ட கண்ணியர்கட்கும் கலாவதிகட்கும் நமது நன்றியறிந்த வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சந்தாதாரர்களின் பிரியத்தாலேயே "அமிர்த குணபோதினி" அபிவிர்த்தி யடையவேண்டும். அவர்களின் கிருபா நோக்கமே அதற்கு ஜீவகளை, அவர்கள் கொடுக்கும் சந்தாத் தொகையே அதற்குப் புஷ்டியான சரீரம். ஆதியிலிருந்து அபிமானித்துவந்த தமிழ்ச் செல்வர்கள் முன்னதாக மணியாடர் மூலம் சந்தாவை யனுப்பித் தற்போதும் கைவிடாமல் காப்பாற்றினதற்காக நன்றி செலுத்துகிறோம். இனி வி.பி.யில் பெற்றுக்கொள்ள எதிர்நோக்கும் மற்றுமுள்ள கண்ணியர்களும் குண சம்பன்னைகளும் "அமிர்த குணபோதினி"யின் மேற் பிரியங்கொண்டு ஆதரித்து வருமாறு வேண்டுகின்றோம். தமிழ்ப் பாஷையில் அபிமானமுள்ள ஒவ்வொரு கனதனவான்களும் தயைபுரிந்து இப்பத்திரிகையைப் பரிபாலிப்பார்களாக. ஹிந்து குலாங்கனைகளுக்கு "அமிர்த குணபோதினி" அத்யாவசியமான பத்திரிகையானதால், அவர்கள், அவசியம் தங்கள் விசுவாசத்தைப் பத்திரிகையினிடம் காட்டி நம்மை உத்ஸாகப்படுத்துவார்களாக.

உலகத்தில் எத்தனையோ விஷயங்களுக்காகப் பொருளைச் செலவழிக்கின்றனர். சில சமயங்களில் வீண் விரயமும் செய்கின்றனர். விருந்தினர்கள் கூடிக்கொண்டால் எவ்வளவு பணம் கையிலிருந்தாலும் போதாமற் போகிறது. பத்து ரூபாய் நோட்டு பல சில்லரைகளாகிப் பறந்து மாயமாய் விடுகின்றது. ஒரு அணா நாணயம் எதற்காகத் தோன்றிற்றோ தெரியவில்லை. காலணா செலவிடவேண்டியவற்றிற் கெல்லாம் ஒரு அணா நாணயத்தையே எடுத்துக்கொடுக்க நேர்கிறது. காலணா இட்டிலி தோசையில் வயிறு நிறைந்ததும் ஒரு காலம். அது பத்தொன்பதாம் நூற்றாண்டின் சங்கதி. இந்த இருபதாம் நூற்றாண்டிலோ அதே காலணா வகைக்கு ஒரு அணா செலவாகி,

---

முன்பு பழகியவர்களுக்குக் கடிதம் எழுதாதிருந்துவிடுதலும், அவர்கள் ரிப்ளைகார்டு தரினுங்கூட மௌனம் சாதிப்பதும் ஒரு தமாஷாகச் சிலர் எண்ணிவிடுகிறார்கள். அன்புகொண்டவர்மீது அன்பு கொள்வதில்லை, ஏன்?

சுத்தமான ஜலத்தை அருந்தியதற்குப் பதிலாக காபியும் தேயிலையும் இப்பொழுது கூடிக் குலாவுவதால் அதற்கும் வேறு ஒரு அணு தேவையாகின்றது. இவ்வித அபாரச் செலவில், பொது நன்மைக்குரிய "அமிர்த குணபோதினி"ப் பத்திரிகைக்கு வருஷ மொருமுறை மிகவும் சொற்பத் தொகையாகிய ஒரு ரூபாயைச் செலுத்துவதுதானா பெரும்பாரம்? இகபராஸாதகமான விஷயங்களை அடிக்கடி பத்திரிகையின் மூலமாய் அறிந்து ஆனந்தமடையாத நிலைமை என்ன நிலைமை யென்று நமது பத்திரிகாபிமானிகள் தமது பக்கத்திலிருப்பவர்களுக்குச் சொல்லவேண்டும். அதற்காகச் சொற்ப தொகையைச் செலவிடாத செட்டு என்ன செட்டு என்று அருகிலிருப்பவர்களைக் கேட்கவேண்டும். தான் பிறந்த தேசம், தன் பாஷை, தன் மதம், தனது தாய்நாட்டின் பத்திரிகை முதலியவற்றில் அபிமானம் இருப்பதன்றோ சிலாக்கியம் என்று எடுத்துக்கூறி, நமது கையொப்ப நேயர்கள் தங்களால் இயன்றவரை புதிய சந்தாதாரர்களைச் சேர்ப்பித்துப் பத்திரிகையை மேன்மேலும் அபிவிர்த்தி செய்யுமாறு வேண்டுகிறோம்.

பத்திராசிரியராகிய நாமும், இப்பத்திரிகையின் அதிபரும் தத்தம் கடமைகளை மனஸ்பூர்வமாய்ச் செய்து "அமிர்த குணபோதினி"யை இப்புது வருஷத்தில் வெகு உன்னதமாய் நடத்திவருவோம். அவ்விதமே சந்தா நேயர்களும் தாங்களும் தொடர்ந்து ஆதரித்து ஒரு பெரிய ஆற்றிற்கு உபநதிகள் கூடுவதுபோல் புதிய சந்தாதாரர்களையும் சேர்த்துக்கொடுத்து நமக்குத் துணையாயும் பக்க பலமாயும் இருந்து உதவுமாறு பிரார்த்திக்கின்றோம். ஸர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம்மெல்லோரையும் இரக்ஷிப்பாராக. சுபம்.

பத்திராசிரியர்.

மறந்துபோன சோத்து!

மறந்து வைத்தது வா வென்றால் வருமா? திரும்பி அதைத் தேடிச் செல்லினும் கிடைக்குமா? அதைக் கண்டெடுத்து, அது சொந்த சொத்தான பின்பு திருப்பிக்கொடுக்க மனம் இசையுமா? இழந்துவிட்ட ஒன்றின்மீது வைத்திருந்த பிரியத்தை மறக்க முடியுமா? அதனுடன் பழகிய நினைவு இலகுவில் போகுமா? இழந்த அதனை எண்ணி வருந்தாதிருக்க நெஞ்சம் ஒப்புமா? புதியது பெற்றாலும் பழயதின் ஞாபகம் விடுமா? பழயதைப்போல் புதியது ஆகுமா? தவிக்கும் மனதிற்குத்தான் மருந்தும் உண்டா?

ஐந்து ரூபாய் வீட்டுவாடகையை எப்படிக் கொடுப்பது? தினமும் இரண்டரையணா எடுத்துவை—மாதத்தில் ஐந்தாகிவிடும்—சுலபமாகத் தந்துவிடலாம். ஆனால் இப்படித் தினமும் எடுத்துவைக்க முடிகிறதேயில்லை.

அமிர்தகுணபோதினி

பிரமோதூதஞு சித்திரைமீ 1வ

ஜனசுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவு.

ஆதி பகவனின் நாமம் வாழ்க. ஆண்டவன் படைப்பு அதிவிசித்திரம். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தத்துவம்; ஒவ்வொரு குணம்; ஒவ்வொரு சாயல்; ஒவ்வொரு மாதிரி. இவ்வாறான பலவகை இனங்களையும் ஆழ ஆராய்ந்து, அவற்றின் சுபாவ ஒழுக்கங்களை ஊன்றி யுணர்ந்து தெளியவேண்டும். சுபாவ ஒழுக்கம் என்பது இயற்கையாய்த் தானுகவே பிறப்பினேடும் அமைந்து தொடர்ந்துவரும் ஒருவகைக் குணமாகும். இதைப் " பிறவிக் குணம் " என்றூர் ஒளவையார். " அது அவனுடைய ஜென்ம சுபாவம் " என்று ஒருவனைப்பற்றிச் சொல்லுகிறேம். இன்னெரு சந்தர்ப்பத்தில் மற்றெருவன் நடந்துகொண்டவிதத்தைப் பார்த்து, " அது அவனுடைய ஜென்மப் பிரகிருதி " என்கிறேம். அதாவது ஜென்ம புத்தி—ஜென்மத்தில் அமைந்துவிட்ட இயற்கைக் குணம் என்கிறேம். ஜென்மசுபாவம் என்றாலும், ஜென்மப் பிரகிருதி என்றாலும், பிறவிக்குணம் என்றாலும் இவை யாவற்றுக்கும் பொருள் ஒன்றே. இவ்விதம் பிறவிக் குணத்தையோட்டி அவரவர்கள் செய்யும் காரியங்களையே " சுபாவ ஒழுக்கம் " என்ற பெயரால் குறிப்பிட்டிருக்கிறேம்.

ஃ

இந்த சுபாவ ஒழுக்கம் சிலவற்றில் ஒரே தன்மையினதாகவும், சிலவற்றில் பல தன்மையினதாகவும் பிரிந்து வேறுபடும். விவாக விருப்பமும், மக்கள்மீது வாஞ்சையும், சொந்த மதத்தினிடத்துப் பற்றுதலும், ஜன்மபூமியினிடத்துப் பாசமும்—இவை போன்றன பலவும் பிறவிக்குணமாய், அதாவது சுபாவ ஒழுக்கங்களைச் சேர்ந்த காரியங்களாய், எங்கும் ஒரே தன்மையினவாய்க் காணப்படும். மற்றென்றே வேறு வேறுகப் பிரிவுபடும். இவ்விதம்

முரட்டுத்தனத்துடன் அக்கிரமமாய் இரட்டித்த கூலிபெற மடியைப் பிடித்து இழுத்துச் சண்டையிடுவோர் தரித்திரத்திலேயேதான் காலம் போக்குகிறார்கள். இதைச் சில வண்டிக்காரர்களிடமும் பார்க்கலாம்.

பல பிரிவுபட்டு நிற்பதை ஒரு உதாரணத்தால் விளக்குவோம். ஒருவருக்கு நான்கு புத்திரர்கள் பிறக்க, அந்த நால்வரின் குண சுபாவங்களும் நான்குவிதமாய் ஒன்றோடொன்று பொருந்தாமல் வெவ்வேறு வகையாய் மாறுகின்றன. ஒருவன் சங்கீத நிபுணனாகிறான்; ஒருவன் போர்த்தலைவனாகிறான்; ஒருவன் கல்வியில் தேர்ச்சி கொண்டு பண்டிதனாகிறான். கடைசியிலுள்ளவனோ எவ்வேலையுமின்றிச் சோம்பி வீணனாகின்றான். ஒரு தந்தைக்கு உதித்த மக்கள் நால்வரும் இங்ஙனம் வேறுபடுவதின் காரணம் யாது? அது அவரவர்களது பிறவிக்குணத்தின் இயல்பால் தான். அந்தக் குணத்திற்குத் தகுந்தபடி ஒவ்வொரு விதமான சுபாவம் அவர்களுக்கு அமைகிறது. அந்த சுபாவத்திற்குத் தகுந்தபடி அவர்களுக்கு ஒழுக்கமும் பொருந்துகிறது. ஒழுக்கம் என்பது நல்லொழுக்கம், தீயொழுக்கம், என்று இருவகை. அவரவர்களின் சுபாவ குணங்களுக்கேற்ப நல்லொழுக்கத்தையாவது, தீயொழுக்கத்தையாவது விடாப் பிடியாய்ப் பற்றுகின்றனர். அவர்கள் பற்றிக்கொண்ட ஒழுக்கத்தின் தன்மைகளுக்கிணங்க எவ்வெவற்றில் பிரியமோ, அவ்வவற்றில் அவர்களின் புத்தியும் நினைவும் சென்று அவ்வவற்றிற்குத் தகுந்தபடி காரியங்கள் நிகழ்கின்றன. இவ்விதமே, "ஜனசுபாவ ஒழுக்கம்" என்றால், ஜனங்களுக்கு இயற்கையாய் அமைந்த பிறவிக்குணத்தோடு ஒட்டி, அவர்களின் சுபாவத்தைத் தழுவி நடைபெறும் காரியங்கள்—நிகழ்ச்சிகள் என்று பொருள்படும். இங்ஙனம் வெவ்வேறுபட்டு நிற்கும் பல பேர்களுடைய குணகுணங்களையும் அறிவின் துணைகொண்டு நுட்பமாய் ஆராய்ந்து, தெளிந்து, விட்டுக்கொடுத்து, இசைந்து, ஒட்டி நடந்து செல்லுகிற தன்மைக்கே "ஜனசுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவு" என்பதாம். இந்த அறிவு நாம் பெறவேண்டிய அறிவுகளில் முதன்மையானது. ஒவ்வொருவருடைய குணகுணங்களையும் நாம் நன்றாக அறிந்து தேறிவிட்டால், உலகில் நமது வாழ்க்கையின் நாடகத்தை முன்னெச்சரிக்கையுடன் நடத்திக்கொண்டு பக்குவமாய்ச் செல்வதற்கு வெகு சௌகரியமா யிருக்கும்.

°°

இவ்விதம் பலவகைப்பட்ட குணமுள்ளவர்களை ஆராயும்போது ஒருசிலரிடம் குற்றங்களும் தவறுகளும் தென்படலாம். அதற்காக அவர்களைக் கடிந்துகொள்ளாமல், அது அவர்களின் பிறவிக்குணம், சுபாவ ஒழுக்கம் என்று எண்ணியும், அவர்களுடைய ஜென்ம குணம் திருந்தாது என்று அறிந்தும், அவர்களுக்கு அநுகூலமாக நின்றும், அநுசரித்து நடந்தும், உதவியாக இருந்தும், இரக்கத்துடன் விட்டுக்கொடுக்கிற புத்தியை மேற்கொண்டும் அவர்

கலங்காத வீரியரானாலும் போகின்ற காலம் வந்தால் வெல்லமாட்டுவரோ?—ஜலங்காண்கோட்டை மதில் எழ்—தலை பத்துதான் இருந்தும் இலங்காபுரி நின்றதோ?

களுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்வித்தால் இப்பொழுது உலகத்தில் காணப்படுகிற பொல்லாங்குகளில்—கொடுமைகளில்—எதிர்ப்புகளில்—முக்கால்பாகம் இல்லாமலே போய்விடும். இவ்வாறான ஜனசுபாவ ஒழுக்கத்தைப் பற்றிய அறிவுகொண்டு ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்யப் புகும்போது, குற்றங்களென்பவை அநேகமாய் நமது இரக்கமான திருஷ்டிக்குத் தென்படாமலே மறைந்துவிடவுங் கூடும். அத்துடன் அநுதாபம், சிநேகம், சகிப்புத்தன்மை—இக்குணங்களையும் நாம் கொண்டுவிடுவோமானால், எவர்மீதும் நாம் குற்றம் கூறுவதற்கு இடம் ஏற்படாமல் அவரவர்களின் பிரியப்படி நாமும் போய், இவ்வுலகையே இன்பவுலகாக ஆக்கிவிடுவோம்.

ஃ

தர்மவிரோதமான குற்றச் செயல்களைப் புரிவோருங்கூட, நாம் அவர்களை உருக்கத்துடன் ஆதரிக்குந்தன்மையிலும், இளகிய மனத்துடன் அணைத்துக்கொள்ளும் அன்பின் வகையிலும் அவர்கள் சிக்கிக்கொண்டு தங்களின் தீய குணங்களை மறந்து, நமது சிலாகிப்பைப் பெறுவதன்பொருட்டு நல்லோராகிவிடக்கூடும். சோம்பலாயுள்ள குழந்தைகள்கூட அந்த சோம்பலை உதறிவிட்டு நாம் ஏவிய வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து நமது சிலாகிப்பைப் பெறுவதற்கு ஆவற்படுவதையும், "பேஷ்! நீ வெகு கெட்டிக்காரன்" என்று நாம் அக்குழந்தைகளைத் தட்டிக்கொடுத்துப் பாராட்டுகையில் அவர்கள் மனம் பூரித்துப்போய் ஆநந்திப்பதையும் இங்கு உதாரணமாகக் கொள்ளலாம். குற்றமுள்ளவர்களிடம் கடுகடுக்காமல் நாம் காண்பிக்கிற அநுதாபம், சிநேகம், சகிப்புத்தன்மை முதலியவற்றால் அவர்கள் நமக்குப் பணிந்து நாளடைவில் திருந்தியும் விடுகின்றனர். நமக்கோ அவர்கள் நல்ல நிலைமையில் செழிப்பாய் உயர்வுற்று வாழவேண்டுமென்பதொன்றே லக்ஷ்யமாகும். இவ்விதமான லக்ஷியத்தை நாம் கொண்டிருக்கின்றோமென்பதை அவர்கள் உணரும்போது, எவ்விதமும் நமக்குத் திருப்திபடும்படி சன்மார்க்கத்தில் தாங்கள் நடந்து நமது மதிப்பையும் சிலாகிப்பையும் பெற வேண்டுமென்ற எண்ணங் கொண்டவர்களாய் ஆகிவிடுகிறார்கள். அதனால் நாம் உள்ளங் குளிர்ந்து பூரிப்பு கொள்ளும்படியும் அவர்கள் நடக்கத் தலைப்பட்டுவிடுகிறார்கள். தங்கள் க்ஷேமத்திலும் அபிவிர்த்தியிலும் சிரத்தை கொண்டுள்ளவர்களென்று அவர்கள் மனஸ்பூர்வமாய் நம்மை நம்பிவிடுகிறபடியால், நமக்கு அடங்கி நடக்கும் குணத்தை அவர்கள் பெறுகிறார்கள். நாம் அவர்களைத் தீயிற் குதியென்றாலும் உடனே குதிக்கத் துணிந்துவிடுகிறார்கள். நமது

இட்டிலி—தோசை—ஆப்பம் சுட்டு விற்பதைவிட, கல்விகற்று ஒரு பாடசாலைக்கு உபாத்தியாயனியாகச் செல்வது கௌரவமான தொழில். நமது ஆயுஸ்காலத்தில் என்றைக்கும் எவருக்கும் பாரமாயிருப்பது கூடாது.

வார்த்தைகளுக்கு அவ்வளவு மதிப்பை அவர்கள் உண்டாக்கிவிடுகிறார்கள். இந்த வகையில் அவர்கள் ஏவப்பட்டு தீயவழிகளினின்றும் விலகி, உத்தமமான பாதையில் தங்களை அறியாமலே திரும்பிவிடுகிறார்கள். நாமோ அவர்களின் வாழ்வே நமது வாழ்வாகவும், அவர்களின் தாழ்வே நமது தாழ்வாகவும் கொண்டு, எவ்வாற்றானும் அவர்களை மேம்பாடடையச் செய்வதற்கே நாம் ஜீவிப்பவர்களாகவும் நினைத்துவிடுகிறோம். இவ்விதமாக இருசார்பிலும் மனது ஒன்றுபட்டுவிடும்போது—எதிர்ப்புகள் ஏது? பகைகள் ஏது? வேற்றுமைகள் ஏது? தவறுகள் ஏது? கொடுமைகள் ஏது? கோபதாபங்கள் ஏது? குற்றங் காண்பவைகள் ஏது? அடிதடி கலகங்கள் ஏது? பிரிவினை குழப்பங்கள் ஏது? சண்டை சச்சரவுகளும் ஏது? எங்கும் சமாதானமாய், வாழ்க்கையும் ஜீவியமும் மனோரம்மியமுள்ளதாய், முன்னேற்றங்கொண்டதாய், தர்ம நீதி நியாயங்கள் பொருந்தியதாய், ஆநந்தமயமாய் ஜ்வலிக்கக் காண்போம். இந்தப் பரமநிலை எய்துதற்கு வேண்டிய கருவிகள் யாவை? (1) ஜனசுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவு, (2) அநுதாபம், (3) சிநேககுணம், (4) சகிப்புத்தன்மை —ஆகிய இவைகளேயாம்.

ஃ

ஜன சுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவு உண்டாவதற்கு அநுதாபம், சிநேககுணம், சகிப்புத்தன்மை இம்மூன்று குணங்களும் இருந்தால்தான் முடியும். அநுதாபம் தோன்றும் பொழுதுதான் ஒருவனுடைய சுபாவ ஒழுக்கத்தைப்பற்றி இரக்கமான தன்மையோடும் ஆராய்ந்து, அவனைக் குறித்து ஒரு நன்மையான முடிவுக்கு வருகிற தயாளத்வ சிந்தை யுண்டாகிறது. சிநேக குணமானது அவனைத் தன்னிடத்திலிருந்து பிரிந்துவிடாதபடி செய்து, அவன் விருப்பங்களைக் கூடியமட்டில் நிறைவேற்றி வைத்து, என்றைக்கும் தன்னுடனேயே அவனைச் சேர்த்து வைத்துக்கொள்ளும்படியான ஆவலுக்குத் தூண்டுதல் செய்கின்றது. சகிப்புத்தன்மையோ அவனது குற்றங்களை ஒருபொருட்டாகக் கருதாமல் அவனது தவறுதல்களையெல்லாம் மன்னித்து அவன் க்ஷேமத்தில் மட்டுமே திருஷ்டியாய்ப் பொறுமையுடன் சகித்துக்கொள்ள வைக்கிறது. ஆகவே, அநுதாபம், சிநேகம், சகிப்புத்தன்மை என்ற மூன்று குணங்களையும் துணைகோண்டு "ஜனசுபாவ ஒழுக்க"த்தைப்பற்றி ஆராயும் அறிவை ஒருவன் பெறுங்கால், அவன் எல்லாப் பிழைகளையும் தவறுதல்களையும மறந்துவிட்டு, அவர்கள் எவ்வாறேனும் க்ஷேமப்படட்டுமேன்ற ஒரு மேனோக்கான உத்தம சிந்தையை மட்டுமே பின்பற்றுவோனாகின்றான்.

ஃ

துஷ்டனுக்குக் கடவுள் விதிக்கும் முதல் சிக்ஷை அவன் தன்னவர்களாலேயே மனோசமாதானமற்று ஸந்தோஷத்தை யிழந்துவிடும்படி செய்வதே.

ஜனசுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவை இன்னும் தெளிவாக நமது மனதில் பதிந்துகொள்வதற்கு, அந்த அறிவைக் குடும்பத்துக்குள் செலுத்தி ஆராய்தல் நலமாயிருக்கும். அநேக லக்ஷம் குடும்பங்கள் சேர்ந்தே ஒரு இராஜ்யமாகவும், அநேக இராஜ்யங்கள் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய உலகமாகவும் ஆகின்றன. ஆகவே, உலகத்திற்கும் இராஜ்யங்கட்கும் அஸ்திவாரமாயுள்ளது ஒரு சிறு குடும்பம். அங்கு நாம் இப்பொழுது செல்வோம். அக்குடும்பத்தின் தலைவி மகத்துவமிக்கவரான தாயார். அந்தத் தாய் இயற்கையிலேயே ஒரு தெய்வீகமான அன்பு பொருந்தியவள். அவளுக்கு ஐந்து குழந்தைகள் இருந்தால், அந்த ஐவரிடத்திலும் ஒரேவிதமான அன்பையே கொள்ளுவாள். அந்த ஐந்து குழந்தைகளுடையவும் சுபாவ ஒழுக்கத்தைப்பற்றி நன்ருக அலசிப் பார்த்துத் தெரிந்து கொள்ளுகிற ஒரு சூக்ஷ்ம அறிவையும் அவள் பெற்றிருக்கிருள். அந்த அறிவுடன் ஒட்டிநிற்க வேண்டிய அநுதாபம், சிநேகம், சகிப்புத்தன்மைகளும் அவளிடம் பொருந்தியிருக்கின்றன. ஒரு குழந்தை ஸதா தின்றபடியே இருக்க விரும்புகிறது; அது அதன் சுபாவ ஒழுக்கம். அதற்கு ஏதாவது ஒன்றைத் தின்னக் கொடுத்துக்கொண்டே யிருக்கிருள். இன்னொரு குழந்தை பாதி சாதத்தைப் புசித்து மறுபாதியை அப்படியே இலையில் போட்டுவிட்டு எழுந்திருக்கிற சுபாவமுள்ளதா யிருக்கிறது. அதற்கு அவள் மனங்கோணுமல் அந்த மிச்சத்தைத் தான் உண்டு இலையை வெளியில் எறிகிருள். இன்னொரு குழந்தை பிரதிதினமும் சமையலாகிக்கொண்டிருக்கும் பொழுதே பசி பசியென்று அழுது அடம்பிடிக்கின்றது. அதற்கு உடனே அன்னத்தைப் போட்டு, அடுப்பில் வெந்துகொண்டிருக்கும் குழம்பை எடுத்து ஊற்றி உண்ணச்செய்கிருள். இன்னொரு குழந்தையோ தனது விளையாட்டின்மீதே கவனமாகிப் புசிக்க எத்தனை தடவை அழைத்தும் வராமற் போக, அதைத் தேடிக்கொண்டு வெளியிற் சென்று வலிய அழைத்துவந்து உண்பிக்கிருள். அது உண்டவுடன் விளையாட ஓடிவிடுகிறது. ஒரு குழந்தை தொட்டிலில்தான் தூங்குவேனென்கிறது. இன்னொரு குழந்தை தன்னைப் படுக்கவைத்துத் தட்டிக்கொடுத்துக் கொண்டிருந்தால் தூங்குவேனென்கிறது. வேறொரு குழந்தை தாய்ப்பால் அருந்தியவண்ணமே உறங்க விரும்புகிறது. மற்றொரு குழந்தை பாயைப் போட்டுவிட்டால் படுத்துக்கொள்ளக் கூடியது. அந்தந்தக் குழந்தையின் மனப்போக்குக்குத் தகுந்தபடி அவ்வவற்றின் சுபாவ ஒழுக்கங்களை உணர்ந்தவளாய், அநுதாபம், நேசம், சகிப்புத்தன்மைகளுடன் அதனதன் பிரியப்படி செய்வித்துச் சமாதானம் பண்ணுகிருள்; திருப்தி

மற்றவரை வயிறெறிய வைக்கும் ஆடவர்—அரிவையர் முதலில் மிக மகிழ்வுகொள்ளலாமெனினும், பின்னுக்கு இருக்கிறது வட்டியும் முதலுமாக.

யூட்டுகிறாள். இடையே, கண்டித்தும் புத்தி சொல்லியும் ஸன்மார்க்கத்தில் திருப்புகிறாள். ஒருபக்கத்தில் சுபாவ ஒழுக்கத்தை யுணருகிற அறிவு படைத்தவளாய் அநுதாபம், நேசம், சகிப்பு முதலியவற்றுடன் இருந்து அக்குழந்தைகளைத் திருப்தி செய்துவிட்டு, மற்றொரு பக்கம் அவைகளின் க்ஷேமத்திலும், நற்குணங்களுடன் வளர்வதிலும் கண்ணேட்டமாயிருந்து அதையும் கவனித்துக் கொள்ளுகிறாள். இவ்விதம் இருவேலைகளையும் அந்தத் தாய் மனமுவந்து செய்கிறாள்.

ஃ

இதேவிதமாக, அக்குடும்பத் தலைவனும், குடும்பத்துள் இருக்கிற பலவிதமான அபிப்பிராயங்கள் கொண்ட அனைவரையும், அவரவர்களது சுபாவ ஒழுக்கங்களைப்பற்றி யுணரும் அறிவு படைத்தவனாகி அநுதாபம், நேசம், சகிப்புத்தன்மை இவற்றுடன் அவரவர்களுடைய குணங்களுக்குத் தகுந்தபடி நடந்தும், இசைந்தும், திருப்தி செய்வித்துக் குடும்ப கௌரவம் கெடாதபடி காத்து, அத்துடன் அவரவர்களின் க்ஷேமத்திலும் உத்தமதிருஷ்டி யுடையோனாகிறான். சிற்சில சமயங்களில் தன் குடும்பத்தினரைக் கண்டித்தும் திருத்துகிறான். அவரவர்களுடைய சுபாவ ஒழுக்கத்தைப்பற்றித் தான் அறிந்திருப்பதால் அவரவர்களின் விருப்பங்களுக்கு இணங்கிச் செல்லவேண்டியதுதான் என்றும் அவனுக்குத் தோன்றுகிறது. சகோதரர்களிடையில் பாகம் பிரிக்கையில் ஒரு சகோதரனுக்கு மற்றவர்களைப்போல அவன் பேருக்குப் பாகத்தை எழுதாமல், அவன் மனைவி குழந்தைகள் பேருக்கு எழுதிவிடுகிறான். அந்த சகோதரன் குடிகாரன் என்று அவனது சுபாவ ஒழுக்கத்தை யறிந்திருப்பதால், அவனால் சொத்துக்கள் கெட்டுவிடாதபடி அவன் மனைவியின் பேருக்குச் செய்துவிட, அதை அந்த சகோதரனும் சரியென்று ஏற்றுக்கொள்கிறான். இவ்விதமான யூகிக்கும்தன்மையானது சுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவினின்றும் உதயமாயிற்றென்னலாம். இங்கு குடும்பத்துக்குச் சொல்லியதை, இவ்விதமே உலகத்தின் மற்ற இயல்புகளுக்கும் காரியங்களுக்கும் கொள்க.

ஃ

ஒரு சிறுவன் நம்மைக் காலணு கேட்கிறான். அவ்விதமே தருகிறோம். அதற்கு ஏதாவது வாங்கிப் புசிப்பானென்பது நமது எண்ணம். ஆனால், அச்சிறுவனே அந்தக் காலணுவுக்குத் தோகையுடன்கூடிய மயில் இறகு வாங்கி வந்து அதை ஸந்தோஷமாக நமக்குக் காட்டுகிறான். இயற்கை யழகைக் கண்டு மயங்குகிற அவனுடைய சுபாவ ஒழுக்கத்தை அவன் செய்கை காட்டுகிறதென்று நினைக்கிற அறிவை நாம் பெற்றுக்கொண்டு, அவன் காலணுவை

அந்தோ! உயிரும் உடலும் ஒன்றாக அமைந்திருந்து, பின் வேறாகுவது ஏன்?

வீணாக்கிவிட்டானே என்று சொல்லாமல், "அப்பா! மயில் இறகா வாங்கிவந்தாய், மிகவும் அழகாகயிருக்கிறது, பத்திரமாக வைத்துக் கொள்" என்று அவனை அவனது மனப்போக்கின்படி உற்சாகப் படுத்தவேண்டும். இந்த அறிவுநுட்பம் நமக்கு உண்டானால் அந்தச் சிறுவனும் சந்தோஷமடைவதுடன், அவன் செயலை ஆதரித்த நம்மையும் பிரியமுள்ளவராக எண்ணிக் கொண்டாடுவான். பிறகு மறுநாள் அச்சிறுவன் அந்த மயில் இறகை வைத்து விளையாடி அதைப் பிய்த்துப் பிடுங்கிச் சின்னாபின்னம் செய்து குப்பைத் தொட்டியில் எறிகிறபோது நாம் குறுக்கிட்டு, வீணாக இதையேன் வாங்கினாய், அதற்குப் பதிலாக ஏதாவது வாங்கிப் புசிக்கிறதுதானே, இந்தமாதிரி காசை வீணாக்கினால் இனி நான் ஒருகாசும் உனக்குத் தரமாட்டேன் என்று அவனுக்குப் புத்தி கூறுவோமானால், அது அவன் மனதில் நன்றாகத் தைக்கும். இனி இவ்விதம் காசையும் அவன் 'கரியாக்க'மாட்டான். இவ்வாறு முதலில் அவன் செய்கையை ஆதரித்தும், பிறகு அவன் பிழையை எடுத்துக் கூறிப் புத்தி புகட்டித் திருத்தியும் செல்லுகிற தன்மையைக் கைக்கொள்ளுவதற்கு சுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவு வாய்த்தால்தான் முடியும்.

ஃ

ஜனசுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவை ஒருவன் பெறுவானானால், மற்றவர்களுடைய சுதந்திர பாத்தியதைகளைத் தர்ம நியாயமாய்த் தீர்மானிப்பான். பந்துக்கள் எவ்வளவு பொல்லாங்குகள் செய்திருந்தாலும் அது அவர்களின் சுபாவ ஒழுக்கம் என்று ஒதுக்கிவிட்டு, அவர்களுடைய பந்தத்துவத்தையே பெரிதும்விரும்புவான். ஒரு நேசனுடைய குற்றங்களும் வஞ்சனை மோசங்களும் எத்தனைதான் அதிகமாயிருப்பினும், அது அவனது சுபாவ ஒழுக்கம் என்று கவனியாதுவிட்டு அவனது நேசமொன்றையே தனக்குப் பிரியமாகக் கொள்வான். அவனுக்கு இசைந்தும் நடப்பான். அவன் ஒரு குடியனாய் இருப்பின், அவன் ஆவல் தணியச் சிறிது மதுபானமும் வாங்கிக்கொடுத்துவிட்டு, இன்று தொட்டாவது பாழுங் குடியை ஒழித்துத் தொலை என்று கோபத்துடன் புத்தி கூறி, அவனது மற்றொரு உயர்ந்த விஸ்வாச குணத்தை மட்டும் தான் போற்றுவதற்காக எடுத்துக்கொள்வான். ஒருவன் எத்துணையோ துரோகச் செயல்கள் செய்திருப்பினும், அந்தப் புத்தி அவனது சுபாவ ஒழுக்கத்தைச் சேர்ந்ததென்று இரங்கிய மனதுடன் அதைக் கவனியாது விட்டுவிட்டு, அவனுடன் கூடியமட்டும் சேர்ந்திருக்கவே முயல்வான். சுபாவ ஒழுக்கத்தைப் பற்றிய அறிவை ஒரு மாமி கொள்வாளாகில், தன் மருமகள் செய்கிற,—தனக்குச் சற்றும் பிடிக்காத,—விஷயங்களை, அது புதுப்பெண்களின் சுபாவ ஒழுக்கத்தின் போக்கு என்று எண்ணிவிட்டு, அவளிடமிருக்கிற சில தூர்க்குணங்க

ளைத் தன் அன்பாலும், ஆதரிப்பாலும், இனிய வசனங்களாலும் நெடுகத் திருத்திச் சென்று அவளைத் தங்க விக்கிரகமாக்கிவிடுவாள். அவள்மீது குற்றம் பேசப் புத்தி போகாது. இவ்விதமே, சுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவு படைத்த ஒருவன் தன் மனைவியின் சேஷ்டைகளை, அது அவளது சுபாவ ஒழுக்கம் என்று கருதி, அதைப் பெருங்குற்றமாகக் கொள்ளாமல் பொறுத்துக்கொண்டு மன்னித்து, அநுதாபம்—நேசம்—சகிப்பு—இவற்றால் அவளை நடத்திச் சென்று. சிறுகச்சிறுக நல்லறிவு புகட்டி நாளடைவில் அமிர்தகுணவல்லியாக்கிவிடுவான். இவ்விதமே நெடுகச் சொல்லலாம். கிரகிக்கக்கூடியவர்களுக்கு இந்தச் சிறு குறிப்பே போதும்.

ஃ

ஜனசுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவு தாராளமாய் மன்னிப்பு கொடுக்கத் தூண்டுகிறது. தயாளத்வமாய் இருந்து பிறரது குற்றங்களைப் பாராட்டாமல் கருணையுடன் நடந்துகொள்ளச் செய்கிறது. எத்தகையோரையும் ஆதரித்துக் காக்கும் கம்பீரத்தைக் கொடுக்கிறது. பெருந்தன்மையுள்ளவர்களாய் ஜீவிக்கச் செய்கிறது. எல்லோருக்கும் நல்லவராகவும் ஆக்குகிறது. தனக்குள்ளேயே ஒரு தேவ குணத்தையும், பரிசுத்த ஆவியையும் எழுப்புகிறது. தன்னை சத்திய வந்தனுகப் பயிற்சி செய்துகொள்ள வைக்கிறது. பிறருக்குத் துன்பம் எண்ணுதிருக்கச் செய்து உன்னதப்படுத்துகிறது. எவ்வளவு கோபம், ஆத்திரம் மூட்டப்பெற்ற காலத்துங்கூட அடக்கத்துடன் இருக்கவும், உலகவாழ்வில் ஸகல கஷ்டங்களையும் எதிர்ப்புகளையும் தாங்கிச் சமாளிக்கவுமான சகிப்புத் தன்மையைக் கொடுக்கிறது. எவருடனும் சிநேகப்பான்மையுடன் பழகப் பண்ணுகிறது. இனி வேறு விதியில்லை, சமாதானத்துக்கு மார்க்கமில்லை என்றுகிறபோது மட்டும் தனது ஆண்மைக்குணத்தையும் வீரத்தன்மையையும் காட்டிக்கொள்ளச் செய்கிறது. இதில் இன்னொரு விசேஷமும் உண்டு. ஜனசுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவு கொண்டவன் நேற்று கோபங் கொதித்துச் சீறியிருப்பினும், அதை ஒரு கெட்ட ஸ்வப்பனமாக நேற்றோடு தொலைத்துவிட்டு, இன்று காலையில் யாவரும் விரும்பக்கூடியவனுய் சாதுவாக மாறிப்போகிறுன். இவ்விதம் ஆவதுபிறாது சுபாவ ஒழுக்கத்தைப்பற்றி ஆராய்ந்த அறிவின் பயனுகும். அந்த அறிவின் பயனால், அவரவர் இன்னின்ன போக்குள்ளவரென்று கண்டு, அவரவர்களுக்குத் தக்குந்தபடி நடந்துவிட நினைத்து, ஏன் வீணுகக் கலகப்பட்டு நிற்கவேண்டுமென்று தன் மனதைத் திருத்திக்கொண்டு சமாதானத்தன்மைக்கு வந்துவிடுகிறுன்.

ஃ

ஜனசுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவானது ஒவ்வொரு மனிதனுடையவும்,ஒவ்வொரு குடும்பத்தினுடையவும்,ஒவ்வொரு ஸமூகத்தினுடையவும், ஒவ்வொரு தேசத்தினுடையவும் குணஸ்வபாவங்க

ளைச் செவ்வனே அறிந்துகொள்ளப் பழக்கிவிடுவதினால்—தேர்ந்த லௌகீக ஞானத்தையும், ஆழ்ந்த சாவதானமான சிந்தையையும், தன்னை எவரும் ஏமாற்றிவிட முடியாத தீரத்துவத்தையும், சொன்ன சொல் தவறாது நடக்குந் தன்மையையும், வாழ்வில் நல்ல பக்குவத்தையும், இனி வரப்போவதை முன்னதாக யோசித்து விவேகத்துடன் எண்ணித் துணிதலான தூரதிருஷ்டியையும், விசாலமான நோக்கையும் உண்டாக்கிவிடுகின்றது. ஒரு அரசாங்கமானது, ஜனசுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவு—அநுதாபம்—சிநேக குணம்—சகிப்புத் தன்மை இவற்றுடன் தனக்கு உட்பட்ட குடிகளின் காரியங்களை நோக்குமானால், அவர்கள் செய்கிற கிளர்ச்சிகளையும், துடுதுடுக்கு—கலகங்களையும் குற்றமாகப் பாராட்டாமல் அபிமானத்துடன் அவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றிக்கொடுத்து சமாதானப்படுத்திவிடும். இவ்விதமே, இந்த அறிவையும் இதனோடு சம்பந்தப்பட்ட அநுதாபம் முதலிய குணங்களையும் தொழிற்சாலைகளின் தலைவர்கள் கொள்வார்களாகில், தமக்குக் கீழிருந்து வயிற்றின் கொடுமையால் ஏவல்புரியும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் முதலியவற்றிற்குக் கோபங்கொள்ளாமல் அவர்களின் கோரிக்கைகளைத் தாராளமாய்க் கருணையுடன் பூர்த்திசெய்வித்து சாந்தப்படுத்திவிடுவர். இவ்விதமே, இந்த அறிவையும் இதனோடு தொடர்ந்த அநுதாபம் முதலிய குணங்களையும் ஒரு குடும்பத் தலைவனோ தலைவியோ கொள்வார்களாகில், அக்குடும்பத்துள் எத்துணை அபிப்பிராயபேத சிக்கல்கள், கலகங்கள், துவேஷங்கள், வேறுபாடுகள் இருப்பினும் அவை யாவற்றையும் சமரஸப்படுத்திப் பொறுமையை வகித்துக் குடும்பம் சமாதானமாய் நடைபெறும்படி செய்வித்துவிடுவார்கள். குடும்பச் சல்லியங்கள் எதுவுமே தோன்றாது ; மாமி மருகி சச்சரவுகளும் நேராது ; சகோதரத் துரோகங்களும் இவைபோன்றன எவையும் நிகழா. ஜனசுபாவ ஒழுக்கத்தைப் பற்றிய அறிவு உதித்தவுடனே மகத்தான ஞானமும் அத்துடன் உதயமாகின்றது. ஸமரஸப் பக்குவமும் தோன்றிக்கொள்கிறது. ஸாத்வீகத்தின் ஒளியும், ஆண்மையின் பிரதாபமும் ஓங்கி நின்று தாண்டவமாடுகின்றது. ஊருடன் கூடிவாழ உள்ளம் துள்ளிக் குதிக்கின்றது. இவ்வாறு உத்தம குணங்களுக்கு உறைவிடமாய் விளங்கும் ஜனசுபாவ ஒழுக்கத்தைப்பற்றிய அறிவில் ஒவ்வொருவரும் பயிற்சி பெறுவது அவசியமாம். இதற்கு உலகமே ஒரு பெரிய பள்ளிக்கூடமாகும். அங்ஙனம் உலகினிடையே பயின்றுகொள்ள திடசித்தத்துடன் விரும்புவார்க்கு எல்லாம்வல்ல இறைவனே பல சந்தர்ப்பங்களையும் உண்டுபண்ணிக் கொடுப்பார். அவ்வழியே சென்று இந்த அறிவை—உலக இயலைக் கற்றுத் தேர்ந்து உய்யக் கடவோம். நிகழ்வன எதுவும் நன்மைக்கே. யாவும்இறைவன் அருள்.

வைத்தியக் கைமுறைகள்.

வயிற்றுக்கடுப்பிற்கு:—

செய்யும் முறை:—ஒரு எலுமிச்சம் பழத்தை மேல் பாகத்தில் மாத்திரம் வில்லையாகச் சிறிது நறுக்கி ஒரு குன்றியளவு (அதிகம் ஒருபோதும் கூடாது) எடை அபினியைப் பழத்தின் மத்தியில் பொருந்த அமுக்கி முன் நறுக்கிய வில்லையைக் கொண்டே மூடி, அறுபட்ட பாகம் மேலே இருக்கும்படி ஏதாவது ஓர் இடுக்கியால் பிடித்துக்கொண்டு தணலில் வேக வைத்து எடுத்து ஆற்றிப் பிழிந்து சாப்பிட வேண்டும். முழுமையும் ஒரு வேளைக்கு ஏற்ற அளவு ஆகும். பழத்தை வேகச் செய்யும் பொழுது ரஸம் பொங்கி வழிந்து விடாமல் அடிக்கடி எடுத்தெடுத்து ஆற்றி யாற்றி வேக வைத்துக் கொள்க. பக்குவமாய்ப் பழம் வெந்தால் தான் அபினியில் பழம் ரஸம் கலந்து லாகிரியுமில்லாமல் விரைவிற் சுகுணத்தைக் கொடுக்கும்.

தீரும் வியாதிகள்:—முதல் இரண்டு வேளையிலேயே எப்படிப்பட்ட கடுப்பும் குணமாகி விடும். இது முக்கியமாய் உஷ்ண தேகிகளுக்கு அபானத்தில் அடிக்கடி குத்தி ஒருவிதமான எரிவையும் மயக்கத்தையும் உண்டாக்கி இரத்தமும் சீதமும் கலந்து போகும் போக்கிற்குச் சஞ்சீவியென்னலாம். இம்மருந்தைச் சாப்பிட்ட ஒரு மணி நேரத்திற்குள் அடிவயிற்று வலி நின்றுவிடும். இதனினும் குறைந்த கால்பாதி யளவில் பத்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கொடுக்கலாம். சிறு குழந்தைகளுக்கும் பாலர்களுக்கும் கண்டிப்பாய்த் தரக்கூடாது.

பத்தியம்:—கார வஸ்துக்களையும், வாயு பதார்த்தங்களையும் பாலையும் நீக்கிப் புசிக்க வேண்டும்.

ஃ

கண்ணொளி அதிகரிக்க:—

நோயில்லாததும், நன்றாய் முதிர்ந்ததும், கனமுள்ளதும் ஆறு வரைகளுள்ளதுமான கடுக்காயை ஆராய்ந்தெடுத்து, கொஞ்ச நேரம் முலைப் பாலில் ஊறப்போட்டு எடுத்து அழுக்கில்லாமற் கழுவி உலர்த்தி வைத்துக் கொண்டு காலை மாலை கொஞ்சம் முலைப்பாலில் உறைத்துக் கண்ணில் தீட்டி வருக. உறைத்தான பிறகு அந்தக் கடுக்காயை உடனே சுத்தமான துணியால் நன்றாய்த் துடைத்து உலரும்படி செய்து தூசி விழாத வெளியிடத்தில் வைத்துக் கொள்ளவும்.

தீரும் வியாதிகள்:—இது வயது சென்றவர்களுக்குக் காணும் வெள்ளெழுத்து படல முதலியவற்றை நீக்குகிறது. சிறுகச் சிறுக ஒளியை அதிகப்படுத்திக் கண்களைச் சுத்தப் படுத்துகிறது. சதா நீர்வடிந்து பார்வையை மட்டுப்படுத்தும் உபாதியை ஒரு வாரத்தில் நீக்கி விடுகிறது. காலையில் நித்திரை விட்டெழுந்தவுடனும், இரவில் நித்திரைக்குப் போகும்போதும் தீட்டி வருக.

கவனிப்பு:—கண்களுக்கிடும் மருந்துகளையும், உறைக்கும் கல்லையும், பால் கொள்ளும் பாத்திரத்தையும், இடும் கை விரல்களையும் எப்போதும் கண்டிப்பாய்க் கவனித்து சுசியாய் வைத்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

வீ. சா. ஐ.

பழமொழி குறிப்புகள்

2—அற்ப குணம்.

(4-ம் வால்யம் பக்கம்-652-லிருந்து.)

173. "தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்கு சகுனப்பிழை வேண்டும்."

இது அற்பனுடைய தடுக்குத்தனமான அற்ப குணத்தை நன்றாக விளக்கிக் காட்டும். மூக்கு இல்லாதவன் மூளி. அத்தகைய ஒருவன் எதிர்பட்டால் நல்ல காரியத்திற்குப் போகிற ஒருவனுக்கு அது ஒரு சகுனத் தடையாகும். அவன் போகிற காரியமும் மூளியாகிக் குறைவுபடலாம். அற்ப குணமுள்ளவன் தனக்கு ஒரு இடர் செய்து கொண்டாவது எதிரிக்கு ஒரு துன்பம் நேரிடுவதற்கு வழி தேடுவான் என்பது இதன் கருத்து. தனக்கு சங்கடம் வந்தாலும் தன் எதிரிக்கு இரட்டிப்புச் சங்கடம் நேர்ந்தால் அது அற்பனுக்கு அதிக சந்தோஷம். ஒருவன் ஒரு தேவதையை வேண்டித் தவம் செய்ய, அத்தேவதை பிரஸன்னமாகி நீ எதை விரும்புகிறாயோ அதிலும் இருமடங்கு உன்பக்கத்து வீட்டுக்காரனுக்கு உண்டாகுமென்று மூன்று வரங்கள் கொடுத்துப் போயிற்று. பிறகு அவன் தனக்கு ஸகல ஐச்வரியங்களுடன் வீடு வேண்டுமென்றான். அவ்விதமே அவனுக்கு உண்டாயிற்று. அதைப் போல் இரட்டிப்பு மடங்கு அடுத்த வீட்டுக்காரனுக்கு உண்டானது. அதைக் கண்டு வயிறெரிந்து, தன் வீட்டில் பாதி இடிந்து விழும்படி இரண்டாவது வரமாய் வேண்டினான். அவ்விதமே ஆகி, அடுத்த வீட்டுக்காரனுக்கு முழுவீடும் இடிந்து விழுந்தது. பின் மூன்றாவது வரத்தில் தனக்கு ஒரு கண் குருடாக வேண்டுமென்றான். அவ்விதமே ஆகி, அடுத்த வீட்டுக்காரனுக்கு இரு கண்களும் தெரியாமற் போய்விடவே, அதற்காக சந்தோஷப்படலானான். அற்பனுடைய குணம் அவ்வளவு கேடு கெட்டது.

174. "நாறல் மீனைப் பூனை பார்ப்பது போல"

நாறி யழுகாத புது மீனுங்கூடக் கவிச்சு நாற்றம் வீசும். இனி நாறிய மீனின் துர்க்கந்தமோ சொல்லத் தேவையில்லை. ஆயினும், பூனைக்கு நாறிய மீனின் மீதே அதிக விருப்பம். இது அற்பர்களுடைய அற்ப விஷயங்களிலேயே புத்தி போகிற போக்கை எடுத்துக் காட்டுவதாகும். புத்திமானான தம்பி தன் வீட்டிலிருந்தாலும் குடிகாரனான தமயன் அவனுடன் சேராமல் தன்னையொத்த மதுபானத் தோழர்களுடனேயே பொழுது போக்குவான். சில தூர்த்த ஸ்திரீகளின் ஸ்வபாவமும் உத்தமிகளோடு நட்பு கொள்ளாமல் கெட்டழிந்தவர்களோடேயே சகவாசம் கொள்ள வைக்கிறது. அற்பர்களுக்கு அற்ப விஷயங்களிலே தான் சதா அவா.

175. "நாற்றச் சோற்றுக்குப் பதம் பார்ப்பானேன்?"

நாற்றச் சோறு என்று தெரிந்த பிறகு அதை எறிந்து விடுவதை விட்டு அதை நல்ல சோறு அல்லவா என்று தொட்டுப் பதம் பார்ப்பது அறியாமையும் ஒரு வீண் வேலையுமே. அதுபோல் நெடுநாளாகத் துஷ்டனென்றும் அல்பனென்றும் தெரிந்திருக்கிறவர்களைப்பற்றி அவர்கள் ஒரு சமயம் இப்போது நல்லவர்களாய் இருக்கக்கூடுமென்று எண்ணுவதும், எண்ணி அவர்களுடன் பழகுவதும், பழகிப் பின் அவமானப்படுவதும் பேதமைத் தன்மைதான். எப்போது அற்பன் துஷ்டன் என்று தெரிந்ததோ அது முதல் என்றைக்கும் தூர விலகிக் கொள்வதே கௌரவம். அப்போது தான் நமது மானமும் நமக்கு நிலைக்கும். தெரியாத்தனமாய் அல்பர்களிடம் சிக்கிக் கொண்டவர்களைப் பார்த்து—"ஏன் ஏமாறினாய்—நாற்றச் சோற்றுக்குப் பதம் பார்ப்பானேன்?" என்று சொல்லி இப்பழமொழியை உபயோகிப்பர்.

176. "நிலத்துக்குத் தகுந்த கனியும், குலத்திற்குத் தகுந்த குணமும்."

அப்படிப் போலவே, அற்பனுக்குப் பிறந்த மக்களும், அவனுடன் வாழும் மனைவி முதலியவர்களும் அற்பத்தனமாகவே கிடப்பர். அற்பனுக்குப் பெரிய புத்தி வருமா? அவனுடைய குணத்திற்குத் தகுந்த குறுகிய புத்தியும் முரட்டுத்தனமுமே இருக்கும்.

177. "புழுக்கை கலம் கழுவித் தின்னாது."

எச்சிலை தின்பதே புழுக்கைக்கு வழக்கமாயிருக்கையில், அது பாத்திரம் கலம் இவற்றில் உண்டு அதைக் கழுவப்போவதேது? அற்ப குணத்துக்கு அது ஒரு பிழைப்பட்ட அசங்கிதச் செய்கையாக ஒருபோதும் தோற்றாது.

178. "நீண்ட புல் நிற்க நிழலாகுமா?"

அற்பன் ஒருவன் எவ்வளவு தான் மேலுக்குமேல் உயர்ந்துவிட்ட போதிலும், அவனுடைய அல்ப குணத்தால் பிறருக்கு என்றைக்கும் அவன் உபகாரியாகமாட்டான். எவ்வளவு உயர்ந்தாலென்ன, பழைய தரித்திரப்புத்தி போகாது.

179. "பித்தளை நாற்றம் அறியாது"

எத்தனை துலக்கினும் பித்தளை நாற்றம் போகாது. மறுபடியும் அது பளபளப்பு குன்றி மங்கிவிடும். ஒருவித நாற்றமும் காட்டும். அவ்விதமே அற்பர்கள் ஒருபொழுதும் தங்களின் ஈன புத்தியை விட்டு கௌரவ வழியில் திரும்பார்கள். ஒரு சமயம் திரும்பியது போல் வெளிப்பகட்டில் தோற்றினும், உள்ளுக்கு அந்தப் பழைய நாற்றமே வீசிக் கொண்டிருக்கும். சீக்கிரம் அவர்களின் பழைய இயல்பு—சொந்தக் குணம்—தெரிந்து விடும்.

180. "பனியை நம்பி ஏர் பூட்டினது போல"

இது அற்பனை நம்பி மோசம் போனவர்களும், ஏமாறியவர்களும் பிறகு அங்கலாய்த்துச் சொல்லும் பழமொழி. அற்பர்களை எந்த ஒரு நம்பிக்கையான காரியத்துக்கும், அவசரத்துக்கும் எதிர்பார்க்கலாகாது. அவர்களின் பகட்டுச் சொல்லை நம்பவும் கூடாது. சேர்த்தலும் ஆகாது. (தொடரும்.

சிறுமணித்திரள்

646. கடவுள்கூடக் குரூரமானவர் என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். ஏனெனில் அவரது பக்தர்களெல்லாம் வெகுவாகக் கஷ்டங்களை யனுபவித்திருக்கின்றனர். —மஹாத்மா.

647. நீங்கள் கல்வி கற்பதானது உங்கள் வயிற்றுப் பிழைப்பிற்கு உழைப்பதற்காக மாத்திரமல்ல. வாழ்க்கையின் தத்துவம் என்னவென்பதை யறிந்து மதப்பற்றுடனும் நீங்கள் வாழ விரும்புமாறு செய்வதும் கல்வியின் முக்கிய நோக்கமாகும். உங்கள் தினசரி அனுபவத்தில் தோன்றும் பல்வேறு கஷ்டங்களையும் சமாளித்துக் கொள்ளக்கூடிய மனோதிடமும் தூய்மையான உயர் எண்ணங்களும் உங்களுக்கேற்பட்டால் தான் கற்கும் கல்வி பயன் தந்திருப்பதாகக் கூறலாம்.—ஸ்ரீ. ஏ. ரேங்கசாமி ஐயங்கார்

648. தெய்வத்திற்குத் தொண்டு செய்வதென்றாலும், மானிடருக்குச் சேவை செய்வ்தென்றாலும் ஒன்றேயாகும். நான் இந்தியன் என்ற ஹோதாவில் இந்தியாவிற்கும், ஹிந்து என்ற ஹோதாவில் இந்திய முஸ்லிம்களுக்கும் சேவை செய்யாவிட்டால் கடவுளுக்காவது அன்றி மானிடருக்காவது நான் சேவை செய்ய முடியாது. ஒருவருக்கு உள்ளபடியே அன்பு இருக்குமானால் அவர் தாமாகவே வலுவில் உதவி செய்ய முற்படுவார். —மஹாத்மா.

649. உலகத்தை ஆட்டி வைப்பது அன்பு தான். அன்பைப்பற்றி எப்பெயரிட்டழைப்பினும் சரியே. சத்தியம் அசத்தியத்தை வெல்லுகின்றது. குரோதத்தை அன்பே ஜெயிக்கின்றது.

650. ஒரு காரியத்தை மற்றொருவர் தவறாகச் செய்கிறாரென்பதற்காக நான் அந்தக் காரியத்தைச் செய்யாமலிருந்து விடுவதா? உண்மை பேசுவதாக ஒருவர் பாசாங்கு செய்தால் அதற்காக நான் உண்மை பேசுவதை விட்டு விடுவதா?

651. மதத் துவேஷிகளாகவும், புராதன பழக்க வழக்கங்களின் துவேஷிகளாகவும் நமது நாட்டு யுவர்கள் திரும்புவார்களாகில், அதைவிட கோரமான நிலைமை வேறுவேண்டியதில்லை.

—பாபு ஷியாம் ஸுந்தர் சக்ரவர்த்தி.

652. பல நூற்றாண்டுகளாகச் சீர்திருத்தக்காரர்கள் எவ்வளவோ தாக்கியும் ஹிந்து மதமானது தன்னுடைய மேனி யழியாமலிருந்து வருகிறது. இனி ஏற்படக்கூடிய தகர்ப்புகளையும் அது சமாளித்துக் கொள்ளக் கூடுமென்று நாம் நிச்சயமாய் எதிர் பார்க்கலாம். அவசியமான சந்தர்ப்பங்களில் விட்டுக் கொடுக்கக் கூடியதாகவும், பரந்த நோக்கங்களுக்கு இடம் கொடுக்கக் கூடியதாகவும் ஹிந்து மதம் இருந்து வருவதே இதற்குக்

காந்தியடிகள் சாதாரண மனிதருக்கு மேற்பட்டவர். அதனால் அவருடைய கொள்கைகள் மிக்க உயர்ந்ததாக—அநுஷ்டிக்க முடியாததாக இருக்கின்றன என்று சிலர் சொல்லுகிறார்கள். வாய்ஞானம் பேச யாருமே ராஜா!

காரணம். கால தேச வர்த்தமானங் களை யநுஸரித்து ஹிந்துக்களின் ஸமூக முறையானது இதற்கு முன் மாறித்தான் வந்திருக்கிறது. சாஸ்திரத்துக்கும் அனுஷ்டானத்திற்கும் எவ்வித விரோதமுமில்லை யென்று கூற அர்தந்தக் காலங்களில் வியாக்கியான கர்த்தர்கள் தோன்றுமவில்லை.

பிரிந்த பிறகு மீண்டும் சேரவா? சேர்ந்திருந்த நாளில் பட்டபாடும், பார்த்த பொறுமையும், கேட்ட தூஷணையும், ஸகித்த ஸஞ்சலமும், ஆத்திரமும் நினைக்கில், இப்போது அவையேதுமில்லாத சாந்தமான பிரிவு நிலையே சுககரமென்று தோன்றுகிறது. சேரவும் வேண்டாம். பிறகு பகையும் வேண்டாம். நான் ஒரு இடம் காட்டவும், அங்கு நீ தூற்றவும் வேண்டாம். அறிமுகமாய் நிற்போம்.

653. பதினாயிரம் வார்த்தைகள் தெரிவிக்கும் ஒரு பொருளை ஒரு படம் வெகு சுலபமாகத் தெரிவித்துவிடும். எல்லா பாஷைகளையும் அந்தப் படம் பேசும். விளம்பரம் செய்ய வேண்டிய பொருட்களை ஒருங்குபட அமைத்து, மனதைக் கவரும் வண்ணம் அதற்கேற்ப அழகாகப் படம் வரைந்து பத்திரிகைகளில் பிரசுரம் செய்து பொது ஜனங்களின் மனதை இழுப்பது விளம்பர சாமர்த்தியங்களில் ஒன்றாகும்.

654. பலா பலனை எதிர்காலமே நிர்ணயிக்கும்படி விட்டு விடுங்கள்.

—பண்டித ஜவஹர்லால் நேரு.

கற்றாரைக் கற்றாரே காமுறுவர்.

நன்றாக வேலை தெரிந்த எஜமானனிடமே நல்ல வேலைக்காரனாக உள்ளவனுக்கு அதிக விருப்பம். மதன கேளீ விலாஸத்தில் மிக்க ரஸிகனான யுவகனிடத்தே யுவதிக்கு அதிக வாஞ்சை. கலா நிபுணர்களிடத்தில்தான் கலாஞானம் வாய்ந்தோர் களிப்புடன் குலாவுவர். சாமர்த்தியசாலிகள் தங்களையொத்த—மேன்பட்டவர்களான சாமர்த்தியசாலிகளையே விரும்பிச் சிலாகித்து அவருடன் சேர்ந்து அன்பு மிகுவர். இவ்விதமே அழகு மற்றொரு அழகை விரும்பும். சிவப்புக்குக் கருப்பு வந்து அமைவது தொலையாத தலைவிதி!

சில தேசபக்தர்கள் சிறைச்சாலையில் பட்ட கஷ்டத்தினால் மறுபடியும் அங்கு செல்வதற்கு ஏதுகரமில்லாத வழிகளில் காலைவைத்துக்கொண்டு, குற்றங்களில்லாத பேச்சுகள் பேசி வெகு ஜாக்கிரதையாய் இருக்கிறார்கள்.

ழகர—ளகர பேதங்கள்.

(4-ம் வால்யம் பக்கம் 641-லிருந்து.)

49. வழி—பாதை
வளி—காற்று, சுறைக் காற்று.

50. வழை—புன்னை மரம்.
வளை—கங்கணம், கைவளை, நுழைவளை

51. வாழி—வாழ்த்தல்
வாளி—அம்பு, ஓர் காதணி

52. வாழை—வாழைமரம்
வாளை—ஓர் மீன்

53. விழவு—திருவிழா, மிதுன ராசி
விளவு—விளாமரம்

54. விழா—விழவு
விளா—விளாமரம்

55. விழி—கண், விழி யென்னேவல்
விளி—விளி யென்னேவல்

56. விழித்தல்—கண் திறத்தல்
விளித்தல்—அழைத்தல்

57. விழைதல்—ஆசைப் பெருக்கம்
விளைதல்—உண்டாதல்

58. விழைவு—ஆசைப் பெருக்கம்
விளைவு—மேகம், வயல் விளைதல்

எழுத்துகளினோர் வகைப் பிரிவு

1. ஆண் எழுத்துகள் :—அ, இ, உ, எ, ஒ.
2. பெண் எழுத்துகள் :—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.
3. அலி யெழுத்துகள் :—ஃ, மெய் 18.
4. அமிர்த எழுத்துகள்:—அ, இ, உ, எ, க, ச, த, ந, ப, ம, வ. (இவைகளில் ஏதேனும் ஒன்று நூலுக்குத் தலைப்பில் நிற்கும்.)

காணாதவரையில் மகான் என்று துதிக்கிறார்கள். கண்டுவிட்ட பிறகோ அலக்ஷியமனதாகிறார்கள்—பழிக்கிறார்கள். தூர இருந்தால்தான் மகிமை!



(முன் பக்கம் 615-லிருந்து.)

501. People are always talking of perseverance and courage and fortitude; but patience is the finest and worthist part of fortitude—and the rarest too. RUSKIN.

விடாமுயற்சி, தைரியம், பொறுமை இவைகளைப் பற்றி இடைவிடாது ஜனங்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பொறுமையானது, சிறந்ததும், தகுதியுடையதும், அருமையும் ஆகும். ரஸ்கின்.

502. Be a philosopher; but amidst all your philosophy be still a man. HUME.

தத்துவ விசாரியாய் நீ இருப்பாய். உன்னுடைய எல்லா தத்துவ ஞானத்திலும் மனிதனைப்போலவே இரு. ஹியூம்.

503. Character is higher than intellect…A great soul will be strong to live, as well as to think. EMERSON.

அறிவைவிட குணமே மேன்மையுடையது. நினைத்து விசாரணை செய்வதற்கும், வலிமையோடு ஜீவிப்பதற்கும் பெரியதான ஆத்மா ஏற்றது. எமர்சன்.

504. What is this Christmas to you?…The Child is born to bring you the promise of new life. RUSKIN.

இந்தக் கிறிஸ்து பிறந்த நாள் கொண்டாட்டம் உனக்கு எதற்காக? குழந்தை பிறப்பது——உன்னுடைய புதிய வாழ்க்கையில் உறுதிப்பாட்டைக் கொண்டுவருவதற்காகவே. ரஸ்கின்.

505. It is a world full of hearts…and a serious world, with all its folly. DICKENS.

ஹிருதயங்கள் நிறைந்ததொரு உலகமிது. எல்லாப் பிழைகளும் படிப்படியாகக் குடிகொண்டதொரு உலகமும் இதுவே. டிக்கன்ஸ்.

506. One thing I solemnly desire to see all children taught—obedience; and one to all persons entering into life—the power of unselfish admiration. RUSKIN.

அடக்கம் என்பதை எல்லாக் குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுக்கவும், தன்னலம் கருதாத கண்ணியத்தின் சக்தியை—வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் கற்பிக்கவும் நான் ஆர்வங் கொள்ளுகிறேன். ரஸ்கின்.

507. The trees now naked groaning, Shall soon wi'leaves be hinging, The birdies dowie moaning, Shall a' be blithelly singing. BURNS.

காபிஹோட்டல்கள் பெருத்துவிட்ட பிறகு பிராமணரல்லாதாரின் மிட்டாய்க் கடைகள் சுருங்கிப்போயின. அவர்களும் வேறு கடைக்காரர்களாயினர்.

இலைகள் உதிர்ந்தால் மரங்கள் வெறுமையாகி நிற்கின்றன. சீக்கிரம் இலைகள் பெற்று அவைகளால் உண்டாகும் ஒலிக்கையையும் அடையும். பறவைகள் துக்கத்தோடு செயலற்று நிற்கின்றன. துக்கம் போய் விரைவினில் களிகொண்டு பாடுவதும் கூடும். பர்ன்ஸ்.

508. Not rotting like a weed, But, having sown some generous seed, Fruitfull of further thought and deed. TENNYSON.

உதவியற்றப் பூண்டுகளை உலரவைப்பது போலல்லாமல், பின்னல் வரக்கூடிய நினைப்புக்கும், செய்கைக்கும் பயன் தரக்கூடியதோர் உதார குணமுடைய விதையை விதைத்திடல் வேண்டும்.

டென்னிஸன்.

509. The will of God respecting us is that we shall live by each other's happiness, and live; not by each other's misery, or death. RUSKIN.

நாம் ஒருவர்க்கொருவர் சந்தோஷமாக இருந்து வாழவேண்டியதென்பதே கடவுள் நம்பால் வைத்திருக்கும் அருளன்றி; துன்பத்தில் மூழ்கியிருக்க வேண்டுமென்பதில்லை. ரஸ்கின்.

P. G. குலசேகரன்.

காபி பலகாரம் உண்டவர்கள் பழய நீர் சாதம் உண்ணும் காலத்திற்கும் வந்திருக்கிறார்கள். இப்போதுள்ளவர்கள் காபியில்லாமல் இருக்க முடியவே முடியாதென்கிறார்கள். முன்னிருந்தவர்களும் அவ்விதமே சொன்னவர்கள்தான். வாழ்வு ஒரு நிச்சயமில்லை. எல்லாம்பணத்தின் வரவைப் பொறுத்தது. அது சுருங்கிவிடில் எல்லா திமிரும் தடபுடலும் சுருங்கிவிடுகிறது. மண்சட்டிஎன்றைக்கும் கிடைக்கும். பொன்சட்டியோஙிலையிலே.

புஸ்தகப் பரிசு தருவதில் ஒரு எச்சரிக்கை.

நீ எவருக்கு ஒரு புஸ்தகம் பரிசாகத்தரச் சென்றாயோ அவர் எவரிடமேனும் பேசி நிற்கையில் அதை ஒருபோதும் தராதே. தந்துவிடில் அவருடன் பேசி நிற்பவர் அப்புஸ்தகத்தை நாளை கொண்டுவந்து தருவதாகக் கூறிப் பெற்றுச் சென்றுவிடுவார். அது திரும்புவது அபூர்வம். யாருக்கு நீ அப்புஸ்தகத்தைத் தரப் பார்த்தாயோ அவர் அதைப்பெறுதற்கு இல்லாமலும், நீ கொடுத்தும் அவருக்கு உதவாமலும் மற்றொரு "புஸ்தகப்பிடுங்கி"யின் கைக்குப் போய்விடுகிறது.

அமிர்த குணபோதினியின் 5-வது வருட
வாழ்த்துப் பாக்கள்.

வாழிய உலகே! வாழிய உலகே!
வாழிய பெரிதே! வாழிய பெரிதே!
கூறும் அமிர்த குணபோ தினியே!
என்பேர் தலைக்கோடே எங்கும் உலவும்
கொழுந்தமிழ் அமிர்த குணபோ தினியே!

எனக்குத் தாயாய் இன்மொழி கூறியும்
சோதரி யாகச் சொற்பல கூறியும்
தோழி யாகச் சூழ்ச்சி சொல்லியும்
கண்ணே யாகக் கவின்வழி காட்டியும்
குருவே யாகக் கொள்கை கூட்டியும்

தந்தையே போன்று மந்தரஞ் சாற்றியும்
முந்திறை போல முறைமை செய்யும்
கூர்தமிழ் அமிர்த குணபோ தினியே!
வாழி நீயே! வாழி நீயே!
உலகுக் கொருகதிர் ஒப்ப உலவிக்

குலவும் அமிர்தக் குணபோ தினியே!
வாழிய பெரிதே! வாழிய பெரிதே!
நன்மதி யூட்டி நன்னெறி நாட்டும்
கொங்கார் அமிர்த குணபோ தினியே!
குவலயஞ் செழிக்க கூர்ந்து வாழி!

நாலாண் டாக நலஞ்செய் துலவும்
கோல வமிர்தக் குணபோ தினியே!
வாழிய சிறந்தே! வாழிய சிறந்தே!
நாயுடு குலத்து நல்லா சிரியர்
இராமாஞ் சலுவை இன்று யாகப்

பெற்ற போதினி பிறங்க வாழி!
வேளாண் குலத்து விளங்கு வள்ளல்

இராஜகோ பால எழிலார் முதலியார்
தன்னைத் தந்தையாத் தரணியிற் கொண்ட
கோதிலா வமிர்த குணபோ தினியே!

செழிக்கச் சிறந்து சீரிதின் வாழி!
ஐந்தாம் வயதை அழகுறப் பெற்ருய்
ஆயுமிவ் வாண்டும் அறிவுரை யருளி
வாழிய நீயே! வாழிய நீயே!
கன்னலோ பாகோ கண்டோ சீனியோ

முக்கனி ரசமோ மொழியமு தோவென
இனிக்குங் கட்டுரை ஏந்திய நீதான்
இன்புற வாழ்க! இறைவ னருளால்
புத்தமு தனைய பொருடரு போதினி
வாழி! வாழி! வளம்பல பெற்றே!

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

மணியாருங் கடலுலகோர் உய்யவெனப் பொருள்கொண்டு வந்தே ஈயும்
திணியாரும் மாதாந்த சஞ்சிகையாய்ச் சென்னையிலே சிறக்கத் தோன்றும்
அணியாருஞ் செந்தமிழ்சேர் அமிர்தகுண போதினிதான் வாழி! வாழி!
பணியாருங் கடலுலகிற் பல்லாண்டு பல்லாண்டு பரவ வாழி!


வெண்பா.

“ செந்தமிழில் நண்பொருளே செப்புஞ் சிறப்புடைத்தாய்
முந்தறமே காட்டு முறையினோடே—வந்தொளிரும்
பொற்பார் அமிர்தகுண போதினிதான் இப்புவியில்
நற்பேரின் வாழி நலத்து ”

சகோதரி S. அமிர்தம்மாள்,
ஆயுர்வேத டாக்டர்.

பிழைப்பு கெட்டவர்களும், ஏமாற்றித் துரோகம் செய்தவர்களும், கொலைபாதகர்களும், துராத்மாக்களும் தங்கள் ஊரில் ஜீவனம் இல்லையென்று கப்பல் ஏறி விடுகிறார்கள். இவர்களிடம் வெளிநாட்டார் ஏமாறிவிடாதிருக்கக்கடவர். அங்கிருந்தபடி தன் ஊராரை மோசம் செய்வதும் உண்டு.

சேர்ந்திருந்தபொழுது “பாவி மனிதன்” என்று தூஷிப்பவன், நாம் விலகி ஒதுங்கிக்கொண்ட பிறகு தங்களைக் குரு ஸ்தானமாக நினைத்திருக்கிறேன் என்கிறான். இத்தகையோரிடம் தூர நிற்பதே கௌரவம் கெடா வழி,



கடவுளுக்குக் கூலி ஏன்?

சகல பாக்கியத்துடனும் திட ஆரோக்கியத்துடனும் இருக்கும் பொழுது கடவுளைக் கனவிலும் நினைப்பதில்லை. கடவுள் ஒருவர் இருக்கிறாரென்றுகூடத் தோன்றுவதில்லை. தனக்காவது குடும்பத்தில் யாருக்காவது வியாதி ஏற்பட்டுவிட்டால், வருகிறதப்பா கடவுள் நினைப்பு! மேலும் வியாதி பலப்பட்டாலோ, ஐயோ! கடவுளே! திருப்பதி வெங்கடேஸ்வரா! நீதான் காப்பாற்றவேண்டும், அடுத்த வருஷம் அவசியம் முடியெடுத்து விடுகிறேன்—விநாயகமூர்த்தியே! வியாதியை சொஸ்தப்படுத்த வேண்டும்; மோதகமும் கொழுக்கட்டையும் செய்து வைக்கிறேன். ஆறுமுகக் கடவுளே! ஆறு ரூபாய் காணிக்கை வைக்கிறேன்; நீதான் காப்பாற்றவேண்டும்—என்று மனதில் தோன்றிய தெய்வங்களுக்கெல்லாம் பிரார்த்தனைகள் சரமாரியாகப் பொழிந்துவிடும். இன்புற்றிருக்குங்கால் கடுகளவும் நினையாது, துன்பம் வந்துற்றகாலை கடவுளைக் கூவிக் கூலி கொடுப்பதா? அவர் கேட்கிறாரா? கொடுக்கவேண்டுமென்ற விதி யாதேனு முண்டா?

மனிதனும் மற்றுமெல்லா விதமான ஜீவராசிகளும் கடவுள் படைப்பென்று கயவர் முதல் கற்றவர் வரை சொல்லாமலே தெரிந்த விஷயமன்றோ? நம்மைப் படைத்தவர் நமது நடப்பையும் செய்கையையும் சீர்தூக்கிக் கூலி கொடுக்கவேண்டியதிருக்க, நாம் கடவுளைக் கூவிக் கூலி கொடுப்பது நன்றென்று அடியேனுடைய சிற்றறிவிற்குத் தோன்றவில்லை. ஏனெனில், படைத்தோன் காக்கக் கடமைப் பட்டுள்ளான். கூலிக்காகப் படைத்தவனல்லன். உதாரணமாக, உலக நடப்பைக் கண்ணுற்றால் தெற்றென விளங்கும். ஓர் குடும்பத்தில் யாவரேனும் வியாதியால் பீடிக்கப்பட்டால் அக் குடும்பத்தலைவன் மற்றவை யெல்லாம் அப்புறம் வைத்து, கண்ணுங்கருத்துமாயிருந்து காப்பாற்றுகிறானல்லவா? ஏன்? அதுதான் அவனை அறியாமலே உதிக்கும் ஓர் "கடன்." இதற்காக அத்தலைவனுக்குக் கூலி கொடுப்பதுண்டோ? இஃதேபோன்று கடவுளும் கடமைப்பட்டுள்ளாரென்று உலகத்தவர் ஒப்புக்கொள்ளக்கூடியதே!

உலகவாழ்வே 'சுகதுக்கம்'' என்ற "சுழற் சக்கரத்தில்'' ஈடுபட்டுள்ளது. இன்புறும்போழ்து மறப்பானேன்! துன்புறும்போழ்து நினைத் தழுவானேன்? காசி இராமேஸ்வரம் போகவேண்டியதில்லை; கானகத்தே செல்லவேண்டியதுமில்லை. அக்கருணாநிதியின் அருளைப்பெற.

சிலர் நமக்கு ஏதாவது ஒரு வேலை செய்தால் அதை இலவசத்திற் செய்ததுபோலவே காட்டிவிட்டு, முடிவில் நம்மிடமிருந்து ஏதாவது ஒரு பொருளைப் பெற்றுக்கொண்டு போய்விடுகிறார்கள். அது அவர்கள் செய்த வேலைக்குக் கூலிபோலும்! இவர்களுக்கே ஆப்த நேசர்கள் என்று பெயர்.

"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கு மாற்றி
மனத்திலே பேதாபேதம் வஞ்சனை
களவும் பொய்யும்
சினத்தையுந் தவிர்த்து"

காலையில் எழுந்தவுடனும், இரவில் துயிலுமுன்னும் ஐந்து நிமிஷமாவது பயபக்தி விஸ்வாசத்துடன் சிந்தையை ஓர் நிலையில் நாட்டி சாட்சாத் ஜெகதீசரை ஸ்தோத்திரம் செய்துவந்தால் அன்னவருடைய அன்பிற்கும் அருளுக்கும் பாத்திரவாதியாவதுடன், மலைபோல் வரும் விபத்தும் பனிபோல் நீங்குமன்றோ? இதை விடுத்து துன்பம் வந்துற்றகாலை மட்டும் கடவுளைக் கூவிக் கூவி கொடுப்பது நன்றோ?

" குழந்தையும் தெய்வமும்
கொண்டாடு மிடத்தே."

மு. நா. தெண்டாயுதபாணிப் பிள்ளை,
கோலாலம்பூர்.

[கடவுள் கூவி கேட்கவில்லை. மனோபக்குவ மொன்றையே விரும்புகிறார். அவரை மறந்து பொன்னாசையிலுழன்ற மனிதன், தனக்கு இடருற்றகாலையில் அவரை நினைக்கும் ஒரு பக்குவம் பெறுகிறான். அந்தப் பக்குவ வழியில் தன் பொன்னாசையையும் விடுத்து, அந்தப் பொன்னிலிருந்து ஓர் பாகம் செலவிடவும் மனது திரும்புகிறன். தன் பொன் குறைந்துவிட்டதென்று எண்ணாதை ஒரு உயரிய தன்மைக்கும் அவன் எட்டுகிறான். அவன் ஒரு சாமான்ய மனிதன்; அந்த சாமான்யதன்மையில் தோன்றுகிற இந்தச் சிறிய பக்குவம் பின்னுக்குப் பெரிதான ஞானத்தேர்ச்சியிலும் ஒருகால் அவனை இழுக்கக்கூடும். எவ்வழியிலேனும் அவன் கடவுளை நினைக்கப் புகுவது நல்லதே. அது கடைசியில் அவனுக்கு நன்மையே செய்யு மாதலின், ஒருவன் கடைத்தேறுவதற்கு இந்த அல்ப வழியுங்கூட ஒரு ஏணிபோன்று உதவலாமென நினைத்தே பெரியோர்கள் இந்தப் பிரார்த்தனை மார்க்கத்தை அவ்வளவுக்கு ஆக்ஷேபிக்கவில்லை போலும். தனது அழகிய நீண்ட கேசங்களைக் கூடத் தன் பிரார்த்தனைக்காக ஒரு பெண்மணி இழக்க ஒப்பும் மனோவுறுதியைக் கவனிப்பின், இந்தச் சிறிய பள்ளிக்கூடமும் பின்னுக்குப் பெரிய ஞானத்தையும் திடமான பக்தியையும் கற்பிக்கலா மென்று தோன்றுகிறது. இறைவனை நினைக்க வியலாத இருட்படலம் கவ்விய ஹிருயத்தில் இச்சிறு மின்மினியின் வெளிச்சமும் பாகதிக்கு ஒருசிறிது வழியுணர்த்துதல் கூடுமென்பதே விவேகிகளின் துணிபு. உலகம் செல்லும் பாதையிலேயே அதனை விடுத்து, அந்தப் பாதையினூடே சிறிது சிறிதாக ஞானமுணர்த்துதலாகவும் இது இருக்கலாம். நன்றாய் முடியின் யாவும் நன்றே. ப-ர்.]

II

ஐயா,

தங்கள் பத்திரிகை வாயிலாய், ஸ்ரீ, ஸ்ரீமத், ஸ்ரீமாந், ஸ்ரீமதி, ஸ்ரீலஸ்ரீ, என்பனவற்றின் பொருளை நன்கு விளக்கமுறத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீ, ஸ்ரீமத் என்னும் சொற்கள் மனுஷப் பெயர் முன்னிலும் தெய்வப் பெயர் முன்னிலும் சாதாரணமாய்க் காண்கிறோ மெனினும், பொருளை அறியாமையினாலேயே இக்கேள்வி கேட்கின்றேன்.

ஆ. கணபதிப் பிள்ளை.

உறவினரும், நண்பரும் செல்வம் கிடைத்தபின்பு தூரப்போய் விலகித் தங்களையொத்த செல்வவான்களை மட்டுமே உபசரிப்போராகி விடுகிறார்கள்.

நாழி யரிசிக்கே நாம்!



(சித்திர விளக்கத்தைக் காண்க.)

நாழி யரிசிக்கே நாம்!

(சித்திர விளக்கம்)

'நாழியரிசிக்கே நாம்.' ஆம், உண்மையே. 'வயிறே உன்னோடு வாழ்தல் அரிது' என்பது முற்றிலும் சரி. ஒருவரைப் போய்ச் சேவித்து அவரிடம் நெற்றி வியர்வை நிலத்தில் வீழ ஊழியம் செய்வது எதற்கு? பற்களைக் காண்பித்துக் கெஞ்சி ஏதாவது தரும்படி மானம்விட்டுக் கேட்கும்படியும் நேரிடுவது எதற்கு? மனைவிமக்களைப் பிரிந்து தன்னந் தனியனாய் சொந்த ஊர்விட்டுக் கடல் கடந்து அன்னிய நாடுகளுக்கு ஓடுவது ஏன்? போய்ச் சேருகிற அந்த அந்நிய நாட்டில் தனக்கு எப்படியும் தக்க லாபமும் நல்ல வருமானமும் கிடைக்குமென்று பேராசை கொள்ளுவதும், பெரிய பணக்காரனாகலாம்-மாடிவீடு கட்டலாம் என்று மனக்கோட்டை போடுவதும், தன் ஊர் சேர்ந்ததும் கல்யாணம் செய்துகொண்டு பந்துஜன மத்தியில் சுகிக்கவேண்டுமென்று கனத்த ஆசையுடன் வாயூறுவதும், அதற்காக எவ்வளவு மானஹீனமான வேலைகளையும் செய்ய ஒப்பிச் சொத்து சேர்க்க முயன்று என்னென்ன ஆவல்களையோ மனதில் நீளப்பாவித்துக்கொண்டு தவிப்பதும் எதற்காக? அரசன் என்கிற பெயரைத்தாங்கி எந்த சமயம் எவரால் கொல்லப்படுவோமோ என்ற உட்கவலையுடன் எப்போதும் தன்னருகில் காவல் வைத்துக்கொண்டு அந்தப் பெருமையில் நிற்பதும் ஏன்? சங்கீத நிபுணனாகிப் பல பிரபுக்களின் ஸமுகம் சென்று பாடல்கள் பாடி ராகங்கள் இழுப்பதும் ஏன்? இவ்வளவு பாடுகளும் பிழைப்பு ஜீவியங்களும் எலும்புக் கூடான—மாமிசத்தால் மூடப்பட்டு மினுக்கப்படுவதாகிய இந்தப் பாழான உடம்பைக் காப்பாற்றிப் போஷிப்பதற்காகத்தானே? போஷிக்காம லிருந்தால் என்ன என்றாலோ வயிறு சும்மா இருக்க ஒப்புகிறதா? பசியென ஒரு உணர்ச்சியைக் காண்பித்து, அது செய்யும் வேதனையும் கொடுமையும் சொல்லப்போமோ? அந்தப் பாழும் வயிற்றின் கொடுமையால் தான் இத்தனை கஷ்டங்களையும் இழிவுகளையும் சகித்து ஏற்றுக்கொள்ளவேண்டி யிருக்கிறது.

நெற்றி வியர்வை நிலத்தில்வீழ நித்தநித்தம்
சுற்றி வழிபட்டும் சுகமறியோம் என் தாயே!

என்று இந்திய மக்கள் நெஞ்சுவாடிப் பாரதத்தாயை நோக்கிப் புலம்புவதும் வயிற்றுப்பாட்டுக் கொடுமையைத் தாளாமல்தான். அந்த வயிற்றுக்கு வேண்டியதெல்லாம் என்ன?—அது ஒரு நாழியரிசியே. அந்த ஒரு நாழியரிசியில் அந்த வயிற்றின் பசி உபாதை தீர்ந்துவிடலாம். அந்த நாழி யரிசி கிடைப்பதற்கும், அதைத் தேடி யுண்ணுதற்குமேதான் இத்தனை பாடுகளும் பரதவிப்புகளும்! ஆகவே,

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழினுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்

—என்றது வேத சரி.



பந்நா தேவி.

I

ராஜபுதனத்தின் எல்லையோரத்திலுள்ள கோட்வார் மலைக்கோட்டையில் கொலுமண்டபத்தில் ஒருநாள் மந்திரிகள் நால்வர் தலைகவிழ்ந்து குந்திக்கொண்டிருந்தனர். அவர்கள் நடுவில் நாகராசனாகிய மன்சிங்கு ஓர் மெத்தைமீது சாய்ந்தவாறிருந்தார். அவருக்கு வயது எழுபதிருக்கும். தேகம் தளர்ந்து தாடிகள் நரைத்திருந்தது. முகத்தில் விசாரக் குறிகள் காணப்பட்டன. அவரைச் சூழவிருந்தவர் முகத்திலும் துக்கம் தோன்றியது.

ஃ

மன்சிங்கின் மக்கள் திரண்ட சேனையுடன் தெக்கணம் சென்று எதிரிகளோடு சண்டை செய்துகொண்டிருந்தனர். அவர்கள் ஊரில்லாத அச்சமயம் பார்த்து, கூர்ச்சரத்தையாளும் பெரோஜிஷா நாகர்மீது படையெடுத்து வந்தார். மன்சிங்கு நாகரைக் காப்பது மாளாதெனக் கண்டு தம் மனைவி மக்களை அழைத்துக்கொண்டு கோட்வார் மலைக்கோட்டைக்கு வந்தார். களஞ்சியங்களில் தானியங்கள் கிடந்தன. ஏரி குளங்களில் ஏராளமாகத் தண்ணீர் இருந்தது. ஆயினும் எதிரிகளை எதிர்க்கப் போதுமான படையில்லை. கூர்ச்சரத்தார் கோட்டை மதிலை வளைத்துக்கொண்டால் மன்சிங்கு வெளியே போவதற்கில்லை. உள்ளேயிருப்பதற்கும் இயலாது. வெளியிற் செல்லின் எதிரிகள் எளிதில் தன்னை மடிப்பதுண்மை. உள்ளேயிருப்பின் எணி வைத்திறங்கி எதிர்த்துக் கொல்வது நிச்சயம்.

ஃ

ஆகவே, மன்சிங்கும் மந்திரிகளும் மணிமண்டபத்தில் செய்வதின்னதெனத் தோன்றாது திகைத்துக்கொண்டிருந்தார்கள். சிலர், இருக்கும் படையுடன் எதிரிகளை ஏன் எதிர்க்கலாகாதென்றும், வேறு சிலர் வெளியிலிருந்து வேண்டிய சேனையை ஏன் வரவழைக்கலாகா

அநேக குழந்தைகளைப் பெற்றுவிட்டவர்கள் பாகம் பிரிக்கும்பொழுது மக்களுடைய பகைமையை ஏற்கநேர்ந்து அலங்கோலப் படுகிறார்கள்.

தென்றும் வாதித்தனர். எவ்வளவு வாதித்தும் அவர்களுக்குத் தோல்வியன்றி வெற்றிவரும் நம்பிக்கையில்லை. அயல்நாட்டரசரை உதவிக்கு அழைக்கலாமெனின், பெரோஜிஷாவை வெல்பவர் ஒருவருமிலர். அல்லது பிள்ளைகளுக்குத் தெரிவிப்பதெனின், நெடுந்தூரத்திலுள்ள அவர்கள் உடனே வருவதாகாது. ஆகையால் எவ்வாறு யோசிக்கினும் சாவது அல்லது சமாதானமாவதன்றி வேறு வழி காணவில்லை. சமாதானமென்றால், தம் பெண்மக்களை எதிரிகளின் வசமாக்குவதாகும். அவ்வித அவமானத்திற்கு உட்படுவதிலும், இறப்பது இனிதன்றோ ?

ஃ

இவ்வாறு எண்ணி யெண்ணி ஓர் முடிவுக்கும் வராமல் கடைசியில் சமாதானமாவதாக வெளிக்குச் செய்தியனுப்பி, உண்மையில் எதிரிகளை எதிர்ப்பதென்றும், இயலாவிடின் பெண்களெல்லோரையும் தீயில் விழச்செய்து பிறகு தாமும் சண்டையில் மடிவதென்றும் பேசினார்கள்.

II

பந்நாதேவி யென்பவள் மன்சிங்கின் மகள். அவள் பேருக்கேற்ப முகமானது மாணிக்கம்போலும் துலங்கும். துவண்ட இடையும், மெலிந்த தேகமும் உள்ளவளாயினும், கூறிய புத்தியும், அஞ்சா நெஞ்சும் உடையவள். அவளுடைய அகன்றுயர்ந்த அழகிய நெற்றியையும், அந்நெற்றியைச் சூழ்ந்தடர்ந்த சுரிகுழலையும் காண்போர் இஃது சந்திரனோ, இஃது சந்திரனை மூடிய மேகமோ என்றையுறுவார்கள். கறுத்து நீண்ட கண்கள் சேற்கண்டையோ, மான்பார்வையோ மற்று யாதோ அறியோம். திரண்டு சிவந்த கன்னங்கள் செந்தாமரையைப் பழித்தது. இத்துணை அழகும், அறிவும் உடைய இவள்மீது இவள் தந்தைக்கு அன்பு உண்டாகக் கேட்பானேன் ? தம் மக்கள் பலருக்குள்ளும் தம் அன்பெல்லாம் இவளிடத்தேயாம்.

ஃ

தம் ஆருயிர் மனைவி யிறந்து பதினான்கு வருடங்களாயினும், இப் பதினான்கு வருடங்களாகத் தம் துன்பத்தை நீக்கி இன்பத்தைத் தந்து, இன்னும் இவ்வுலக வாழ்க்கையில் ஆசையை மூட்டுபவன் இவ்வணங்கியலாளன்றோ? ராஜகாரியங்களில் கருத்தைச் செலுத்தி, மனஞ்சலிப்புற்று, மாளிகையில் நுழையும்போதெல்லாம் தன் பேச்சாலும் நடையாலும் அச்சலிப்பைப் போக்கிச் சந்தோஷத்தைத் தருபவள் இச்செல்வியன்றோ? நெடுங்காலம் தம்மோடிருந்து இன்பம் நல்கிய காதன்மனையாள் கடந்ததை எண்ணிக் கவலைப்படும்போதெல்லாம் தன் குணங்குறிகளால், அக்கவலையை நீக்குபவள் இக்காரிகையன்றோ ? துக்கம் என்பது இன்னதென்றறியாமல் பூங்குயில்போலும் செல்லமாக வளர்ந்த சின்னஞ்சிறிய இச்சிறுமியிடத்தில் தன் துன்பத்தை வெளியிடுவதெவ்வாறோ ?

ஃ

இவ்விதம் எண்ணிக்கொண்டே மன்சிங்கு தம் மாளிகைக்குள் நுழைந்தார். அங்கு தம் மக்களைக் கண்டு வார்த்தையாடாமல் நின்றார். வழக்கப்படி தம் அருமை மகள் அவரிடம் ஓடி, அவருடையகையைக் கோர்த்துக்

கொண்டு அன்புடன் வார்த்தையாடியும் அவர் வாய் திறந்திலர். அவருடைய முகங் கருத்து, கண்கள் சுருங்கி, நெற்றியில் விசாரக்குறிகள் விளங்கின. அவர் வலக்கண்களில் நீர்த்துளியொன்று தோன்றித் ததும்பிக்கொண்டிருந்தது. அவரைக் கண்டு பெண்கள் பலரும் சங்கதியென்னவென்று தொந்தரை செய்தார்கள். நெடுநேரம் பொறுத்து அவர் வாய்திறந்து மெதுவாய், "என் மக்களே, என் செய்வோம்? சீக்கிரத்தில் பகைவர்களால் நாம் மடியவேண்டியவரானோம். கடவுளருளன்றி நமக்கு வேறு கதியில்லை" என்று இரக்கக் குரலுடன் கூறினர்.

ஃ

அச்சங்கதி கேட்டுப் பெண்களுக்குத் துக்கம் மூண்டது. கண்களில் மாலை மாலையாக நீர்வடிந்தது. சிறியோர் வாய்விட்டுக் கதறிட, பெரியோர் பெரிதும் துக்கித்தனர். குழந்தைகள் கூக்குரலிட்டனர். மன்சிங்கின் அன்னை சுமார் தொண்ணூறு வயதுடையவள். தலைவெளுத்து தேகம் திரைத்து, முதுகு வளைந்து, கையில் தடியேந்தியவள். மகன் சொன்ன சொல்லைக் கேட்டு, தடியைத் தரையிலெறிந்து, இடுப்பிற் கையைவைத்து, கம்பீரமாய்ப் பார்த்து, "மகனே மன்சிங்கு, உன் வார்த்தையைக் கேட்டுமகிழ்ந்தேன். மாதர்க்கு வேண்டியது மணிமாலையன்று; வைர நகைகளன்று; பட்டாடையன்று;பலபலதைலங்கள்அன்று; விளையாட்டன்று; விநோதப்பாட்டன்று; **மானமேயாகும்.** மானம் போவதிலும் உயிரை இழப்பதே உசிதம். கற்பின் மடவார்க்கு மானத்திலும் உயர்ந்தது மற்றென்றுண்டோ? அவர்க்குத் தண்ணீரும் தீயும் ஒரே தன்மைத்து. இதோ நான் தீயில் விழுந்து தேகத்தைப் போக்கி, மானத்தைக் காப்பேன்" என்றாள். மற்றப் பெண்களுக்கும் துணிவுண்டாயிற்று. சிறு குழந்தைகளும் அழுகையைவிட்டு ஆடத் தொடங்கினர்.

ஃ

பத்மாதேவியோ மற்றவரைப்போலும் அழவில்லை. பாட்டியைப்போலும் தீயில் விழுவதாய்ச் செப்பவில்லை. எதிரிலிருந்த பலகணியருகிற்போய், முழங்கையை வைத்து, அம்முழங்கை மீது முகத்தைச் சாய்த்து, தூரத்தில் தோன்றிய அரிகந்தமலையை யுற்றுப் பார்த்து நெடுநேரம் சிந்தித்தவாறிருந்தாள். பொழுது போகுந்தருணமாதலால், அம்மலை அழகாகக் காணப்பட்டது. இவள் ஈராண்டுகளாக இம்மலையைக் கண்டு எண்ணாத எண்ணங்கள் எண்ணியதுண்டு. இம்மலைமீது வசிக்கும் உமேத்சிங்கு என்பவன் அழகிலும் ஆண்மையிலும் சிறந்தவன். அறிவிலும் ஞானத்திலும் மிகுந்தவன். அகன்ற நெற்றியும், நீண்டகண்களும், உருண்ட தோளும், விரிந்த மார்பும் உள்ளவன். இவன் இரண்டு வருடங்களுக்குமுன் ஓர் கள்வர் கூட்டத்தை எதிர்த்து, அவர்களைக் கொன்று அழகிய வோர் வெண்புரவியேறித் தன் ஊர்வழியாய்ச் சென்றதை பத்மாதேவி தன் மாடத்தில் நின்று பார்த்தாள். அந்நாள் தொடங்கி, தன் மனத்தை அவன் பின்னே செலுத்தி அவனையே மணஞ்செய்ய வேண்டுமென்று மனவுறுதி கொண்டாள்.

செல்லாக் காசை எல்லார்க்கும் தந்து கொண்டிரு. பலர் விழித்தபடி திருப்பித் தரினும் அவசரப்பட்ட எவனாவது ஒருவன் அதைப் பாராது வாங்கி ஏமாறிச் சென்று விடுவான் என்கிறார் ஓர் தந்திர வியாபாரி,

ஆனால், அவளுடைய எண்ணத்திற்கு ஓர் இடையூறுண்டாயிற்று.

ஃ

கொஞ்சநாளைக்கெல்லாம் தம் நாட்டின் எல்லை சம்பந்தமாக மன்சிங்குக்கும் அவனுக்கும் மனவருத்தம் எழுந்தது. அதுமுதல் அவ்விரு குடும்பதில் கொள்வதும், கொடுப்பதும் அற்றது. உண்பதும் பேசுவதும் பறந்தது. ஆயினும், அவ்வரசிளங் குமரிக்கோ நாளுக்குநாள் காதல் வளர்ந்தது. உமேத்சிங்கைப்போலும் உத்தம புருஷன் உலகில் இல்லையென்பது அவள் உள்ளம் எணணிய எண்ணம். ஆகவே, அவள் உமேத்சிங்கை எண்ணாத நேரமில்லை. அரகந்த மலையைப் பாராத நாளில்லை. தன் காதலன் தந்தையின் பகைவனாதலால் தன் எண்ணம் ஈடேறாதென்பதை யறியாள்.

ஃ

காதலென்பது கடவுளால் நடப்பட்ட இளங்கொடி. அது இளைஞருடைய இருதயப் பொய்கையில் ஊன்றிப் படரும். இடையூறென்னும் புழுக்கள் அதனையொன்றும் செய்வதில்லை. ஆகவே, வழக்கப்படி இன்றும் அம்மலையைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டாள்போலும்.

ஃ

சற்று நேரத்திற்கெல்லாம் அவள் உள்ளத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அவ்வெண்ணம் உதிக்கவே, அவளுடைய முகம் மலர்ந்தது; கண்கள் துலங்கின. "இத்தருணத்தில் தன் அன்பனை உதவி செய்ய என் வேண்டலாகாது? அவர் தன்னைப்போன்ற ஏதும் அறியாத ஏழைப் பெண்ணின் வேண்டுகோளை என் ஏற்கார்? அவருக்கும் தன் தந்தைக்கும் தீருப்பகை யுண்டாயினும் தன் பொருட்டு அப்பகையை ஏன் மறுக்கார்? எதிரிகள் தனக்கு மானக்கேடுண்டாக்க வெளிவந்தபோது, அவர் அம்மானக் கேட்டை ஏன் தவிர்க்கார்? இன்று முதல் அவரைத் தன் கைவளை நண்பனாக ஏன் கொள்ளலாகாது?"——என்பன அவளுடைய எண்ணங்கள்.

III

கைவளை நட்பு என்பது ராஜ புத்திரருக்குள் வழங்கிவரும் வழக்கமாம். ஓர் பெண் தன் கைவளையை ஆண்மகன் எவனுக்கேனும் அனுப்ப, அவ்வாண்மகன் அதனை ஏற்றுக்கொள்வானாயின், அவன் பட்டுரவிக்கையொன்றைப் பதில் தரவேண்டும். அன்று தொடங்கி அவளுக்குற்ற துணைவனாகி, வேண்டியபோதெல்லாம் உதவிபுரிந்து, தன் உயிரையும் கொடுக்க முன் நிற்கவேண்டும்.

(மற்றவை மற்றதில்.)

ப. சி. கோவிந்தசாமி ராஜா

எவனும் எப்பொழுதும் முழுதும் நற்குணங்களையோ தீய குணங்களையோ கொண்டவனன்று. ஒவ்வொரு சமயத்தில் நற்குணமோ, அல்லது தீய குணமோ மற்ற குணங்களையெல்லாம் மீறி நிற்கும். அது சமயம் அம்மனிதன் காரியங்களைச் செய்யும்போது அப்போதுள்ள குணத்திற்கேற்ற மனப்பான்மையைக் கொள்ளுகின்றான். வேதாந்த விசாரம் ஒரு பொழுது; அப்பால் சிற்றின்பம் மற்றொரு பொழுது. மனமும் குணமும் ஒரு நிலையிலில்லை.



1. தந்தைக்குப் பின் :—"எனக்கென்ன எங்கப்பா தாசில்தார் என்று சிறுவயதிலேயே படிக்காமல் போய்விட, தந்தைக்குப் பின் குமாரனின் நிலைமை கேவலமாய் விடுகிறது. தந்தையைப்போல் தானும் உத்தியோக பதவி ஏற்பது சில இடங்களில்தான்.

2. அநுபவம் பெரிது :—புதிதாய் M. B. B. S. பாஸ் செய்துவிட்டுவந்த டாக்டரைவிட அனுபவம் நிறைந்த ம்பவுண்டரே மேல்.

3. விவாகத்திற்கு முன்-பின் :—விவாகத்திற்கு முன் தன் பெற்றோர்களைத் திட்டினால் அவர்கள் பொறுத்துக் கொள்வார்களாம். விவாகமான பின் அவ்வாறு செய்தால் மனைவியின் பேச்சைக் கேட்டுச் செய்கிறான் என்பார்களாம்.

4. சாரதா சட்டம் :—இது வந்துவிட்டதால் முன்போல் மாதவிலக்கை ஏதோ மூன்று நாள் வயிற்றுவலி என்று மூடிவைக்கவேண்டிய சிரமமில்லாமல், இனி பஹிரங்கமாய் உலக்கையைப் போட்டுக்கொண்டு உட்காரலாமாம்!

5. தூங்கிக்கொண்ட விருந்தினர் :—கடன்பட்டோ எப்படியோ இவர்களுக்குக் கொண்டுவந்து கொட்டவேண்டியிருக்கிறது. வந்தவர்களால் ஒரு பிரயோஜனமுமில்லை. நன்றாய்த் தின்றுவிட்டு 'அவர்கள் வீட்டில் ஆசாரமே யில்லை' என்னும் இழிவு சொல் கூறிப் போகிறார்கள்.

6. மோட்டார் :—ஜட்கா வண்டிகளைப்போல் பெருத்துப்போய், பிரயாணிகளின் மூட்டைகளைப் பிடுங்கி என் வண்டியிலேறு என்று போட்டிப் போடுவதில், மூட்டை முடிச்சுகள் ஆச்சரியமாய் மறைந்து விடுவதும் உண்டு. வி. சிவசுப்ரமணியன்.

II

7. ஒருவர் கூற்று :—அறிவின் அபாரசக்தியால் 'ஏரோப்ளேன்' போன்ற எத்தனையோ நவீன அற்புதங்கள் உலாவுகின்ற இந்நாளில், அதிர்ஷ்டமில்லை, பிராரத்வம் என்று சோம்பேறியாய்க் குந்தி உள்ளதையழிக்கத் தெரிகிறதே யன்றி வியாபாரமோ, உத்தியோகமோ, தொழிலோ செய்து குடும்பத்தை ஸம்ரக்ஷிக்க சூக்ஷ்மபுத்தி யில்லையே! தலையிலிருப்பது மூளையா, களிமண்ணா—என்கிறார் ஒருவர்.

8. நாணயஸ்தன் :—இவன் காலகதியால் கெடினும் அப்பொழுதும் நாணயஸ்தனே. பணக்காரன் என்று அவன் கேட்டதற்கு இல்லையென்று சொல்லாமல் கைமாத்துப் பணம் கொடுத்தால் அவன் அதோ இதோ என்று நழுவிவிடுகிறான். இவ்விதம் நாணயங் கெட்டவர்கள் எத்தனை பேர்?

9. இரண்டாவது தாரம் :—முதல் மனைவிக்கு இருந்த அன்பும் மதிப்பும் மின்சார சக்திபோன்ற பாச

மும் இரண்டாந்தார மனைவியிடம் இருப்பதே யில்லை. மறு விவாகக்காரர்களும் மனதுநொந்து ஏண்டா அப்பா செய்துகொண்டோம் என்று புலம்புவோராகவே இருக்கிறார்கள்.

10. கணவனின் மடமை:—ஸ்திரீலோலனாய்த் திரிந்துவிட்டு இரவில் நடுச்சாமத்தில் வீட்டிற்குவந்து தூங்குகிறது. தன் அருகில் உறங்கும் மனைவி அந்தரங்க இன்பம் அடையப் பெறாமல் கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பதைக் கவனிப்பதே யில்லை. தன் இஷ்டம் நிறைவேறிவிட்டால் மட்டும் போதும். தன்னை நம்பிய மனைவியைத் திருப்திபடுத்த முயலுவதேயில்லை.

11. தான் திருடி அசல் வீடு நம்பாள்:—பிற நங்கையர் தம்மை அழைக்காரா என்று அலைகிற சிலர் தங்கள் உத்தம மனைவியரை—அங்கு போய் என்ன செய்தாய்—இங்கு போய் யாரிடம் பேசினாய்—என்று அடித்து ஹிம்ஸிக்கின்றனர்.

12. கடன் விஷயம்:—நீ வாங்குகிற வழியாய் வாங்கிக்கொள் என்று நிமிர்ந்து பேசுவோருக்குத்தான் மேலும் மேலும் கடன் தந்து இழக்கிறார்கள். நாணயமாய்த் தந்துவிடக் கூடியவனிடமோ — இப்போதே கொடுத்துவிட்டு மறுவேலையைப் பார்—என்கிறார்கள்.

13. நகை வியாபாரம்:—நகையை விற்றுக் கொடுப்பதற்கென்றே சில சண்டாளர்கள் அதே வேலையாய் டம்பமாய்த் திரிகிறார்கள். இவர்களிடம் தரும் நகை மார்வாடி கடையில் அடகுக்குப் போய்விடுகிறது. நயத்திலும் பயத்திலும் வாங்கமுடியவதில்லை. வேறு சில சண்டாளர்களோ நகைவிற்ற பணத்தைத் தங்கள் சொந்த சொத்தைப்போல் ஜேபியில் போட்டுக்கொண்டு போய்விடுகின்றனர். அப்பால் அவர்களைக் கண்டு கேட்கவேண்டுமானால், தாசிவீட்டுக்குப் போய்த்தான் தேடவேண்டும்.

14. சத்தியத்தின் உன்னதம்:—ஏராளமாய் விற்பனையாகும் கருவாடு வியாபாரியைப் பார்க்கிலும், அதிகம் விற்பனை ஆகாத கஸ்தூரி வியாபாரியே விருத்தி அடைகிறான். இதைப் போலவே நாற்றமெடுத்த பொய் புரட்டு, மோசநாச நடவடிக்கையுடன் ஏராளமான பணம் சம்பாதித்திருப்பினும், ஓர் காலத்தில் புசிப்புக்கே வழியின்றித் திண்டாடிச் சிறைக்கும் போகிறான். யோக்கியன் ஒருவன் பணக் கஷ்டத்துடன் நாணயம் தவறாது நடத்தி நாளடைவில் வியாபாரத்தில் பிரசித்திபெற்று மாடிமேல் மாடிகட்டி மலைமேல் விளக்குபோல் பிரகாசிக்கிறான்.

15. மலைமேல் விளக்கு:—இதன் அழகைத் திரிச்சியில் தாயுமான ஸ்வாமி மலையில் இரவில் பார்க்கலாம்.

வ. சு. நாராயணசாமி செட்டியார்.

III

16. காபி சப்ளை:—நாம் எதுவரை இலவசமாய்க் காபி வாங்கித் தருகிறோமோ, அதுவரையில் நாம் அவரிடம் கூறிய ரகசியங்களை வெளியிடார். அந்தக் காபி உபசரிப்பு நின்றுவிடும்போது, நமக்கு விரோதிகளாயுள்ளவர்களிடமே நமது சவிஸ்தாரங்களனைத்தையும் கூறப் பின் வாங்கமாட்டார்கள்.

17. கபட உலகம்:—நாம் அந்த நண்பனை எவ்வளவோ பிரியமாய் ஒரு வேடிக்கைக்கு அழைத்துச் செல்

தங்க ரேக்குகள் ஒட்டி வெற்றிலைப் பாக்கு அழகாய் மடித்து விற்கிறது. அதை வாங்குதற்கானபடி நமது மாத சம்பளம் உயரக் காணோம்.

துகிறோம். பிறகு மற்றொரு நாள் அவன் வேறொரு வேடிக்கைக்குச் செல்லுகையில் நாம் எதிர்பட்டு எங்கே செல்லுகிறாய் என்றால், வேறு வேலையாய்ப் போகிறேன் என்று சொல்லிவிடுகிறான். பிறகு உண்மையை நாம் அறியும்போது ஹா! கபட உலகமே! என்று உள்ளம் நோக நேர்கிறது.

18. கவனிப்பதில்லை :—ஒருவன் வர்த்தகத்தில் நஷ்டமடைந்தால் உறவினர்முதல் யாவரும் கேவலமாய்ப் பேச, அதை நம்பி, முன்கடன் கொடுத்தவர்களும் இப்பொழுது தர மறுக்கிறார்கள். இவ்விதம் கேவலப்படுத்துவதில் லாபமென்னவோ! தங்களுக்கும் ஒரு காலத்தில் நஷ்டம் ஏற்பட்டு அவனைப்போல் கண்கலங்க நேரிட்டால் என்ன செய்வது என்று கவனிக்கிறார்களா?

19. பெரிய அவஸ்தை :—நாம் போன இடத்தில் படிப்பதற்கு உடன் கொண்டு சென்ற புஸ்தகத்தோடும் உட்கார்ந்தால், நமக்கு அருகில் நெருங்குகிறவர்கள் நம்மிடமுள்ள புஸ்தகத்தைப் பார்க்கத் தொடங்கி விடுகிறார்கள். லேசில் தருவதில்லை. இது பெரிய அவஸ்தை.

20. சந்தேகமே :—ஒரு காரியத்தை உத்தேசித்துப் புறப்படும் சமயம் வலதுகால் தடுக்கினால், போகும் காரியம் நிறைவேறுவது சந்தேகமே.

21. இதில் என்ன பெருமையோ? :—சிலர் தனக்காகத் தெருவில் காத்துக்கொண்டிருப்பவர்களை நிற்க வைத்துவிட்டு, வீட்டுக்குள் தங்கள் வேலையைக் கவனிக்கிறார்கள். பிறகு வெளியில் வந்து — நீங்கள் போய்க் கொண்டிருங்கள், உங்கள் பின்னாலேயே வந்துவிடுகிறேன் என்று கூறுவதில் என்ன பெருமையோ? நம்மையும் கூட அழைத்துச் செல்வதற்கன்றோ காத்திருக்கிறார்கள் என்று உணருகிறார்களா?

22. வெட்டிப் பேச்சு :—நாடக சாலையில் போய் உட்கார்ந்தால் பிரபல நடிகர்களுடைய பிரஸ்தாபங்களைக் கூறுவதற்கு ஆட்கள் தயாராக இருக்கிறார்கள். ராஜபார்ட் அய்யருக்கு இவ்வளவு சம்பளம். (அவருக்கு இத்தனை உபநாயகிகள்!) ஸ்திரீபார்ட் அம்மாளுக்கு இவ்வளவு சம்பளம் என்று எல்லாம் தெரிந்தவர்கள்போல் கூறுகிறார்கள். கம்பெனி ஏஜெண்டுகள் நடிகர்களை சம்பளம் பேசித் தீர்மானிக்கும்பொழுது இந்த வெட்டிப் பேர்வழிகள் அருகிலிருந்தார்களா?

23. காரியம் முடிந்தபின் வேறு மாதிரி :—கர்ப்பவதியான தன் மனைவியால் வீட்டு வேலைகள் செய்ய முடியவில்லை யென்று தூரத்திலிருக்கிற தன் தங்கையைக் குடும்பத்துடன் அழைத்து வைத்துக்கொள்ளுகிற தமயன், அவளால் ஆகவேண்டிய பிரஸவ உதவிகளெல்லாம் தீர்ந்தபிறகு வேறு முகமாகிறான். அவன் மனைவியும் நன்றியற்றுக் கலகத்திற்கும் சண்டைக்கும் தயாராகிறாள். தமயனே தங்கையிடம் உன்னால் வீண்கலகம் வருகிறது; உன் குழந்தைகளுடன் வேறு வீட்டுக்குப் போய்விடு என்று சொல்லி அவளை வெளியேற்றி விடுகிறான். அவள் வந்தபோதே வேறு வீட்டில் குடியிருக்கும்படி சொல்லி விடுகிறதுதானே? தன் மனைவியின் பிரஸவ முதலிய வீட்டு வேலைகள் முடிந்த பிறகு தான் அவ்விதம் கூற வேண்டுமோ?

S. S. ராமாச்சாரி.

கவிதா  விலாஸம்

ஏ க நா த ன்

III

முன் குறிப்பு :—அருட்பாலை யருந்தி ஞானஒளி பெற்ற ஏகநாதனைச் சிலநாள் பொறுத்து, நீ கற்றுக்கொள்ளவேண்டிய அனைத்தையும் உணர்ந்துகொண்டாய்; உன் அன்னையும் பிதாவும் உன் வருகைக்கு எதிர்நோக்குகின்றனர்; அவர்கள் பிரியப்படி அங்கு சென்று இல்லற வாழ்வில் இனிதாக இரு என்று ஜனார்த்தனர் கூறுகிறார். ஏகநாதன் தன் குருவை வணங்கி, தான் இனி காலங்கழிக்கச் செல்லும் உலகத்தைப்பற்றியும், அதன் இயல்பைப்பற்றியும் தனக்கு அருளவேண்டுமென்கிறான், ஜனார்த்தனர், உலகம் ஒரு நாடக சாலை யென்று அதன் தன்மைகளையும், நடக்கும் கொடுமைகளையும், அறிவீனச் செயல்களையும் விரிவாய்த் தெரிவித்து, தவறுவழியிற் செல்வோரைச் சேராமல், இறப்பதாயிருந்தாலும் தர்மமார்க்கம் பிசகாதிருப்பதே சிறப்பெனக் கொள்ளும்படி உபதேசிக்கின்றார். அதனைப் பணிந்துகேட்ட ஏகநாதன் அறிதற்கரிதாயுள்ள பரம்பொருளை அறிவது எப்படியென்று வினவுகின்றான். அதற்கு ஜனார்த்தனர் அவரவருக்கு இயைந்தவழியில் அவரவர் ஆதிபரம்பொருளைக் காண்பர் என்றும், கடைசியில் போய்ச்சேரும் வழி ஒன்றாகவே முடியும் என்றும் கூறுகிறார். அதன்பின் ஏகநாதன் தன் குருவை வணங்கி அநுமதி பெறுகிறான். ஜனார்த்தனர் அவனை ஆசீர்வதித்து அனுப்புகிறார். ஏகநாதன் தன் இல்லத்திற்குச் செல்லுகிறான்.

☞ இதுவரையுமுள்ள விஷயங்களை இங்கு பாக்களாகக் கொடுக்கப் பட்டுள்ளன. மற்றவை மற்றதில் வரும்.

ஏ க நா த ன்

(4-ம் வால்யம் 698-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஜனார்த்தனர் :—அறவழி கண்டவேன் அருமை மைந்த!
கற்பவை இனிநீ சோற்பமு இலையால்,
உன்னரும் ஆன்மா உயரிய ஓர்பெரும்
நன்னூலாகும் அந்நூல தனில்
அன்புஞ் சிவமும் ஒன்றேனத் தோன்றி
இன்ப வாழ்வே என்றும் ஆக்கும்.........

(சிறிது மௌனம்.

அன்னையும் பிதாவும் உன்பால் நேயம்
கொண்டுளர் பெரிதே—சென்றுநீ அவர்பால்
சிறப்போடு வழியாய்! அறமுறை தவறு
இல்லறவாழ்வில் இனிதாய் நுழைக.

ஏகநாதன் :—நல்லியல் கூடிய நற்குரு! அடியேன்
உய்ந்திட அருளுக! உலகந் தனிலே.

ஜனார்த்தனர் :—உலகமோர் நாடகம் உள்ளாரனைவரும்
பலவிதம் நடிப்பர்—பேசித் திரியும்
பித்தர் பலருளர்—சித்தம் தெளியா
மத்தர் பலருளர்—வேதம் எனச் சொலி
பேதம் விளைப்பர் : ஆதலொன்றறியா
அசடர் செய்த கசடு பலவாம்
சாதி சமயம் பேதம் புரட்சி
வேதியன் சூத்திரன் விளம்புபல் வேற்றுமை
தீண்டினுல் குற்றம் தோன்றினுல் தோடம்
கண்டாற் பாபம் உண்டால் பிறரோடு
வந்திடும் மோசம் : நிந்தனை அநந்தமே
அன்போடு பிறரும் ஆலயம் புக்கினே—
என்னே இவர்மதி! கொன்னே இவரும்
சால் திரம் பேசும் சழக்கராய்த் தோன்றி
சாற்றைவிட்டு சக்கையைக் கொண்டார்.
ஆன்ம இலக்கணம் அறியா இவர் தாம்
ஆன்றவோ ரறிஞரைப் போன்றே நடிப்பர்
பொறுப்பை விடுப்பர், பயனையே கருதுவர்,
வெறுக்குங் காரியம் வேணது செய்வர்,
பிறப்பே பெருமையாய், பிதற்றும் பேயர்,
அருகிலுஞ் செல்லேல் : இறப்பதா யிருப்பினும்
அறவழி பிசகா திருத்தலே சிறப்பு!

ஏகநாதன் :—கருணைக் குருவே! காலமாய் உள்ள
அருமையாம் பொருளை அறிவதும் எப்படி?

ஜனார்த்தனர் :—விரும்பி யவனும் வேண்டுமா றென்க——
பரந்துள உலகில் பக்தரோவ் வருவரும்
தத்தமக் கியைந்த தகும்வழி கொண்டுளார்
ஒத்த கருத்துள இருவர் உளரோ?

ஒருவருக்கொருவர் போட்டி ஏற்பட்டு ஒரு சேர் மிட்டாய் காலணுவுக்கு விலை இறங்கிற்று. அந்த சமயத்திலும் ஒரு கடைக்காரர் என் மிட்டாய் சேர் பத்து அணு—எப்போதுமுள்ள விலைதான் என்றார். விலைக்குத் தக்கபடியே அது இருந்தது. போட்டி வியாபாரமும் ஊர்வலமும் வெகு நேரம் நிற்காது.

ஒருவனைப் போல் பிறி தொருவனைக் காணலே
எனவே, கடவுளை இனமாய் ஒரேவழி
எப்படி அறிகுவர் என்பதை உணர்க—
வானாய் நிலனாய் கனலாய் புனலாய்
ஊனாய் உயிராய் உயிர்க்கே துணையாய்
அறிவே அன்பாய் அதுவே சிவமாய்
அருள்வடி வமைந்த ஆதியாம் கடவுளை
பக்தரால் பார்க்கப்படுமோரு முறையினை
நோக்குவம் : ஒருவன் நோக்குவன் ஓர்சிறு
வழியாய்: மற்றவன் கபாடவழியா
விழியினைச் செலுத்துவன்: மூன்றுமாவான்
ஓர்பெரும் பொருளை ஓர்கால் திறந்த
பலகணி வழியா பார்த்திட முந்துவன் ;
இனி நான் காவதா உளனே மற்றவர்
தனிலும் பிறிதோர் தனிவழி புகுவன் ;
அதுவாம் வீடுவாசலனைத்தையும்
ஒதுக்கி ஒருவனாய் வெளியாம் நிலத்தில்
நின்றவப் பெருவெளி தன்னையே நோக்குவன்
இன்னவர் நால்வரும் இயல்பில் சரியாம்—
ஆதலின் மைந்த! ஒருபெருந் தனிப்பொருள்
அறிவகை அவரவர் விரும்பும் அறவழி
ஒன்றலேன்பதே என்றுங் கண்டதோர்
முடிந்த முடிபென முறையிடும் உலகம்.

ஏகநாதன் :—அன்பே உருவா அமைந்துள அடிகாள்!
தண்ணிய அருளால் தாஞ்செய் கிருபையால்
அடியேன் உய்ந்தேன் அருளிய வாறே
அடியேன் செல்வன் அவனிதோல் இடத்தே!

ஜனார்த்தனர் :—என்னுடைய ஆசி என்றும் உனக்கே!

ஏகநாதன் ஆசி பெற்று இல்லம் அடைகிறான்.

மு. துரைப் பிள்ளை.

ஓட்டு கேட்பது தங்களின் கௌரவத்தையும் லாபத்தையும் பெருக்கிக் கொள்கிற சொந்தக் காரியத்திற்கானபோதிலும், பொதுஜன நன்மைக்காக வென்று பசப்பியே ஓட் பெறவேண்டி யிருக்கிறது. யார் தெரிந்தெடுக்கப் பட்டால்தானென்ன? அது எப்படி முடிந்தால்தான் என்ன? என்கிறார் ஒருவர்.

அந்த வார்த்தைக்கு என் அருத்தம் தெரியவில்லை யென்று சிறுவர்களை உபாத்தியாயர் ஓங்கி அடிக்கின்றார். எந்தப் பையனாவது அர்த்தம் சொல்லி விடமாட்டானா என்பது அவர் எண்ணம். அதன் அருத்தமே இன்னதென்று அவருக்கே தெரியவில்லையாம்.

மூளைக்கு வேலை.

1. அவனுக்கு சிறுமலைபோன்ற கரியமேனி ; அவனுக்கு இடர் செய்தவன் உயிருக்கு ஹானி ; அவன் கோயில் அரண்மனைகளில் வசிக்கும் ஞானி; அவன் இருந்தும், இறந்தும் விலையுயர்ந்த தானி. இவன் யார் ?

2. என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன். நான் யார் ?

3. நிரப்பலாம், பிடிக்க முடியாது. உணரலாம் காணலாகாது. அது எது ?

ஜி. மகாதேவன்.

4. ஜீவராசிகளில் உட்செவியுள்ளது எது? வெளிச்செவியுள்ளது எது?

5. இவ்வுலகின்கண் ஜீவராசிகள் யாவற்றிற்கும் ஒரே தன்மையாய் உதவும் இருவர் யாவர் ?

மு. நா. தெண்டாயுதபாணி பிள்ளை.

6. கருப்பான ரூபமுடன் உள் நடப்பாள், வெளியே போகாள் ; காசைக்கொடுத்து வீட்டுக்கு அழைத்தால் நேர்த்தியாய் வருவாள்; ஊண் கொடுத்தால் உடனே வேலை செய்வாள், உறங்கமாட்டாள் ; உள்ளுக்குள் பேசிடுவாள்—பெண்ணுமல்ல. காலையில் எழுந்தவுடன் இவளைப் பார்ப்பார்—கணக்கில்லை கோடான கோடிபேரே.

7. கிளைவளர்ந்து பூத்திடும் பூ, மல்லிகைபோல் கிஞ்சிற்றும் வாசனையில்லை முகர்ந்தோமானால் ; நிறமது பிஞ்சு பச்சை, நெல்லிரூபம், காய்சிவப்பு, பழமது கருத்திருக்கும் : பழத்தினுள் கொட்டை இரட்டை ; இனிப்புண்டு, பழத்தைத் தின்னார், கொட்டையை உட்கொள்வாரே.

8. பேரென்றால் பெண்ணின் பேரு, பெண்ணுக்கு ரூபமில்லை ; ஓடுவாள் வேகமாக, உதவுவாள் யாவருக்குமே ; போனவள் திரும்பமாட்டாள் ; பொருளதை யறிவீர் தாமே.

S. S. ராமையா.

9. ஆறு எழுத்தில் ஒரு ஊர். 1-ம், 5-ம், 6-ம், சேரில் தலையாகும். 5-ம், 6-ம், 4-ம், 3-ம், சேரில் தச்சர் கருவியாம். 4-ம், 2-ம், 3-ம் சேரில் வெந்தது பார்க்கும் முறையாம். 2-ம், 3-ம், 4-ம், 6-ம் சேரில் தூணாகும். 2-ம், 5-ம், 6-ம் சேரில் வகுப்பாம். 4-ம், 5-ம், 6-ம் ஆதிக்கடவுளாம்.

10. ஒரு கொய்யாப்பழத்தின் விலை காலணா. ஒரு ஆரஞ்சிப்பழத்தின் விலை முக்காலணா. ஒரு பப்ளிமாஸ் பழத்தின் விலை ஐந்து அணா. ஒருவன் 100-அணாவுக்கு 100-பழங்கள் வாங்குகிறான். வகைக்கு எத்தனை பழங்கள் வாங்குகிறான் ?

11. ஆறெழுத்துச் சொல். விஷ்ணுவின் பெயரைக் குறிக்கும். 1-ம், 5-ம், 6-ம், கூற்றுவனாகும். 3-ம், 2-ம், 4-ம் தலையாம். 5-ம், 2-ம், 4-ம் சேரில் விருக்ஷமாம். 3-ம், 2-ம், 5-ம், 4-ம் சேரில் கஷ்டமாம். 5-ம், 1-ம், 4-ம் சேரில் ஹிருதயமாம். 1-ம், 2-ம், 6-ம் சேரில் மானிடனாம்.

வாத்து, கோழி இவைகள் தம் முட்டைகளினின்றும் வெளி வந்து உலகைக் காண்பதற்கு முன்பே மனிதர்களின் வயிற்றுக்குள் சென்று விடுகின்றன.

12. எட்டு எழுத்தாலாகிய ஒரு சொல். அது ஸதா எழுதுகோல் உள்ளவரைக் குறிக்கும். 1-ம், 2-ம், 3-ம் முறைமையாம். 1-ம், 5-ம் ஸதா உழைக்கத் தூண்டுவதாம். 1-ம், 6-ம் குதிரையாம். 1-ம், 3-ம் நாயகனைக் குறிக்கும். 3-ம், 6-ம் மூன்றைக் குறிக்கும். 4-7-8-ம் பிராமணர்களில் ஒரு வகுப்பாம்.

வி. சிவசுப்பிரமணியன்.

விடுவிப்பு :—(1) யானை. (2) கண்ணுடி. (3) காற்று. (4) முட்டையிடுவனவெல்லாம் உட்செவியுள்ளது. ஈனுவதெல்லாம் வெளிச்செவியுள்ளது. (5) சூரியன், சந்திரன். (6) கடியாரம். (7) காப்பிக்கோட்டை. (8) கங்கை. (9) சிதம்பரம். (10) கொய்யாப்பழங்கள் 35, ஆரஞ்சிப் பழங்கள் 55, பப்ளிமாஸ் 10. (11) நரசிம்மன். (12) பத்திராசிரியர்.

நாமெல்லோரும் விரும்பும் மனிதன்.

நாமொருவரும், எல்லாப்படியாலும் விரும்பப்படத் தக்க புருஷனை விரும்புகிறதில்லை. அவர் முன் நாம் தாழ்த் தப்பட்டு யானை முன் பூனைபோல்வோ மாகலின், நமக்குச் சமமான வேறொருவரையே விரும்பிச் சேர்ந்துகொள்கிறோம். நாம் விரும்பாதவர் யாரெனில் அவர்தான் சாந்தப் பிள்ளை. இவர் ஒரு விஷயத்தில் நமக்கு மேம்பட்டவர். ஆனுல், தடுக்கு—எதிர்ப்பு—கத்தியைக் காட்டுதல்—குத்துதல் இதுபோன்றனவற்றில் நமக்கு சமானமானவ ரல்லர்.

சாந்தப்பிள்ளை மிக நல்லவர் ; இருக்கும் இடமே தெரியாது. ஆயினும், வெகுபேர் அவரையே தேடிவந்து சந்தோஷப்படுவார்கள். கடன் கொள்ளார். ஆனுல், அவர் கேட்டாலோ வேண்டிய கடன் கிடைக்கும். வரவுக்குள் செலவாளி. ஆனுல், சிறிது மிச்சம் வைத்து, செட்டு இன்றி மற்றதைத் தாராளமாய் முழுதும் செலவிடுவார். லாகிரி வஸ்துக்களை உபயோகியார். தான் வாங்கும் சம்பளத்துக்கு இரட்டிப்புவேலை செய்பவர். நல்ல கிருகஸ்தர். வலியப் போய் எவரிடமும் பேசுவதில்லை. அடுத்த வீட்டுக் குப்பையைத் தன் கொல்லையில் போட்டாலும் ஏனென்று கேட்கமாட்டார். அப்படிப்பட்ட பரம சாதுவாக்கும் சாந்தப் பிள்ளை.

நமக்கு அவரைப்போலிருக்க இஷ்டமில்லையே. அது என் ? அவர் யோக்கியதையைத் தாராளமாய் ஒப்புக்கொண்டு புகழும்படியே நேரிடுகிறது. அவரது பொறுமையையும், பிறரிடம் வம்புக்குப் போகாததையும், கடவுளுக்குப் பயந்த மாதிரியையுமாவது நாம் கைக்கொள்ளக்கடவோம்.

துணிவு!



துணிவு! துணிவு! துணிவு! இன்னும் துணியவே துணிவு! துணிந்தார்க்கே ஈசன் துணையாம். துணிவார் துணிந்ததைப் பெறுவார். துணிவு! துணிவு! துணிவு கொள்ளே!

பணிவதும் பதுங்குவதும் இனியேது? பணிவது அன்புக்கும் அரசருக்குமே. பதுங்குவதும் பார்த்துப் பாய்வதற்கே. தணிவதும் எண்ணித் துணிவதற்கே. துணிந்தவருக்குத் துயரம் ஏதே?

காட்டிலும் நாட்டிலும் துணிவு! மேட்டிலும் பள்ளத்திலும் துணிவு! அலைமோதிடும் நதியிலும் துணிவு! ஆழ்கடலின் நடுவிலும் துணிவு! வாரிதியும் துணிவார்க்கு முழங்காலே.

சோதனையிலும் வாதனையிலும் துணிவு! வறுமையிலும் சிறுமையிலும் துணிவு! மோகக் கண்கள் வீசிடினும் துணிவு! மண் பொன் மயக்கிடினும் துணிவு! துணிந்தவன் பக்கமே இவ்வுலகு.

அக்கிரமக் கொடுமையை யடக்குவோம். அடக்கும் வலியிலையேல் பொறுப்போம். ஐயனிடம் முறையிட அணுகுவோம் ஆகு நாளில் அதனை யடைவோம். அதுவரை துணிவோடு நிற்போம்.

துணிவோர்க்கு எதுவும் சிறு துரும்பே. இடிக்கும் இடியிலும் துணிவே! தடுத்திடினும் தியங்கிடாமல் துணிவே! தலையே போயினும் தளராத துணிவே! துணிவாரை எதிர்ப்போர் வீழ்வரே.

எங்கெந்த எதிர்ப்பிலும் துணிவே! எத்தனை சோதனை சூழினும் துணிவே! எவ்வளவு ஏமாறினும் துணிவே! எந்தப் பேயின் முன்னிலும், நள்ளிரவிலும் துணிவே! எதிலும் ஏங்கிடாத துணிவே.

ஏழ்மையிலும் சத்தியத்தின் துணிவு! இழிய வாழ்விலும் உயரவே துணிவு! சீரழியினும் தூயமனத் துணிவு! கலக்கினும் கலங்காத கற்புத் துணிவு! துணிவுக்குண்டு தெய்வத்துணையே.

துணிவு சக்தியினொரு அருளே. துணிவு தர்மத்தின் பொருளே. துணியினே அங்கு ஏது இருளே? துணிந்த நெஞ்சுக்கு உண்டு வாழ்வே. துணிந்தே தெளிதல் வேண்டுமே.

கையளவு கண்ணளவிலே தான் எல்லா சமையல்களும் நடக்கின்றன. அநுபவம் நிராசை வேண்டாமென்கிறது.



வழக்கம் போல் கூடிய நமது கடையில், பால சரஸ்வதி, வித்வரத்னாகரம், நிமிஷகவி-பம்புளி மாஸ் செட்டியார்—"வாரி சூழ் உலகில் வெற்றி வன்மையா யடைந்து" என்று பேச ஆரம்பித்தார். அதற்குள் அல்லா பிச்சை "இவ்வளவு இலக்கணம் வேண்டாம், வெள்ளைத் தமிழில் பேசுங்கள்" என்றார். "இந்த —வாரி சூழ் உலகில்—என்பது ஒரு பாட்டின் முதல் அடி, அந்தப் பாட்டைப் பாடம் செய்துகொண்டு சொல்லிக் கஷ்டப்படுவதைவிட சாதாரணமாய் மனதில் வந்ததை மட மட வென்று பேசலாமே" யென்று தாண்டவக்கோன் சொன்னார். பிறகு பம்புளி மாஸ் கவிராயர் "படிமிசை முன்னாள் ஆண்ட பண்புள வேந்தரெல்லாம்" என்று தமது பிரசங்கத்தை ஆரம்பித்தார். "இந்த முதல் அடி அரிச்சந்திர விலாஸத்தில் உள்ளது" என்று இளிச்சவாய்ப் பிள்ளை இயம்பினார். அதைப் பம்புளிமாஸ் புலவர் மறுத்து, "இது என் சொந்த வாக்கு, நான் பேசுவதே பாடலாக அமைந்து விடுகிறது" என்றார். உடனே, அவருக்கு அரிச்சந்திர விலாஸத்தில் அந்தப் பாடலின் அடி வரும் இடத்தைக் காட்டவும், அதை நான் பார்த்ததே யில்லை யென்றார். அதன் பின் மறுபடியும் பேசத்துவக்கி, "ஐயமிட்டுண்டு, சான்றோரினத்திருந்து, ஒப்புர ஒழுகி, கேள்வி முயன்று" என வேறு விதமாய்ப் பேச ஆரம்பித்தார். இது ஆத்திசூடியிலிருப்பது என்று சொல்லி ஆமவடைப் பண்டாரம் கேலி செய்தார். பம்புளிமாஸ் புலவர் கோபத்துடன் நமதுகடையை விட்டு வெளியிற் சென்று விட்டார்.

ஃ

வீட்டுப் பாத்திரங்களில் கடவுளால் ஆசீர்வதித்துத் தரப்பட்ட சிறு பாத்திரம் எது என்று புத்திர பாக்கியம் பிள்ளை கேட்டார். அதற்கு அடிமைநாதபிள்ளை "கெண்டிலோட்டா தான் உயர்ந்தது; அது இருக்கிற இடத்தில் குழந்தையும், பால்சட்டியும் எப்போதும் இருக்கும்" என்றார்.

ஃ

"தரித்திரக் கையும் தாராளக் கையும் எப்படிப் பிழைக்கிறது?" என்று போகிணி செட்டியார் வினவினார். "ஒரு விளக்கின்சிமிளி உடைந்தால் அதற்குப் பத்தெட்டு ஒட்டு போட்டு வைத்துக் கொள்பவனை அந்தத் தரித்திரக் கையுடனேயே வாழ வைக்கிறார். உடைந்த சிமிளை உடனே எறிந்து விட்டு வேறொன்று புதிதாய் வாங்கப் புத்தி போகிறவனுக்கு அதற்குத் தகுந்தபடி தாராளமாய்ப் பணம் கிடைக்கச் செய்கிறார். அந்தந்தக் கையின் போக்குக்குத் தக்கபடி கடவுள் அதற்குப் படி யளக்கிறார்" என்று தொந்திசெட்டியார் புகன்றார்.

குடும்பத்தில் அதிர்ப்தி பரவும்படி செய்வது, அதிலிருந்து லாபம் சம்பாதிக்க நினைக்கிற சிலரது வேலை. அது தெரிந்து எச்சரிக்கை பெறுக.

"கையில் ஒரு கால் ரூபாய் கூட இல்லாத காலத்தில் திடீரென்று மனைவி பிரசவ வேதனைப்படுகிறாள். வீட்டுக்காரன் பணத்துக்குத் தத்தளித்துத் தன் மானம் விட்டுப் பிறரைக் கடன் கேட்கச் செல்லும்பொழுது, எதிரே தபாற்காரன் வந்து ஒரு பெரிய தொகைக்கு மணியாடரைத் தந்தால், அந்த சமயம் அவன் மனது எப்படியிருக்கும்?" என்று ஏலேலோ செட்டியார் கேட்டார்.

ஃ

"தன் கடையில் வாங்காமல் வேறு கடைக்கு எப்படிப் போகலாம் என்று கோபத்துடன் முணுமுணுக்குகிற வழக்கமான கடைக்காரனை எதிர்ப்பது எப்படி"? என்று ஏய்க்கும்பிள்ளை கேட்டார். அதற்குப் பிஞ்சுராயர்—"அடுத்தடுத்து வேறு கடைக்கே சென்று வாங்கத் தொடங்கி விட்டால், வாடிக்கைக்காரன் தன் முறுக்கும் கோபமும் பயன்படாதென்று அடங்கி விடுவான்; வாடிக்கைக் கடைக்காரன் என்றால் என்ன, சும்மா அள்ளிக் கொடுத்து விடுகிறானே; எல்லாம் காசுக்குத் தானே தருகிறான்" என்றார். கடைக்காரன் "தன் வாடிக்கைக்காரர்கள்" என்று பேசுவதெல்லாம் தன் கடை வியாபாரம் அதிகமாய் நடப்பதற்காகச் செய்கிற ஒருவிதமான ஏமாற்றுத் தளுக்கு வித்தை" யென்றும் சொன்னார்.

ஃ

"ஒரு பெண் தான் மட்டும் ஒருத்தியாகப் பார்த்து வந்த குடித்தன வேலையை அவள் பாயிற் படுத்துக் கொண்டால், பத்து பேர் அந்த வேலையைப் பார்க்கும்படியாகிறது. எவ்வளவு பார்த்தாலும், அவள் ஒருத்தி பார்த்த ஒழுங்காகவும், விமரிசையாகவும் இருப்பதில்லை" என்று குள்ளஞ் செட்டியார் கூறினார். தாண்டவக்கோன் அதை ஆதரித்து, "அவள் பாயிற் படுத்து விட்டாலும்—தன் கணவனுக்குச் சரியாக இட்டார்களா?—அவரும் தன் குழந்தைகளும் வீட்டிலுள்ளவர்களும் வயிறுறப் புசித்தார்களா என்பதையும் படுக்கையிலிருந்தபடியே விசாரித்துக் கவனிக்கிறாள்" என்று சொன்னார்.

ஃ

"எவர் நமது பிழைப்பில் மண்ணைப் போட்டு நமக்குப் போட்டியாவாரென்று நாம் சற்றேனும் பயப்பட வேண்டியதில்லையோ—அவர்தான் நமக்கு மிகவேண்டிய அத்தியந்த சிநேகிதர்" என்றார் கைவீசும் பிள்ளை.

ஃ

"எல்லோரும் நம்மை விரும்ப வேண்டுமானால்—நாம் ஒவ்வொருவரையும் விரும்ப வேண்டும்" என்றார் விசுவாசத் தேவர். "விரும்பிச் சேர்த்துக் கொண்டவர்கள் தானே நமக்கு இப்போது ஜன்மப் பகையாளிகளாய் பெரிய சனியன்களாய் முடிந்திருக்கிறார்கள்" என்று மோசம்போன மொச்சைப் பிச்சை மொழிந்தார்.

ஃ

"சில சமயங்களில் நாம் உபசரித்த மனிதரையாவது விரும்பலாம். ஆனால், நமக்குக் கை கொடுத்தோரை மட்டும் விரும்புவது அரிது. அவரிடம் நாம் இடைவிடாது நன்றி பாராட்ட வேண்டியிருக்கிறதே! இது பெரிய நிர்ப்பந்தமல்லவோ? இப்படியே, நம்மை மூழ்கி இறக்கும் சமயத்தி

மேஜை நாற்காலி எழுதுகோல் மை காகிதம் முதலிய சாதனக் கருவிகள் சரியாய் அமைந்து நோமும் பொருந்தி மனமும் கூடிவிட்டால் ஆசிரியர்களுக்கு அது எந்த இடமாயினும் அதுவே அரண்மனை போலாம்,

விருந்து விடுவித்தாரைக் கூட நாம் அடிக்கடி பார்க்க விரும்புவதில்லை. நாம் ஏதோ சில பொருள் அவர்களுக்கு உதவினால் அதுவே அவர்களுக்குப் பதில் உதவியாகச் செய்தது என்று நினைத்துவிடுகிறோம். சில நாள் கழிந்த பிறகோ, அம்மகோபகாரியைக் காணக் கூடச் சகிக்காமல் போய் விடுகிறது. கால வித்தியாஸத்தால் அந்த மகோபகாரி நம்முடைய கையை ஒன்றுக்குமேல் இரண்டு தடவை எதிர்பார்க்க நேரிட்டு விட்டால், உடனே நமது கோபம் பொங்குகிறது! ஏதோ நமது உயிரை ஒரு சமயம் காப்பாற்றிவிட்டதினாலேயே நமது ஸம்பாத்திய முழுவதிலும் இவருக்குப் பாதி கமிஷன் கொடுக்க வேண்டுமா என்ன?—என்று கூடக் கேட்டு விடுவோம் போலிருக்கிறது" என்று ஆமவடைப் பண்டாரம் நவின்றார். ஃ

அதை ஆதரித்து உலக்கைப் பிள்ளை பேச எழுந்தார். "நமக்கு உதவி புரிந்தவர் அதை மறந்து விட்ட பிறகுங் கூட, அந்த உதவியைப் பெற்றவராகிய நாம் அவர் இன்னும் அதையே நினைத்துக் கொண்டிருக்கிறாரோவென்று சந்தேகப்படுகிறோம். அவர்பால் நமக்குள்ள நேசமும் இந்த சந்தேக வலையிற்பட்டு இளைத்துப் போகிறது. நாம் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டு ஒவ்வொருவரை மிக விரும்புகிறோம். ஒருவர் விரும்புவோரை மற்றொருவர் விரும்புவதில்லை. எல்லோரும் விரும்பும் மனிதரைச் சிலர் எதனாலேயோ வெகு அருவருப்பாய்ப் பார்க்கிறார்கள்; பொறாமையும் கொள்கிறார்கள்" என்றார். இவ்வளவுடன் நமது கடை பூர்த்தி பெற்றது.

'பஹதூர்' பொன்வண்டு செட்டியார்.

பன்றிக் குட்டிகளைப் போல் பசபசவென்று இருபது வயதுள்ள பெண்ணோடு நாலைந்து குழந்தைகள் துணி உணவுகளில்லாமல் சூழ்ந்து திரிகின்றன. ஒன்றின் மூக்கில் சளி ஊஞ்சலாடுகிறது. மற்றொன்றின் கண்களில் பீளை வழிகிறது. இன்னொன்றின் தேகத்தில் சொரி சிரங்குகள் இரத்தத்தைக் கக்குகின்றன. இவற்றைக் கவனியாமல் ஒய்யாரமாய்க் கை வீசி அண்டை அயல் வீடுகட்குச் சென்று வம்பளக்கிறாள். என்ன அறிவீன குடும்பம் இது?

தான் போன வீட்டில் மரியாதை செய்தால் மனம் திருப்தி யடையும். ஏனோவென்று உதாஸீனமாயிருந்தால் கோபம் எழுகிறது. அவர்களை அன்று முதல் வெறுத்துப் பகைக்க நேர்கிறது. தன்னைக் கௌரவப் படுத்தாதது ஆடவர்க்கு அத்தனை வருத்தத்தை யுண்டாக்குகையில், அதைவிட கேவலமாய் அவமதிக்கப்படும் விதவைகள் தம் அந்தரங்கத்தில் படும் துக்கமும், கொடுக்கும் சாபமும், வீடும் கண்ணீரும் எத்தகையதாயிருக்கு மென என் நினைப்பதில்லையோ?

எதுங் கல்லாத விவேக சூனியர்கள் எல்லா சுகங்களும், ஐம்புலன்களின் உணர்வும் செவ்வையாய் அநுபவிக்க முடிய, நன்கு கற்ற பெரியார் மட்டும் பல குறைகள் கொண்டு சுகமும் குன்றிப் பழிக்கப்பட்டு நலிவதேனோ?



ஹாஸ்ய சஞ்சீவினி



குமுதம் :—எண்டி பங்கஜம்! நேற்றிரவு நாடகக்கொட்டகை முழுதும் நிறைந்திருந்ததாமே?

பங்கஜம் :—ஆம், கொட்டகை முழுதும் முழங்கால் ஜலம் நிறைந்திருந்தது.

பத்மா :—பிள்ளைகள் என்ன திரண்டாவிடுகிறார்கள்? அவர்களுக்கென்ன கல்யாணத்துக்கு அவசரம்?

கோமதி :—அவர்கள் திரண்டு விடுவதில்லை. வெளியில் எறி டமாரம் போடுவதில் வீட்டுச் சொத்துகள் தாசி வீடு போய்ப் பாழாய் விடுகிறது.

மனைவி :—சாகக்கிடக்து நல்ல காலமாய்ப் பிழைத்தீர்கள். ஆனால், தலையிலுள்ள மயிரெல்லாம் போய் விட்டதே.

கணவன் :—என் தலைமயிர் போனால் போகிறது. உன் தலைமயிர் போகாமல் தப்பித்ததே. அதுவே போதும். பெரிய பாக்கியம்!

வாங்குபவன் :— இப்புஸ்தகத்தின் விலை என்ன?

வியாபாரி :—பனிரண்டணா. ஒரே விலை.

வாங்குபவன் :—சொல்லிக் கொடுங்கள்.

வியாபாரி :— ஒவ்வொருவருக்கும் புஸ்தகத்திலுள்ளதை இன்னின்னதென்று சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தால் வியாபாரம் செய்தாற்போலத் தான்.

தாய் :—உனக்கு வயது பதினெட்டாச்சே, ஒரு காரியம்கூடத் தெரியவில்லையே. நீ பெண்ணாயிருந்தால் மூணு குழந்தைகள் பிறந்திருக்குமே.

குமாரன் :—அது பெண்கள் சங்கதி. இது புருஷான் சங்கதி அம்மா.

தந்தைமீது பாட்டு :—

எனக்கோ வயது பதினாறுமாச்சு
அண்ணனுக்கோ கண்ணாலம்காணோம்
நீரும் இளையாளும் கூடியிரும்
நான் மலையாளம் போகிறேன்.

V. சிவசுப்பிரமணியம்.

II

கணவன் :—இன்னும் சமையல் ஆகவில்லையா? இந்த அதிகப் பிரசங்கியின் வீட்டுச் சோற்றைவிட ஹோட்டலுக்குப் போகலாம்.

மனைவி :—சற்றுப் பொறுங்கள், வந்துவிட்டேன்.

கணவன் :—என்ன இலை போடப் போகிறாயா?

மனைவி :—சேலையை உடுத்திக் கொண்டு நானும் உங்களுடன் ஹோட்டலுக்கு வருகிறேன். வீட்டுச் சோறு எனக்கும் பிடிக்கவில்லை!

காடோ, செடியோ, கடற்புறமோ, கனமே மிகுந்த நாடோ, நகரோ, நகர்நடுவோ, நலமே செறிந்த வீடோ, புறந்திண்ணையோ—எதுவோ நான் இருக்குமிடத்தை ஒரு நிமிஷத்தில் என் ஆபீஸு ஆக்கிக் கொள்வேன்; உடனே மானஸ தந்திகளும் வர ஆரம்பித்து விடும்—என்கிறார் ஒரு பத்திராசிரியர்.

அன்பன் :—நான் உன் வீட்டுக்கு வாராததினாலே, என்னை வெகுவாக எதிர்பார்த்து வாடினாயோ? பாவம்!

இன்பன் :—நீ வாராததால், வெட்டிப்பேச்சில் பொழுது தொலையாமல் என் வேலைகளை ஏகாந்தமாய் நன்றாகச் செய்ய முடிந்தது. அதில் எனக்கு எவ்வளவோ சந்தோஷமப்பா.

மனைவி :—நீங்கள் என் அழகில் மயங்கி விவாகம் செய்துகொண்டு ஏமாறிவிட்டீர்கள். என்னுடைய ஒரு கண் வெறும் கண்ணாடியில் செய்தது என்பது உங்களுக்குத் தெரியாதே?

புருஷன் :—என் கண்ணே! ஒற்றைக் கண்ணுக்குத் தகுந்தபடி நானும் இமிடேஷன் கண்ணாடியிற் செய்ததையே வைரத்தில் செய்த நகைகளென்று உனக்குப் போட்டு விட்டேன். அது இதுவரை உனக்குத் தெரியாதே?

பாகவதர் :—காஞ்சீபுரம் கருட சேர்வைக்குச் செல்லவேணும். எழுந்தருளத் தேவர் திருவுள்ளம் எப்படி?

வைஷ்ணவர் :—இவ்வருஷத்தில் மழையில்லை, வியாபாரமில்லை, கையில் ரொக்கமுமில்லை. பெருமாள் கிருபையுண்டானால் — பிழைத்திருந்தால்— அடுத்த வருஷம் பார்ப்போம்.

பாகவதர்:—தேவர் அப்படி சாதிக்கக்கூடாது. பாகவதாளுக்கு ரயிலில் ஏற டிக்கட் எதுக்கு? ஏறிவிட்டால் நம்மை யார் கேட்கப்போரா? பிரயாணச்செலவே யில்லை. ஆகாரமோ எத்தனையோ ததியாராதனைகள், எத்தனையோ ராமாநுஜகூடம்! ஆகவே, அந்தக் கஷ்டமுமில்லை. மேல்செலவிற்கோ அட்சபாத்திரம் என்றைக்கும் இருக்கவே இருக்கு! விசாரம் ஏன்?

வைஷ்ணவர்:—டிக்கட்டின்றி ஏறினால் ரயில்வே போலீஸாரும் டிக்கட் பரிசோதகரும் செய்கிற அவமானம் ஜென்ம ஜென்மத்துக்குப் போதும். அட்சபாத்திரம் வெட்கக்கேடு. சரீரத்தில் நல்ல பலமுள்ளவர்கள் பிறரிடம் கெஞ்சி யாசிப்பது கேவலம்.

பாகவதர்:—இதென்ன நூதன வார்த்தை! ஸ்ரீ உடையவரே அட்சபாத்திரம் எடுத்திருக்கிறாரே, அட்சபாத்திரம் ஏற்பது வேஷமா? ரயில் ஏறுவது மோசமா? ததியாராதனையில் உண்பது சோம்பேரித்தனமா? நன்று, நன்று, மற்றெப்படி நடப்பதோ?

வைஷ்ணவர்:—நல்ல வழியில் சரீரக் கஷ்டப்பட்டுத் தேடிய பொருளைக்கொண்டு செலவுசெய்து தீர்த்த க்ஷேத்திர மூர்த்திகளை ஆராதித்து, பிறரிடம் (விசிறியுடன்) மயக்கி யாசிக்காமல், பிறருக்குத் தொந்திரவு கொடுக்காமல், சோம்பித் திரியாமல், வேலைசெய்து பிழைத்து, பகவத்பக்தி செய்வதே பாகவத லட்சணமாம்.

சேஷி :—என்ன உங்கள் வீட்டில் காலையில் பெரிய சண்டையாமே? சங்கதி என்னடி?

மீனா :—அந்த அநியாயத்தை எங்கே சொல்லுகிறது? என் மகளுக்கு நாளைக்குத்தான் 12-வயது ஆரம்பிக்கப்போகிறது. அதற்குமுன்பே போனமாதம் "பெரியமனுஷி"யாய் விட்டாள். சாரதா சட்டம் வரப்போகிறதாம், இந்த மாதத்திலேயே சாந்தி நடத்திவிடவேண்டுமென்று அவள் மாமிவீட்டார் சண்டையிட்டு இந்தப் புதன்கிழமைக்கு நிச்சயம் செய்து விட்டார்கள். அவள் பச்சைக்குழந்தை! பாவம்! இப்படி அவசரப்படலாமா?

படிப்பதற்கு ஆவலிருக்கிறது. ஆனால் மனக்கவலை அதற்கு சத்துருவாக இருக்கிறது. கவலைக்கு மருந்து அதை மறந்திருத்தலே—அதற்கு முயல்வதே.



மாமனார் மறைத்த ரகசியம்.

“அடே துரை! என்ன ஜோரடா! மாப்பிள்ளை போலே பலே ஷோக்காகயிருக்கிறாயே! எங்கே போகிறாப் போலே?”

“இனி வரப்போகிற பெண்டாட்டியைக் கண்டு வரப் போகிறேண்டா? என்னைப் பார்க்க ஆசைப் படுகிறாளாம்; அழைத்துக் கொண்டு போகிறார்கள். அவளையும் ஒரு கண்ணால் எப்படியிருக்கிறாளென்று பார்த்து விட்டு வருகிறேன்.”

“உன் பாடு யோகந்தாண்டா! நீ புதிய மாப்பிள்ளை. நாங்களெல்லாம் பழய மாப்பிள்ளைகளப்பா!”

ஃ

புதிய மாப்பிள்ளையான துரை புதிதாய் மாமனாராகப் போகிறவரோடு ரயில் ஏறிப் புதிய ஊரான தென்கரைக்கு வந்து சேர்ந்தார். மாமனார் யார்? அவர் தான் **அஸ்ஸாம் காங்கிரஸ் தாசில்தார் கிருஷ்ணய்யர்.** அவருக்கு அந்தப் பெயர் வந்த காரணம் ஊர் முழுதும் சொல்லும். அவர் முன்பு தாசில்தாராக இருந்தவர். 1926-ம் வருஷம் அஸ்ஸாம் காங்கிரஸுக்குப் போய் வந்ததற்குப் பரிசாகக் காருண்ய கவர்ன்மெண்டார் அவரை வேலையினின்றும் நீக்கினர். பின்னர் வேலை யொன்றுமில்லை. பாவம்! நமக்கு என்றும் வேலை நிலைக்கும் என்று நம்பிக்கை கொண்டிருந்தால் சம்பளத்தையும் ‘மேல் வரும் படி’யையும் நன்றாகச் செலவிட்டு வாழ்ந்த புண்ணியவான். அப்பொழுதே கொஞ்சம் கடனாளி. இப்போதோ அது பெருகி விட்டது. இந்த நிலையில் அவரது கண்மணியான விசாலாக்ஷிக்குக் கல்யாண ஏற்பாடும் செய்து முடித்து மாப்பிள்ளைக்கு வரதக்ஷிணை ஆயிரம் ரூபாயை ‘750’ ஆகப் பேசி முடித்தும் ஆனது. விசாலாக்ஷியோ 5-வது பாரம் வாசிக்கிற பெண். நேரில் பார்த்த பிறகே விவாக சம்மதியைத் தெரிவிக்க முடியுமென்றாள். பெண்ணின் இஷ்டம் போலவே புதிய மாப்பிள்ளையை அழைத்து வந்து சேர்ந்தார்.

ஃ

விசாலாக்ஷிக்குத் துரையைப் பற்றி யாதொன்றும் தெரியாது. ஆள் வாட்டஞ் சாட்டமாக வளர்ந்து முறுக்காக இருப்பதைப் பார்த்தவுடன் அவருக்குக் கொஞ்சம் திருப்தி தான். பின்னர் படிப்போ—? விசாலாக்ஷி பயங்கொள்ளியல்ல, காரியத்தை விட்டுக் கொடுப்பவளுமல்ல. ஆகவே,

---

யாவரும் அவனுடைய நேசத்தை விரும்ப, நீ ஏன் அவனை எதிர்த்துக் கொண்டாய். உன் அயோக்கியதைக்கு அவன் தகுந்தவனா யில்லாததாலா?

தன் தாயார் மூலமாகத் துரையைத் தன் அறைக்குக் கூப்பிட்டு விட்டாள். துரையும் புதிய பெண்டாட்டியைக் கண்டு அவள் இருக்கிற நாகரீக கிறுக்கில் பரவசப்பட்டுப் போனான். விசாலாக்ஷி துரையை நோக்கி "இந்த பாகத்தைக் கொஞ்சம் விளக்குகிறீர்களா, சந்தேகமிருக்கிறது" என்று சொல்லித் தன் கையிலிருந்த ஆங்கிலப் புஸ்தகத்தை விரித்துத் துரையின் கையில் கொடுத்தாள். படித்த பெண்ணை ஏமாற்றுவது கஷ்டந்தானே!

ஃ

துரை விழிக்கத் தொடங்கினான். அவன் நான்காவது பாரம் வாசிப்பதாகப் பெயரே தவிர, எதையும் சமாளித்து அறிகிற தீவிர பக்குவம் இல்லை. ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்தது இரண்டு மூன்று வருஷங்கள் இருந்து வளர்ந்த செல்லப் பிள்ளை!

துரை புஸ்தகத்தை வைத்துக் கொண்டு முழித்தபடி நின்றான். விசாலாக்ஷியும் சற்று நேரம் சும்மா இருந்தாள். பின்பு துரையை நோக்கி "நீங்கள் என்ன வாசிக்கிறீர்கள்?" என்று மெதுவாகக் கேட்டாள்.

"போர்த் பாரம்" என்றான் ஆங்கிலத்தில் துரை. அப்பொழுது பார்க்க வேணும் அவன் முகத்தை!

மேலே பேச்சென்ன வேண்டியிருக்கிறது? இவ்வளவு போதாதா—துரையின் வண்டோலங்கள் தெரிவதற்கு? துரையும் மெதுவாக அறையை விட்டு வெளியிற் சென்றான்.

ஃ

அந்த சமயம் விசாலாக்ஷி "அம்மா முடியாது. இந்த மூடத்தைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன். என் வாழ்க்கையை—ஆசைகளை—கனவுகளைப் பாழாக்க இவன் எங்கிருந்து வந்துசேர்ந்தான்?" என்று கண்ணீருடன் கதறினாள். இதைத் துரை மற்றொரு பக்கம் இருந்து முழுதும் கேட்டான். அவனது மனம் நாணிற்று. இதற்குள் கிருஷ்ணய்யர் உள்ளே வந்தார். பெண்ணின் மனம் தெரிந்து கொண்டார். 750-ஐக் கொட்டிக் கொடுத்தல்லவா அவனை இட்டு வந்தது. இப்போது வேண்டாமென்றால் பணம் திரும்பி வராது. என் கையிலும் ஒன்றுமில்லை. உன்னுடன் ஆலோசிக்காமல் செய்தது என் தப்பு. என் செய்வேன் ஈச்வரா!" என்று கலங்கினார்.

ஃ

விசாலாக்ஷிக்கு ஒன்றும் தோன்றவில்லை. தந்தையின் எளிய நிலை தெரிந்த சங்கதி. தான் சிநேக லதா போல் கொளுத்திக்கொண்டு மாண்டுவிடுவதில் யாருக்கென்ன சுகம்? தன் பெண் ஜென்மத்திற்காவது ஏதேனும் சுகிர்தம் உண்டா? என்று யோசித்தபடி நின்றாள்.

ஃ

இரண்டு தினங்கள் சென்றன. கிருஷ்ணய்யர் முரட்டு மனிதரில்லை. காங்கிரஸ் பக்தி கொண்டவர் தன் பெண்ணைத் துன்புறுத்துவாரா? "அவனைத் தான் நீ மணக்க வேண்டும்" என்று பிடிவாதம் பிடிப்பாரா? அவர் உள்ளம் மிக்க மெல்லியது. அந்த மெல்லிய உள்ளம் தான் அவரைத் தீனதயாளுவாக்கிக் கடனாளியாகவும் வைத்தது. "என்ன செய்வேன்—இந்தக் கஷ்ட நிலையில் 750- தொலைந்து விட்டதே-பெண்ணுக்கு சம்மதமில்லாத இடத்தில் எப்படித்

வியாதிகள் ஒரு பகுதி உடம்பைச் சார்ந்தனவாகவும், ஒரு பகுதி மனதைச் சம்பந்தித்தனவாகவும், ஒரு பகுதி விதியைத் தழுவியனவாகவும் உள்ளன.

துணிவேன்"—என்று கலங்கியபடி இருந்தார். அடிக்கடி தன் பெண்ணின் முன்பு நின்று, அவள் முகத்தைக் கையால் பிடித்து, அவள் அழகையும் வித்தியாப் பிரகாசத்தையும் நோக்கி விட்டுத் தம் கண்களில் ஜலம் அதிகமாய்ப் பெருகுகையில் சட்டென்று வெளியில் போய் விடுவதாக இருந்தார்.

ஃ

விசாலாக்ஷியும் தந்தையின் பரிதாப நிலையைக் கண்டு கொண்டாள். விதிபோல் நடக்கட்டுமென்று நினைத்தபடி வீட்டுக் கிணற்றருகில் வந்தாள். அங்கு துரை நின்று கொண்டு வெற்றிலையுடன் புகையிலையைப் போட்டபடி இருந்தான்.

"தாங்கள் பரீக்ஷைக்குப் போயிருக்கிறீர்களே; அதன் முடிவு என்னவாகும்?" என்றாள் விசாலாக்ஷி.

"கண்டிப்பாகப் பாஸாய் விடும்."

"நிச்சயமாகவா?"

"சந்தேகமென்ன?"

"மேலே படிக்கிறதாகத் தானே உத்தேசம்?"

"படித்தவர்களெல்லாம் என்ன பயனைக் கண்டார்கள்? நான் நிறுத்தி விடப் போகிறேன்."

"புகையிலையை மெல்லுவதற்கு நேரமில்லையென்றா நிறுத்துகிறீர்கள்? எல்லாம் சகவாச தோஷம்."

"நீ வேண்டாமென்றால் புகையிலையை விட்டு விடப் பார்க்கிறேன்."

"நான் ஐந்தாவது பாரம் வாசிக்கிறேன். பரீக்ஷை தேறி விட்டது என்று மிஸ்ட்ரஸ் நேற்று சொன்னாள். நீங்கள் நான்காவது பாரம் பாஸாவதே திண்டாட்டமாக இருக்கிறதே! ஆண் மக்களுக்கு மான வுணர்ச்சி என்பதே இல்லாமல் போகுமா? என்னை விட நீங்கள் அதிகமாய்ப் படித்துத் தேறி என்னை அதிகாரம் செய்வதாக இருந்தால் எவ்வளவோ ஸந்தோஷப்படுவேனே. அப்படிச் செய்யக் கூடாதா? மனம் வைத்தால் முடியாதா? நான் சொல்லிக் கொடுக்கிறேனே. அவ்விதம் மேலுக்கு வாசிப்பதாயிருந்தால் மட்டுமே நான் விவாகத்திற்கு சம்மதிப்பேன். இல்லையாகில், என் உயிரை மாய்த்துக் கொள்வேன். வேறு எவரையும் மணக்க நான் விரும்பவில்லை" என்று கூறிக் கண்ணீருடன் நின்று பிறகுத் தேம்பித் தேம்பி அழுதும் விட்டாள்.

ஃ

"என் அன்புள்ள விசாலாக்ஷி! நீ அழாதே. நான் படிக்காத ஒரு முட்டாள் தான். ஆனால், படிப்பின் கௌரவத்தை அறியக்கூடிய புத்தி எனக்கு இருக்கிறது. பாஸ் ஆனாலும் ஆகாவிட்டாலும் இன்று முதற்கொண்டு இரவும் பகலும் வாசிப்பதே வேலையாக இருந்து ஒரு பி. ஏ. பட்டத்துடன் உன் முன் வருகிறேன். பிறகு என்னை விவாகம் செய்து கொள். இப்பொழுது கல்யாணத்தை நிறுத்தி விடச் சொல்."

"ஆ! தாங்கள் இந்த ஏழைப் பெண்ணிடம் இவ்வளவுக்கு மனம் இரங்கி விட்டீர்களா? நான் எந்த நகையும் விரும்பவில்லை. நீங்கள் வாசித்து அந்த பி. ஏ. நகையை எனக்குக் கொண்டு வந்து கொடுத்தால் தங்களை நான் என் வழிபடு கடவுளாக

பூமான்களால் ஸ்திரீகளுக்கு ஸுக துக்கங்கள் ஏற்படுகின்றன. ஸுகம் மங்களத்தையும், துக்கம் அமங்களத்தையும் தருகின்றன. எத்தனை பெண்கள் கண்ணீர் பெருகவிட்டு மனநொந்து, கதறித் தங்கள் பரிதாபத்தைப் புருஷர்கள் ஆலோசனை செய்யவில்லை யென்று வியஸனிக்கிறார்கள்.

நினைப்பேன். என் படித்த மனம் அப்படி ஆசைப்படுகிறது. என் தலையில் அடித்து சத்தியம் செய்து கொடுப்பீர்களா?"

"அப்படியே செய்கிறேன். மேலே வானம் அறிய, கீழே பூமி அறிய, எங்கும் நிறைந்து விளங்கும் பகவான் அறிய உனக்கு நான் பி. ஏ. நகை செய்து கொடுக்கிறேன். இது சத்தியம்" என்று விசாலாக்ஷியின் தலையில் கையை வைத்துத் துரை கூறினான். அதே சமயம் அவன் கண்களில் ஜலம் பெருகித் ததும்பிற்று.

"தாங்கள் நன்கு பயின்று பி. ஏ. தேறுவதற்குப் பல வருஷங்களாய் விடும். அதுவரை நான் விவாகமின்றி யிருக்க உலகம் ஒப்பாது. உங்கள் பெற்றோர்களே பிறகு என்னை மணக்க ஒப்பார். தங்கள் சத்தியத்தை நான் நம்புகிறேன். நம்முடைய பெற்றோர்கள் குறிப்பிட்டபடி இப்பொழுதே விவாகம் நடக்கட்டும். அவர்களும் மனது குளிரட்டும். பிறகு தாங்கள் என் மனதைக் குளிரச் செய்யுங்கள்."

"உன் இஷ்டப்படி செய். என்னால் இயன்றவரை இதுமுதல் கஷ்டப்பட்டுப் படிக்கிறேன்."

ஃ

இவ்வளவுடன் ஸம்பாஷணை முடிந்தது. விசாலாக்ஷி தன் தந்தையிடம் நடந்தவைகளைத் தெரிவித்து விவாகத்தை நடத்தும்படி கூறினாள். விவேகசாலினியான தமது குமார்த்தியை அவர் கொண்டாடினார். குறித்த தினத்தில் விவாகமும் நன்கு நடந்தேறியது. மறு வாரத்தில் துரை திடீரென்று எங்கோ சென்று விட்டான். ஃ

வருடங்கள் ஐந்து ஆகி விட்டன. துரையைப்பற்றி எந்த சமாசாரமும் தெரியவில்லை. விசாலாக்ஷி விவாகத்திற்கு முன்பே பருவமடைந்த பெண். இப்பொழுதோ அவள் முன்னிலும் பரமசுந்தரியாய் விளங்கினாள். ஆடவர்களால் அரிவையர்க்கு உண்டாகக்கூடிய ஜீவ ஒளி மட்டும் அவள் முகத்தில் காணவில்லை.

ஒருதடவை அவள் தூக்குப்போட்டுக்கொள்ள எண்ணுகையில் அவளுடைய தாய்வந்துவிட்டாள். மற்றொரு நாள் இரவு தூக்கிட்டுக்கொண்ட சமயம் கிருஷ்ணய்யர் வந்து கதவைத் தட்டினார். அவளை நோக்கி மரணம் வராவிடினும், மரணத்தை நோக்கி அவள் போன பொழுதும் தடங்கல்களே நேர்ந்தன. எவ்வளவோ இரவுகள் அவள் தூங்காமற் கழித்திருக்கிறாள். தன் பதியை எண்ணி எண்ணித் துரையின் இருப்பிடமே தெரியவில்லை. ஃ

கிருஷ்ணய்யருக்கிருந்த சொற்ப நிலத்தில் ஜலம் விடுவதைப்பற்றி ஒரு தகராறு உண்டாகி, அதைக் குறித்து நேரில் விசாரணை நடத்தத் தாசில்தார் அவ்வூரில் முகாம் போட்டார். கிருஷ்ணய்யரும் விசாரணைக்குச் சென்றிருந்தார். மறுநாள்தான் விசாரணை நடக்குமென்று தெரிந்து திரும்பினார். தம் வீட்டிற்கு அருகில் சென்றதும் அங்கு கூட்டமாயிருப்பதைக் கண்டு தாசில்தார்தான் அங்கு நிற்பதாயறிந்து வணங்கினார். அதற்குத் தாசில்தார் "மாமா! தங்கள் குமார்த்தி க்ஷேமமா?" என்றார். கிருஷ்ணய்யர் திடுக்கிட்டார். தாசில்தார் தமது தலைப்பாகையையும் மூக்குக்கண்ணாடி

ஒரு பக்கம் வேறுபட்ட மனத்தினரும் விரோதமுள்ளவர்களும் எவ்வளவு தான் தாழ்த்திக் கேவலப்படுத்தினாலும், கௌரவமுள்ளவர்களுக்கு மற்றொரு பக்கம் சிலர் மதித்து உதவி செய்யவே இறைவன் தூண்டி விடுகிறார்கள்,

யையும் எடுத்துவிட்டு, "மாமா! என் விசாலாக்ஷி சுகமா?" என்றார். கிருஷ்ணய்யர் தன் மருமகனை துரையே தாசில்தார் என்று அறியவும் ஆநந்தத்துடன் தழுவிக்கொண்டார். இதை உள்ளிருந்து கேட்ட விசாலாக்ஷி வியப்புடன் வெளியில் ஓடிவந்தாள். அவளைக் கண்டதும் தாசில்தார் "மாதரசியே காலை வந்தனம்" என்று ஆங்கிலத்தில் கூறினார். விசாலாக்ஷி நாணத்துடனும் பரவசத்துடனும் உள்ளுக்குச் சென்றுவிட்டாள். பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ?

ஃ

இன்று ருதுசாந்தி. பள்ளியறையில் தாசில்தாரும் விசாலாக்ஷியும் இருக்கிறார்கள். நான்கு வாரங்களுக்கு முன் பார்த்த விசாலாக்ஷியா அவள்? இல்லவேயில்லை. அதற்குள்ளாக எவ்வளவு மாற்றம்! அப்பொழுது ஜீவப் பிரேதம் போன்றிருந்த அவள் இப்பொழுது எப்படியிருக்கிறாள்! துய்யதாகிய வெள்ளை நிறத்தையன்றி வேறு நிறங் காணப்பெறாத அவளது கன்னங்கள் இப்பொழுது இடையிடையே ரோஜாப்பூ வர்ணம் பெறுகின்றன. துரை, அல்ல—அல்ல தாசில்தார், அப்பப்ப! என்னமாறுதல்! மார்புதான் எவ்வளவு அகலம்! ஐந்தடி ஒன்பதங்குலம் உயரம் இருக்கிறார். துரையின்மடியில் விசாலாக்ஷிசாய்ந்து கொண்டு வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். "எப்படித் தாசில்தார் ஆனீர்கள்?" என்று இரண்டுதரம் முயன்று மூன்றாவதுதடவைக்கேட்டாள். "அதுவா! எல்லாம் உன் தூண்டுதலால்தான் வந்தது. நீ விரும்பிக்கேட்ட நகையான பி.ஏ. யை நான் பெற்ற பிறகு கலெக்டர் ஆபீஸில் குமாஸ்தாவாகி, என் சாமர்த்தியத்தால் படிப்படியாய் உயர்ந்து கடைசியில் தாசில்தாராக நியமிக்கப்பட்டேன். எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டவசமான சந்தர்ப்பங்களே இந்தப் பதவியைப் பெற வைத்தது. எல்லாம் உன்னுடைய நல்லெண்ணத்தின் பலன் தான்"—என்று சொல்லிவிட்டு, அங்கு மாட்டியிருந்த தன் சட்டைப் பையிலிருந்து பாஸிங்ஷோ சிகரெட் ஒன்று எடுத்துப் பற்றவைத்துக் கொண்டே—"சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்; நீ தூண்டாவிட்டால் நான் பழய பட்டிக்காட்டுத் துரைதான்"—என்றார்.

ஃ

"அடடா! பழஞ்சனியன்களெல்லாம் போக, வாய்ப்புகையிலைக்குப் பதிலாக புதுச் சனியனாகிய 'புகைச்சனியன்' உங்களைப் பிடித்துக் கொண்டுவிட்டானா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் விசாலாக்ஷி.

"நீ அன்று கிணற்றுக்கருகில் சொன்னதுபோல 'எல்லாம் ஸஹவாஸ தோஷந்தான்' என்று சொல்லிக்கொண்டே விசாலாக்ஷியின் முகத்தில் ஸிகரெட் புகையை ஊதினார் தாசில்தார் துரை! ஆனால் விசாலாக்ஷி அவ்வளவுடன் துரையை விட்டுவிடவில்லை.

விசாலாக்ஷி:—நீங்கள் என் விவாகத்தின்போது நான்காவது பாரம்தானே வாசித்துக்கொண்டிருந்தீர்கள். இப்போது தாங்கள் பிரிந்து போய் ஐந்து வருஷங்கள்தானே

என் சிற்றுடலை நீ எதிர்த்திடலாம். என் பிரஸித்த நாமத்தையும் நெடுங்காலமாய் அதற்குள்ள நற்பெயரையும் நீ எதிர்க்க முடியாது. போட்டி போடவும் நீ அருகனில்லை. இந்த ஜென்மத்தில் அதற்கு யோக்கியதையுமில்லை.

ஆகிறது. இதற்குள் நாலாவது பாரத்திலிருந்த நீங்கள் பி. ஏ. தேறி, கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தா ஆகிப் படிப்படியாய் தாசில்தார் ஆகிவிட்டதாகச் சொன்னால் இந்தக் கட்டுக்கதை நம்பக்கூடியதா யில்லையே!

துரை:—உனக்கு நல்ல மூளை இருக்கிறது. நல்ல கேள்வியே கேட்டாய். அது என் தகப்பனாரது ரகசியம். நான் உன்னை முதலில் பார்க்க வந்தபோது எப். ஏ. தேறி, பி. ஏ. வுக்குப் பட்டணத்தில் வாசித்துக் கொண்டிருந்தேன். என் தகப்பனார் கண்திருஷ்டி விழுமென்று சொல்லி முதல்பாரத்தில் மூன்று வருஷம் படிப்பதாகச் சொல்லிவந்தார். இப்படியே ஒவ்வொருபாரத்திலும் இரண்டு வருஷங்கள் படிப்பதாகவும் நான் சுத்த மட்டியென்றும் எல்லோருக்கும் கூறியபடி யிருந்தார். நான் பி. ஏ. பரீக்ஷைக்கு வாசிக்கையில் என் தகப்பனார் தன் கணக்குப்படி நாலாவது பாரத்தில் இரண்டு வருஷங்களாக வாசிப்பதாய்ச் சொல்லி வந்தார். அப்பொழுதுதான் உன் முகதரிசனம் பெற்றேன். நீ ஒரு ஆங்கில புஸ்தகத்தை வாசிக்கச் சொன்னாய். அதைப் படிக்கத் தெரியாத முட்டாள்போல் பாசாங்கு செய்தேன். நீயும் அதை நம்பி என்னை வெறுத்தாய். பிறகு கிணற்றின் அருகில் என்னைக் கண்டபோது—"மேலே படிக்கிறதாகத் தானே உத்தேசம்?" என்று என்னைக் கேட்டாய். அப்போதும் நான் ஒரு மூடனைப்போலநடித்து, படிப்பை நிறுத்திவிடப் போவதாகச் சொன்னேன். பிறகு விவாகமும் ஆயிற்று. என் தகப்பனார் என் மூலம் உன் சங்கதிகளையெல்லாம் அறிந்து, நீ ஆச்சரியப்படும்படி செய்யவேண்டுமென்று, நான் எங்கோ ஓடிவிட்டதாய் கதை கட்டிவிட்டார். நான் பி. ஏ. தேறியதும் தகுந்த இடத்தில் உத்தியோகத்திற்கு பலமான சிபாரிசு செய்து வைத்தார். இது நமது ஊரில் யாருக்கும் தெரியாது.

விசாலாக்ஷி:—மாமா அவர்கள் வெகு கெட்டிக்காராக இருக்கிறாரே. என்னை ஏமாற்றிவிட்டாரே. "சீக்கிரம் வருவான்—எங்கே போவான்? உன்னைவிட்டு அவனுக்கு வேறுகதி எங்கேயிருக்கிறது" என்று அடிக்கடி என்னைக் கண்டு தேறுதல் கூறிப் போவாரே. அவ்வளவும் சாமர்த்தியமா? அவரைவிட அதிக சாமர்த்தியமாக நீங்கள் படிக்கத் தெரியாதது போல அன்றைக்குப் பெரிய நாடக வேஷம் போட்டீர்களே. நீங்களும் ரொம்ப கெட்டிக்காரர் தான்.

துரை:—என் தகப்பனாருக்கு உன்மீது மிக்க அபிமானம். படித்த மருமகள் என்று அதிகப் பிரியம். நீ தூக்குப்போட்டுக்கொண்டதும் அந்த சமயம் உன் தகப்பனார் வந்துவிட்டதுமான சங்கதி ஊர் முழுதும் தெரிந்து என் தகப்பனாருக்கும் எட்டவே, 'இனி விளையாட்டு வினையாகும், உடனே விசாலாக்ஷியிடம் போ.' என்று நான் இருந்த ஊருக்கு வந்து சொன்னார். உன் தகப்பனார் நிலங்கள் சம்பந்தமாய் எழுதிய மனுவும் எனக்கு முன்பே வந்திருந்ததால் அதை விசாரிக்க வருகிறவன்போல் புறப்பட்டு வந்தேன். நான் இப்பொழுது யானைபோல் உப்பிவிட்டதால் என்னை அடையாளம் தெரிந்து கொள்ள அவரால் முடியவில்லை. என் தகப்பனார் உத்தரவுப்படி நான் இது

ஒரு தம்பிடிக்குப் பச்சைக் கொத்தமல்லி வாங்கி வரச் சொல்லி, அது மிகவும் குறைவாக இருந்தால், நீ காசை எடுத்துக் கொண்டாயா என்று கேட்க முடியாது. காசு தாராமல் அது வராது. தின்று குறைந்ததாகச் சொல்லவும் வழியில்லை. இவ்விதம் குற்றம் பேசமுடியாதவைகளு முண்டு.

வரை நடந்ததுபோல், நீயும் அவருக்குப் பிரியமான மருமகளாயிருந்து, அவருக்கு சொந்தப் பெண்குழந்தையில்லாத துக்கத்தை மாற்றிவிட வேண்டும். அப்படியே செய்கிறாயா?

ஓர்
எட்டில்
வளர்க்காத வளர்ப்பும், இரண்டெட்டில் படியாத படிப்பும், மூவெட்டில் செய்யாத விவாகமும், நாலெட்டில் பெறாத மகவும், ஐந்தெட்டில் தேடாத செல்வமும், ஆறெட்டில் காணாத ஸ்தலமும், ஏழெட்டில் பங்கிடப் படாதசொத்தும், எட்டெட்டில் சாகாதசாவும் பயன்படாமல் விருதாவாகித் தனதுகௌரவம் இழக்கும். அந்தந்த எட்டுக்குள் அவரவர்களைச்சேர்ந்தோருடனிருந்து அதது நிறைவேறினால்தான் மானிட யோகலாப க்ஷேமமாம்.

விசாலாக்ஷி :—எனக்கு பி. ஏ. நகையைத் தந்த என் மாமனார் அவர்களை நான் மறப்பேனா? அவர் எனது இரண்டாவது தந்தையல்லவா? என் மாமி என் தாயல்லவா? இப்போதே அவர்களிடம் போய் சாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்க ஆசையாயிருக்கிறது. கொஞ்சம் கதவைத் திறக்கிறீர்களா?

துரை :—இப்பொழுது கதவை நான் திறந்தாலும், வெளிக்குப் பெரிய பூட்டு போட்டுப் பூட்டியிருப்பதால் போகமுடியாது. நானும் இந்த சமயத்தில் சக்கரைக் கட்டியான உன்னை விட்டுவிட முடியாது. எல்லா நமஸ்காரங்களையும் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது எனக்கு சலாம் போட வாடி என்று தன் காதலியைக் கட்டியணைத்து முத்தமிட்டான். பின் நிகழ்ந்ததைச் சொல்லித்தான் தெரிய வேணுமோ?

ஒரு சிறு கதை.

தன் நாயகனின் மனதைத் திருப்தி செய்வதற்காக அவனது குருவுடன் இணங்கி யிருக்க அவள் முயன்றாள். ஆனால், அவள் தன் மனத்தை எத்துணைக் கட்டாயப் படுத்தியும் குருவின் அருகில் அமர ஒப்பவில்லை. அவள் கற்பு துடித்தது. தன் சக்திக்கு மீறித் தன்னை அக்குருவின் பக்கலில் இருத்தினாள். எனினும், மறுகணத்தில் மாதுநல்லாள் மூர்ச்சையானாள். சீடனைச் சோதிக்க வந்த குருவும் அம்மாதரசியைத் தாயென வணங்கினார். இவ்வளவையும் பரணியின் மேல் மறைந்திருந்து அப்பெண்ணின் கணவன் கவனித்தான். அவன் நம்பிய குருவின் தூய்மையும் உண்மையாயது.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரதாபன்
REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

என்ன சகோதரச் சண்டையோ!



அப்பப்பா! என்ன சொல்லுவேன்! எது சொல்லுவேன்! கண்டாலுங் கண்டேன்;—பார்த்தாலும் பார்த்தேன்! விகடனாகிய நான் மேல் எழு லோகத்தையும், கீழ்எழு லோகத்தையும் சுற்றி மூலை முடுக்கு இடுக்கு சந்து பொந்து எல்லா இடமும் பார்த்தேனப்பா! இந்த சகோதரச் சண்டையைப் போல இந்த உலகத்திலே வேறு எதையும் பார்க்கவில்லையப்பா! கொஞ்சம் ஏமாந்தால் 'சுண்ணாம்பு' தடவி விடுவார்களப்பா! அவன் கை இவன் குடுமியிலும், இவன் கை அவன் குடுமியிலுமாக ஆட்டி, மாட்டி, நீட்டிக் காட்டி குலுக்கிப் பிலுக்கு விடுகிறார்களய்யா! அதிலும் இன்னும் கொஞ்சம் ஏமாந்துவிட்டாலோ வந்ததப்பா ஆவிக்கே அனர்த்தம்! இவன் கை அவன் நெஞ்சிலும், அவன் கை இவன் நெஞ்சிலுமாக கும்மா குத்து கொடுத்துக் கொண்டு, உயிருக்கே உலைவைத்து விடுகிறார்கள் ஈசனே! இவ்வளவுக்கும் ஆதிக் கலகக் குப்பையோ ஒரு அற்ப சொத்தை தூசியிலிருந்தே தோன்றிக் கொள்கிறதடா அப்பா!

ௐ

கேட்கிறீர்களா! கேளுங்கள். ஒருத்தனுக்கு மூன்று பிள்ளைகளும் ஒரு பெண்ணுமென்று வைத்துக் கொள்ளுங்களேன்! இந்த நாலும் நாலு விதண்டா வழி! எப்போ எவன் ஏமாறுவானோ என்று ஒருவன்மேல் ஒருவனைய்க் காத்திருக்கிறார்களய்யனே! எந்த வேளையிலாவது சற்றே கண்ணயர்ந்தாலோ, பருந்து அடித்துக் கொண்டு போவதைப்போல ஓரே அமுக்காக அமுக்கிக்கொண்டு ஒருத்தனே ஆளப் பார்க்கிறானையா! இதிலே தாயும் தகப்பனும் காட்டுகிற பாசத்தின் பக்ஷபாதம் வேறே! ஒரு மகனை உயர்த்துகிறது, இன்னொரு மகனைத் தாழ்த்துகிறது! இதிலே ஒருவனை ஒருவன் 'உர்' என்று பார்க்கக் கற்றுக்கொள்கிறார்கள். பிறகு எல்லோருக்கும் கண்ணாலமாகிறதையா! அது ஆன இரண்டாவது மாதத்திலேயே வந்த புதிய மஹா ராணியம்மாள் குண்டுணியாகிறாள்! அவள்

ஒன்பது காசு கடனைக் கொடுத்துத் தீர்த்து விடலாம். ஒன்பது ரூபாய் கடனைத் தீர்ப்பது வெகு கஷ்டம், ஒன்பது நூறு கடனோ——?

போடுகிற் தாபத்திலே தூண்டுதலிலே பெரியவனுக்கும் சிறியவனுக்கும் வாய்க்குத்து கைக்குத்து தொடங்கிக் கொண்டு, ஒன்றாயிருந்த குடும்பம் ஒருமிக்கடபார் என்று வெடித்துத் தனித்தனியாகச் சீரழிந்து வேறு வேறு குடும்பமாகிறது! சொத்துப் பாகங்களும் பிரிந்து, அதுமுதலாகத் தொடருகிறதடா தாயாதிச் சண்டை! இதிலே மெத்த மெத்த சித்து வேடிக்கைகளெல்லாம் விளைகின்றனவப்பா!

ஃ

பெரியவனோ மற்ற இருதம்பிகளின் பூண்டே இருக்கக்கூடாதென்று கைலாசம் அனுப்பப் பார்க்கிறான். அடிவேரையே பிடுங்கிவிட ஆனமட்டுக்கும் நயவஞ்சகமாய் வேலை செய்கிறான். 'தம்பியே! என் ஆவியே! அருமருந்தே!' என்று உறவு நுழைத்து இளிக்கிறான்! இளையவனோ சற்றுத் திறந்த கையாகச் செலவுகள் செய்யத் தலைப்பட்டுக் கடனாளியாகி, ஆயுளும் கொஞ்சமாய் முடிந்து போகிறான். தாயும் தந்தையும் முன் பின்னாகக் காலமாய் விடுகிறார்கள்! பார்க்கிறீரையா பெரியபிள்ளை இதுதாண்டா சரி யென்று! சின்னஞ் சிறுநாள் வரை வெகு நியாயமான மனுஷ்யனாய் மாயமாலம் காட்டிவிட்டு அப்பால் எடுக்கிறானையா தன் சுயரூபத்தை! தம்பியின் பிள்ளைகளைத் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு அவன் வீட்டைக் குடிக்கூலிக்கு விட்டு வாடகைப் பணத்தைத் தன் சொந்தப் பணமாக்கிக் கொள்கிறான்! நிலம், மற்றும் வரவேண்டிய பணம் முதலியவற்றையும் தானே அப்பிக்கொண்டு ஏப்பமிட ஆரம்பிக்கிறான்! தம்பி பிள்ளைகளுக்குக் கட்டிக்கொள்ள ஒரு கந்தையும் காண்பிப்பதில்லை! எல்லாம் தன் பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் ஆகிறது! தம்பி பிள்ளைகளைத் தட்டு மண்ணெடுக்க அனுப்பிவிடுகிறான்! அவர்களுக்குப் படிப்பு இடிப்பு தான்! தன் குழந்தைகளை மட்டும் பள்ளிக்கூடம் அனுப்பத் தயார்!

ஃ

இப்படி ஒரு தம்பியின் குடும்பத்தை மொட்டை யடித்து நடுத் தெருவு நாராயணனாக அலையவிட்டு விட்டு, இன்னொரு தம்பியின் தலையைத் தடவப் புறப்பட்டு விடுகிறான்! தம்பியின் கடன்காரர்களைத் தூண்டி நிலம் வீடுகளை ஏலத்தில் விடச் செய்து இன்னொருவன் மூலம் வெகு குறைந்த தொகைக்குத் தானே எடுத்துக்கொண்டு, வீட்டைக் காலிசெய்யும்படி தம்பிக்கு நோட்டீஸ் கொடுக்கிறான்! தம்பி என்ன கெஞ்சினாலும் பருப்பு வேகிறதில்லை! அவனை வீட்டைவிட்டுத் துரத்தி இருவர் சொத்தும் தனக்கே ஆக்கிக்கொள்கிறான். இந்த லக்ஷணத்திலே அண்ணன் வீட்டை நினைத்துக்கொண்டு ஆசையாய்த் தங்கை வர, அவளை 'வா' என்று கூட அழைக்காமல், தன் மனைவி பிள்ளைகளையும் அவளிடம் பேசாதபடி செய்துவிடுகிறான். வந்தவளோ வயிறெரிந்து தன்னிடம் எவரும் பேசாதது கண்டு, தன் பயணத்தை சீக்கிரம் வைத்துகொண்டு அண்ணனிடம் பிரயாணம் சொல்லிக்கொள்ளப் போகிறாள். அவனோ அதை முன்பே தெரிந்துகொண்டு, தான் 'போய்வா' என்று சொன்னால், எங்கு ரயில் செலவு கேட்பாளோவென்று அந்த சமயம் வீட்டில் மனைவிமக்களையடித்து ஒரு கலகம் செய்துவிட்டுக் கோபமாக வெளியே போய்விடுகிறான். பிரயாணம் சொல்லிக்கொள்ள

ஒருவனுக்கு எல்லா ஆணவமும் அவனுக்குப் பெண்டாட்டி வந்த தினத்திலிருந்து தொடங்கி, அப்போது தான் பெரிய புது மனிதனாகிறானும்! முன்பு பழகியவர்களை அடையாளம் தெரியாத வாழ்வுங்கூட அப்போது தானும்!

வந்தவளோ இந்த அல்லோல கல்லோலத்தைப் பார்த்துப் பிரமித்துவிட்டு யாரிடத்திலும் பயணம் சொல்லிக் கொள்வதற்கில்லாமல் அண்டை வீடு சென்று தன் குறையை ஒருமுறை சொல்லியழுது ஓய்ந்து, அன்று சாப்பாட்டுக்கும் கூப்பாடாய் தன் மூட்டையை எடுத்துக்கொண்டு, வண்டிவர நாலுமணி நேரத்துக்கு முன்பே ரயிலுக்குச் சென்று காத்திருந்து ஊர் போய்விடுகிறாள்! அத்துடன் தான் பிறந்த வீட்டுஆசையை மறந்துவிட்டு, கொண்ட கணவனின் ஊரிலேயே உட்கார்ந்துவிடுகிறாள்! சுமங்கலியான இவள் கதியே இப்படியானால், இனி அமங்கலியாய் அண்ணன் வீட்டில் உட்கார்ந்துகொள்ளவே வருவாளானால், அண்ணி அவள்மேல் குதிரை சவாரிகள்செய்யக் கேட்கவேணுமோ! இப்படியாக மூன்றாவது சனியனும் தொலைந்துபோகவும், அண்ணனுக்கு மெத்த சந்தோஷம் பொங்கிக்கொள்கிறது! இப்படிப்பட்ட படுபாவிகளுக்கேதான் தெய்வம் உடன்பிறப்புகளைக் கொடுக்கிறதப்பா! உள்ளபடியே உடன்பிறப்புகளுக்கு ஆசைப்படுகிறவர்களுக்கோ—உள்ளதையும் வெடுக்கென்று பிடுங்கிக்கொள்கிறது!

ஃ

மேலை விகடன் சொன்னது ஒரு தினுசு! இனி இன்னொரு வகையையும் சொல்லுகிறேன். தம்பி திடீரென்று மார்படைத்து மாண்டுவிட, அண்ணன் அனைத்தையும் ஆளப் பார்க்க, தம்பியின் பிள்ளைகளோ விவகாரநுட்பம் தெரிந்த குட்டிகளாய் பெரியப்பனை அடியோடு விலக்கி, எல்லாம் தாங்களே பார்த்துக் கொண்டுவிடுகிறார்கள்! அதன்மேல் தன் தம்பி பிள்ளைகளைக் கெடுக்கவும், தந்திரமாய் நிலங்களை அபகரிக்கவும் ஆரம்பிக்கிறான். தன் நிலத்தை உழுது பயிர் செய்யும்போதெல்லாம் தன் தம்பியின் நிலத்திலும் நாலேந்தடி சேர்த்துப் பயிர்செய்கிறான்! கண்டபடி தம்பியின் மக்களைத் திட்டுகிறான். அவர்களோ புத்திசாலிகளாய் எதற்கும் பதிலே சொல்வதில்லை!

ஃ

சகோதரர்களுக்குள் பாகங்களாகி வெவ்வேறு குடித்தனமாய்விடுகையில், தாய்தந்தையரை யார் காப்பாற்றுவதென்று கேள்வி பிறக்கிறது! அண்ணனாகிய எமகாதகன் மெதுவாகநழுவிவிட, இளையவனே அந்தப் பாரத்தை ஏற்றுக் காத்து, பிறகு அவர்கள் இறந்தபோதும் அண்ணனுக்குச் சொல்லியனுப்பியும் வராது போக, தானே கடைசிச் செலவையும் செய்கிறான். அண்ணனோ பச்சைப் பல்லாக்கு போகிற வழியில் ஏதோ அன்னிய மனிதன்போல் அந்தக் கூட்டத்தில் தானும்சேர்ந்துகொண்டு மயானம் வரை சென்று, ஒப்புக்கு ஆற்றில் மூணு முழுக்கு முழுகிவிட்டு வந்துவிடுகிறான்! அப்பன் இறந்த திதியும் செய்வதில்லை! எல்லாம் தான் செய்தாலும், தம்பி செய்தாலும் ஒன்றுதான் என்று வெகு உருக்கமான உறவு வார்த்தைகளை உருட்டிவிட்டு, தன்பாட்டில் தானும் தன் மனைவிமக்களுமாக ஒதுங்கிவிடுகிறான்!

ஃ

இதிலே இன்னொரு தினுசு! பெற்றோருக்கு அன்னமிட இளையவன் மறுத்துவிட, மூத்தவனோ தன் பெண்டாட்டிக்கு வேலை செய்து

நல்ல நாள். சிவராத்திரி நாள். புண்ணிய நாள். அந்தப் பரிசுத்தமான நாளில், தான் சுட்டுக் கொன்ற பறவைகளை மூங்கிற் கட்டையின் இருபுறமும் தொங்கவிட்டுக் கொண்டு பாவியொருவன் விலை கூறியபடி போகிறான்.

கொண்டு புசிக்கும்படி சொல்லிவிட, அங்கே பாவம் கிழவனும் கிழவியும் இருவேளை உணவு ஒரு வேளையாய்ச் சுருங்குவதைக் கண்டும், திட்டுகளைக் கண்டும் வயிறெரிகிறார்கள். இங்கே விகடன் கிழக்கட்டைகளான பெற்றோருக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறேன். நீங்கள் சாகிறவரையும் சொத்தும், சாவிக்கொத்தும் உங்களிடமே வைத்துக்கொண்டு மற்றநாய்கள் உங்கள் காலடியில் கிடக்கச் செய்துகொண்டால், பச்சைப் பல்லக்கு ஏறுகிறவரை மீறுகிற மீசை முறுக்குகிற ராஜாவாகவே வைபவமாய் இருக்கலாம். இதை மறவாது மனதிலிட்டுக்கொள்ளுங்கள்! இதில் ஏமாறினீர்களோ வந்தது மோசம்!

ஃ

அப்பனையும் ஆத்தாளையும் வெளித் திண்ணையில் வைத்துத் தகரக்குவளையும் சட்டியும் தந்து கஞ்சியைக் கொட்டுகிற பிள்ளைகளும் உண்டு. இப்படிச் செய்த குடும்பம் விடிகிறதே யில்லை! தன் குமாரன் செய்யும் அக்கிரமத்தை எவரிடமேனும் வயிறு கொதித்துச் சொன்னாலோ, உடனே குத்தும் உதையும் திட்டும் தொடங்கிவிடுகிறது! என்டாப்பா சொன்னோம் என்று அவர்களைக் கண்ணீர் வடிக்கச் செய்வதுமுண்டு! இப்படிச் செய்கிற படுபாவிகள் தங்கள் அப்பன் ஆத்தாள் கண் மூடியவுடனே,—சரியானவைத்தியங் கூடச் செய்யாமல் அவர்கள் இறந்த பிறகோ,—ஆகா! புஷ்பங்களென்ன, வாத்தியகோஷங்கள் என்ன! ஆரவாரத்துடன் புஷ்பப் பல்லாக்கில் மயானம் சேர்க்கிறார்கள்! இது ஒரு தமாஷ்! இப்படிக் குமாரர்கள் ஆதரிக்காது போய்விட, பெற்ற மகளோ காலமுழுதும் தன் பக்கம் வைத்திருந்து ஆதரிக்கிற சங்கதிகளும் உண்டு. அதற்குத் தகுந்தபடி கண்ணான மருமகன் வருவதும் பூர்வ பாக்கியமே!

ஃ

விகடன் இப்போது வேறொரு மோஸ்தர் சொல்லுகிறேன். அண்ணன் தம்பிகள் ஒரே வீட்டில்தான் இருப்பவர்களானாலும், அந்த வீடு பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, அதிலேயே வெவ்வேறு குடும்பமாய் வசிப்பதும் உண்டு. இதிலே விரோதம் ஒன்று கிளம்பிவிட, அவன் வீட்டார் இவன் பாகபக்கமும், இவன் அவனுடைய பாகபக்கமும் போகாது தூரத்தூரப் பிரித்து மூங்கிற்பாய், பலகைகள் முதலியவைகளால் தடுத்துப்பிரித்துக் காட்டிக்கொள்வார்கள். தப்பித்தவறி ஒரு வீட்டானது குழந்தையோ—நாயோ அப்படி அந்தப் பக்கம் போய் வந்துவிட்டால் போதுமையா! அன்றைக்கெல்லாம் சண்டையும் சச்சரவுகளுமாய்விடும். இவள் அவளை உன் நெஞ்சிலுள்ள இரண்டையும் அறுத்து எறிவேனென்பாள்! இதைக்கேட்க மனம் தாளாமல் தம்பி எழுந்து குதிக்க, அண்ணன் அதற்கு மேல் குதிக்க இது ஒரு கண்ராவிக் கதை! இதில் இன்னொரு வேடிக்கையடா அப்பா! அவரவர்கள் சம்பாதிப்பதை அவரவர்களே பொங்கித் தின்றுவிட்டு, அடுத்த பக்கத்தில் அடுப்பு மூட்டாதிருந்தாலுங்கூட, அதை ஏனென்று கேளாமல் உண்ணவும் அழைக்காமல் ஜாடையாய் இருந்துவிடுவார்கள்! இந்த அழகில் பெரிய பிள்ளையிடத்தில் ஒரு பத்துநாள் பெற்றோர்கள் சாப்பிடவேண்டும்.

அந்தப் பழய காலத்தில் கூட ஜனங்களுக்குப் பிரியமான கிறிஸ்துநாதரை அரசாங்கம் விரோதித்திருக்கிறது. ஜன அபிப்பிராயம் ஒன்றைச் சிலாகிக்க, அரசாங்க அபிப்பிராயமோ அதை விரும்பி ஏற்பதில்லை. இது சாதாரணம்.

அவனுக்குத் தக்கபடி தலையசைக்க வேண்டும். பிறகு இன்னொரு பிள்ளையிடம் மற்றொரு பத்துநாள் உண்டுவிட்டு, இங்கும் இப்பக்கம் தலையாட்டிவிட்டு, எப்படியோ தங்கள் காலத்தை முடித்துக்கொண்டு சிவனே என்று போய்விடுவது முண்டு!

ஃ

வேறு சிலர் அண்ணன் இளிச்சவாயனானல் தான் சம்பாதிப்பதை ஒரு தம்பிடிகூடச் செலவிடாமல் அண்ணனிடமே தின்று ஏப்பமிட்டுவிட்டு, அண்ணன் இறந்ததும் அவன் குஞ்சு குழந்தைகளுக்கு விரோதிகளாகி, அவன் வீடுவாசல் நிலங்களுக்கு ஒரு எமனாகவும் இருந்து அப்படியே அந்த சொத்துகளை அப்பிக்கொள்ளப் பார்ப்பதும் உண்டு. அப்படியே செய்துவிட்டு அண்ணன் பிள்ளைகளை நடுத்தெருவில் நிறுத்தி ஒட்டாண்டிகளாக்குவதுமுண்டு! இது தின்ற சோற்றுக்குச் செய்கிற மஹா விஸ்வாச வேலையாக்கும்!

ஃ

சில அண்ணன்மார் தம்பியின் விஸ்வாச குணத்தைக் கண்டு, வெகு நயமாகத் தட்டிக்கொடுத்து எல்லா வேலைகளையும் அவர்கள் மூலமாகவே வாங்கிக்கொண்டு, விருந்து விசேஷங்களுக்குமட்டும் அழைக்காமல் ஜாடையாய் இருந்துவிட்டு, நீ என் அன்றைய விசேஷத்துக்கு வரவில்லை, உனக்குத் தெரிந்திருக்குமென்றும், வருவாயென்றும் காத்திருந்தேனே என்று பசப்புவதும் உண்டு; அதை உண்மையென்று தம்பி நம்புவதும் உண்டு! சில தம்பிகள் அண்ணனுடைய கபடம் தெரிந்திருந்தும் அவன்மீதுள்ள பாசம் இழுப்பதால், அவன் என்ன பேதமாய் நடந்தாலும் அவனைவிட்டுப் பிரியாமல் அவனுக்கு சதா தொண்டு செய்தபடி யிருப்பதும் உண்டு. இது ஒரு உத்தமமான உயர்ந்த வகுப்பு!

ஃ

இன்னும் சில தம்பிகள் அண்ணன் குணத்தைக் கண்டு வெறுத்துவிட்டு அவன் வீட்டுவாசற்படியை மிதிக்காமல் இருந்து, பிறகு அண்ணன் காயலாவாகக் கிடப்பதைக் கேட்டு ஓடிவந்து சமயஸஞ்சீவியாக உதவுவதும் உண்டு! இப்படி உதவியதைப் பிறகு அண்ணன் நினையாமல் தம்பியின் தலைக்கே பாக்கு பிடிப்பதும் உண்டு! வேறு சில தம்பிகள் பணக்காரனாகிய அண்ணனிடம் கடன்வாங்கிப் பிறகு திருப்பிக் கொடுக்க முடியாமல் தங்கள் வீடு நிலங்களை அந்தக் கடனுக்குப் பதிலாகத் தந்து தொலைப்பதும் உண்டு! அண்ணனே தம்பிகள்மீது வியாஜ்யம் செய்து அவர்களின் நிலம் வீடுகளைத் தன் கடனுக்கு ஈடுசெய்துகொள்வதுமுண்டு! சில அண்ணன் தம்பிகள் பெண்களை ருசி பார்ப்பதான அக்கிரமத்திலும் ரகசியமாய்க் கை நனைக்கிறார்கள்! இந்த அட்டுழியத்துக்கு ஆண்டவனேதான் கவனிக்கவேண்டும்!

ஃ

அக்கிரமத்தில் அபகரிக்கிற அண்ணன் தம்பிகளின் சொத்துகளுக்கு ஒரு கூத்திப்பிள்ளை தலை காட்டிக்கொள்ள, அவன் மயக்குகிற மயக்கில் எல்லா சொத்துகளையும் அவன் பேருக்கெழுதிப் பிறகு மோசம் போய்த் தலையில் அடித்துக்கொள்வதும் உண்டு! சில அண்ணுக்கள் தம்பியின் தலையைத் தடவி எல்லா

உத்தமர்களை எதிர்க்கும் மூர்க்கன் எத்தனைப் பலாஷ்டிகனுயிருப்பினும், கடைசியில் உத்தமர்களின் வயிறு எரிந்த சாபத்தை அவன் அனுபவித்தே இறக்க வேண்டும். அந்த சாபம் அவனுக்கு குடும்ப சாபமாகுமோ என்னவோ!

சொத்துக்களும் தானே எடுத்துக் கொண்டு அந்தப் பெரிய சொத்துக்களுக்குச் சரியான உயில் எழுதி வைக்காமல் இறக்க, பிணம் வீட்டில் கிடக்கும்போதே பெரிய கலகமாகி, என் பாகத்தை எனக்குக் கொடு என்று ஒவ்வொருவரும் பெரிய சண்டை பிடிக்க, கடைசியில் சவம் நாறி அழுகிப் போலீஸாரின் துணையுடன் மயானம் செல்வது முண்டு !

ஃ

வேறு சில அண்ணன் தம்பிகள் எல்லா விஷயங்களிலும் ஒற்றுமையாகக் கூடி உழைப்பார்கள் ! ஆனால் சொத்து—பணம்—என்ற விஷயத்தில் மாத்திரம் வெவ்வேருகி அவனவன் தனியாக வாழ்வதும் உண்டு ! இன்னும் சில பக்கா குள்ளநரிகளான அண்ணன்கள் விவாகமானதும் தம் பெற்ரோர்களைப் பெரிய அண்ணனிடமும் தம்பிகளிடமும் அனுப்பிவிட்டுத் தானும் தன் மக்களுமாகத் தனியாகிச் சொத்து சேர்க்கப் பார்ப்பதும் உண்டு! அண்ணன் தம்பிச் சண்டையில் தம்பி அண்ணன் விரலைக்கடிப்பதும், தம்பியின் மண்டையை அண்ணன் உடைப்பதும், சாவு வாழ்வுக்குக்கூட வராதிருந்துவிடுவதும் உண்டு ! உத்தியோக மமதையில் தன் உடன்பிறந்தாரைக் கேவலம் கூலிகளினும் கேடாக நடப்பிக்கும் சகோதரத் துரோகிகளும் உண்டு. அண்ணன் இறந்ததும் அவன் மனைவிக்குச் சொத்துகளை விடாமல் அபகரிக்கக்கோர்ட்டுக்குப்போய் அவ்வழியிலே வக்கீல்களுக்கு அழுது ஓட்டாண்டிகளாவதும் உண்டு. தன் கணவன் சொத்தை அவனது அண்ணன் தம்பிகளிடமிருந்து கைப்பற்றக் கோர்ட்டேறி, தன் பக்கமே தீர்ப்பாகியும், பெற்ற சொத்துக்களையெல்லாம் கோர்ட்டுச் செலவுகளுக்கும், பட்டகடன்களுக்கும்கொடுத்துவிட்டு ஏழையாகிற பெண்களுமுண்டு.

ஃ

இந்தவிதமாக, இந்த அண்ணன் தம்பி சண்டைகளும், அதிலே நடக்கிற சண்டாளத்தனங்களும் அப்பன் சொத்து வைத்துப்போவதால்தான் ஏற்படுகின்றனவென்று விகடனுக்குத் தோன்றுகிறது. எந்த சொத்தும் வைக்காமற்போன இடத்திலோ ஒரு சச்சரவையும் காணேம்! எந்தப் பகையையும், கொலையையும் காணேம் ! அப்படியானல், எந்தச் சொத்தும் வைக்காமல் உள்ளவரை தின்று கழித்துவிட்டுப் போவது நல்லதா என்ருல், அதுவும் சரியானதல்ல என்று நீங்களே சொல்வீர்கள் ! பின் எதுதான் சரியானதென்பதை நீங்களே முக்கி முக்கிக் கண்டுபிடியுங்கள். ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

உத்தியோக பதவியிலுள்ள சிலர் தங்களின் மனசாக்ஷிக்கு நியாயமென்று தோன்றுவதைத் தைரியமாய்ச் செய்யத் துணிவதில்லை. அது தன் சக்தியின்மையாலல்ல. அவ்விதம் துணிந்தால் தங்களைத் தாழ்ந்த வேலைக்கு மாற்றிவிடுவார்களோ, அல்லது வேலையே போய்விடுமோ என்று நடுங்க வைக்கிறது. தன் குடும்பத்தின் பிழைப்புக்காகத் தன் வேலையையும் காப்பாற்றிக்கொண்டு உயர்ந்த சம்பளத்தையும் எதிர்பார்ப்பதானல், அப்போது தனக்கு மேலுள்ள உத்தியோகஸ்தர்களைப் பல வழிகளிலும் திருப்தி செய்து கெஞ்சவும் வேண்டிவருகிறது. என் செய்ய ? உத்தியோகத்தை விட்டால் வேறு கதியில்லையே ஈசா !

முகம் நோக்கில் வாலிப பருவமே. தலையை நோக்கில் வாடா மல்லிகை நிறைந்து வயோதிகத் தோற்றம் காண்கிறது. வயது 70-போல் தோன்றுகிறது.



சின்னகடைத் தெருவு, சின்ன தம்பி பங்களாவில் சின்ன பேட்டை சின்னசாமி பாகவதர் சின்ன மேளம் வாசிக்கும் சின்னக்கண்ணுவுடன் சின்ன கதை செய்கையில், சின்னம்மா தாசியும் அவள் பெண் சின்ன வயதுள்ள சின்ன குட்டியும் கேட்க வந்து சின்ன வார்த்தைகள் பேச, கோபங் கொண்ட சின்னக்கண்ணு சின்னகுட்டியின் சின்ன ரவிக்கையைச் சின்ன பின்னமாய்க் கிழித்து சின்ன காயம் செய்து விட, சின்னம்மா சின்ன கோர்ட்டுக்கு சின்ன கேஸ் கொண்டு போயிருக்கிருளாம். எப்படி முடியுமோ அது சின்னவாளுக்கே தெரியும்!

ஃ

அடுத்தடுத்து அவர்கள் நம்ம வீட்டுக்கு வருவது அன்புக்காக அல்ல— அவர்களின் சுய காரியத்துக்காகவாம்! அதை மறைத்து அன்புக்காக வந்தது போல் அவர்கள்நாக்கு பசப்புகிறதாம்!

ஃ

தான் ஊருக்கு வந்திருப்பது தெரிந்தும் தன்னைப்பார்க்க வரவில்லை யென்று கோபங் கொள்பவன், அதற்குப் பிறகு எத்தனை தடவை அவன் வந்தாலும் தன்னைப் பார்க்க வரவில்லை யென்று கோபப்படமாட்டானும்! தான் வந்தது கூட எவரும் அறியாதபடி இருக்க வைத்துக்கொண்டு தேறி விடுவானும்! கோபம் முதல் தடவையில்தான் வருமாம்!

ஃ

ஒரு சிறு பெண் தன் தகப்பனைப் பார்த்து எப்படியப்பா என்னை உன் வயிற்றில் சுமந்து பெற்ருய் என்று கேட்க, அந்த விவரம் உன் தாயைப் போய்க்கேளு என்று அனுப்பினனும்!

பெண்களுக்கு பெரிய படிப்பு அடுப்பு. மஞ்சள் பூசிக் குளிக்க மாதர் தேடிக் கொள்வது தடுப்பு. ரவிக்கை பாவாடை அவர்கள் உடுப்பு. சிறுமிகள் மேல் வாலிபர் கண்ணேட்டம் வைப்பது தொடுப்பு. சில நாட்கள் கழிந்த பின் பெண்ணுக்கு வயிற்றில் கடுப்பு. ஒன்பது பத்தாம் மாதங்களில் நோகுதென்பாள் இடுப்பு. மருமகளுக்கு மாமி மேல் உண்டாவது சிடுசிடுப்பு. அம்பா ஆயா பலுக்குரு—நல்ல காலம் இனி பிறக்குது என்பான் குடு குடுப்பு. சிறையிலிருப்பவனை ஜாமீன் கொடுத்து மீட்பது விடுப்பு. சில தனவந்தர்கள் ஏழைகளைத் திட்டிப் பேசுவது மிகு எடுப்பு!

ஃ

பிதுர்லோகம் எங்கேயிருக்கிறதென்று விகடனை ஒருவர் கேட்டதற்கு அது புரோகிதரின் வயிற்றுக்குள் இருக்கிறதென்று சொன்னனும்!

ஃ

தேவை! தேவை! உலகத்தில் புருஷனைக் கட்டிக்கொண்டு அவனுடன் எந்த நேரமும் எதிர்த்துச் சண்டை செய்கிறவர்களாயும், அடிக்கடி தாய்வீடு ஓடுகிறவர்களாயும் இருக்கிற மாதர்கள் இரண்டு டஜனும், வீண் வார்த்தையாடி வம்புசண்டை வளர்க்கிற மாதர்களாக ஒரு டஜனும், ஒரு பங்களா கட்ட அஸ்திவாரக் கல்லுகளுக்குப் பதிலாக அம்மாதர்களைப் போடவேண்டுமாம். பிரியமுள்ள பெண்கள் ஓடிவருகிற மோட்டார் பஸ்ஸுக்கு எதிரில் நின்று மனு கொடுத்துத் தெரிந்துகொள்ளவும்.

ஃ

மில்லின்ஸ் ஆகாரம்போல் கை படாமல், எதிலும் மாட்டிக்கொள்ளாமல், அபிப்பிராயம் மட்டும் மஹாமேதாவித்தனமாய் ஒருமுழ நீளம்கூற முன்வந்துவிட்டுஜனத்தலைவராவதில் சென்னைதான் முதல் நெம்பராம்!

" அமிர்த குணபோதினி "

பிரமோதூத வருஷத்திய சித்திரை மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை.
				[சூன்யதிதி அஹஸ் 30-42 ஜில்காத்மீ 13உ
சி	13	1	ஞா	○ 13-18, சித் 42-57, மேஷரவி 21-8, கஞ்சி நடபாவி,
அ-ம	14	2	தி	பிர 9-58, ஸ்வா 42-2, துவிதியாதிதி, சுசீந்திரம் உத்ஸவம். [மீன குஜன் 17-13.
ம-சி	15	3	செ	துவி 7-59, விசா 42-38, திரிதியாதிதி, சேலம் ரதம்,
அ-சி	16	4	பு	திரி 7-35, அநு 44-52, ஸ்ரீபெரும்பூதூர்—திருவல்லிக்கேணி—கருடன், திரிதியை அசுபம்.
பி-சி	17	5	வி	சது 9-18, கேட் 48-41, அஹஸ் 30-49.
அ-பி	18	6	வெ	பஞ் 11-43, மூல 53-58, திருநீர்மலை கருடன், கரிநாள்
சி	19	7	ச	ஷஷ் 15-59, பூரா 60-0, ஸப்தமிதிதி, ஸப்தமி அசுபம்.
சி-அ	20	8	ஞா	ஸப் 21-17, பூரா 0-23, அதிதி, ரிஷபாயனம்—49-7, திருவல்லிக்கேணி, திருநீர்மலை, ஸ்ரீபெரும்பூதூர், ரதம்.
ம-அ	21	9	தி	அஷ் 27-13, உரா 7-27, அஷ்டமி திதி, சனிவக்ரம், நட
சி	22	10	செ	நவ33-11, ஶ்ரவ 14-45, அஹஸ் 30-58. [ராஜாபிஷேகம்
பி-சி	23	11	பு	தச 38-35, அவி 21-44, ரிஷப புதன் 44-26.
ம-சி	24	12	வி	ஏகா 43-1, சத 27-52, ஸர்வைகாதசி, ரிஷபசுக்ரன் 33-16,
சி	25	13	வெ	துவா 46-7, பூட் 32-50. [திருநாவுக்கரசர்.
சி-பி	26	14	ச	திர 47-47, உட் 36-21, பிரதோஷம். [அஹஸ் 31-4
அ-சி	27	15	ஞா	சசி 47-58, ரே 38-24, மாஸ சிவராத்திரி, கரிநாள்.
சி	28	16	தி	● 46-45, அசு 39-5,. சோமவார அமாவாசை.
சி	29	17	செ	பிர 44-15, பர 38-31, வைசாக சுத்தம்.
அ-சி	30	18	பு	துவி 40-42, கிரு 36-51, கிருத்திகை, துவிதியை அசுபம்.
உ-ம	1	19	வி	திரி 36-16, ரோ 34-20, ஜில்ஹேஜ்மீ 1உ குறவஞ்சி நாடகம், ஸ்ரீ பரசுராம ஜயந்தி.
சி	2	20	வெ	சது 31-12, மிரு 31-10, அஹஸ் 31-13 [கத்திரிஆரம்பம்.
சி	3	21	ச	பஞ் 25-37, ஆரு 27-35, ஸ்ரீசங்கர ஜயந்தி, பஞ்சமி திதி,
சி	4	22	ஞா	ஷஷ் 20-0, புந 23-44, திதி துவயம், திருமுலைப்பால், திருவள்ளூர் கருடன்.
சி	5	23	தி	ஸப் 14-12, பூச 19-56, அஷ்டமிதிதி, திருக்கச்சியூர் ரிஷபவாஹனம்.
சி	6	24	செ	அஷ் 8-35 ஆயி 16-15.
சி-அ	7	25	பு	நவ 3-10, உப 54-58, மக 12-47, திருவையார் கோரதம்.
சி-ம	8	26	வி	ஏகா 53-37, பூர 9-45, திருவள்ளூர் ரதம் [அஹஸ் 31-19.
சி-அ	9	27	வெ	துவா 49-41, உத் 7-16, வாதர் அவதார உத்ஸவம், கஞ்சி கச்சிபேசுரர்,—மதுரை—ரதம், புதன் வக்ரம்.
ம	10	28	ச	திர 46-32, ஹஸ் 5-23, பிரதோஷம், சித்திரா தீர்த்தம்,
சி	11	29	ஞா	சசி 44-17, சித் 4-19, ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி. [மதுரகவி.
அ-ம	12	30	தி	○ 43-4, ஸ்வா 4-13, சித்திராபூர்ணிமை, பூர்ணிமா திதி, அஹஸ் 31-26, ஸ்ரீ சித்திரகுப்தர் கல்லியாணம்.
ம-சி	13	31	செ	பிர 43-5, விசா 5-12, பிரதமை திதி, கஞ்சிவரதர்கருடன்

(இங் column, vertical labels: மேஷதமீ (4—28); 1930 ஸ்ரீ மே)

செ	கு, ரா	பு. சு, கு,	
	15உக்கு ராசி.		
ச		கே	

" அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை. 1930.